ASIRVATHAM

# ஆசீர்வாதம்

JULY 2012

Rs.50/=



நல்ல பாதை நித்திய வாழ்வின் வழி

நம்பிக்கைகள் மூன்று

குழந்தையை மீட்டுத் தந்த குழந்தை இயேசு

ஏழைகளின் வாழ்வு மலர...

அரசருக்கெல்லாம் அரசராய்...

உங்கள் வேதனை மகிழ்வாய் மாறும்

ஹல்ஃப்ஸ்டோர்ப் அனைத்துப் புனிதர்கள் தேவாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசீர்வாதம்



## கிறிஸ்துவை அணிந்து கொள்ளுங்கள்

உள்ளும் புறமும் உங்கள் உயிரிலும் கிறிஸ்துவை உடைமையாக்கிக் கொள்ளுங்கள். அன்பான வழியையும், நீதியான செயல்களையும் அவர் உங்களுடையதாக்குவார். அமைதியிலும், ஆபத்திலும் அவர் உங்களுடன் துணை இருப்பார் என்பதில் பூரண விசுவாசம் கொள்ளுங்கள். ஊனத் தைக் குணப்படுத்தும் விசேட பிரார்த்தனைக் கூடத்திற்குச் செல்லும் ஊனமுற்ற சிறுவன் தாம் அப்போதே குணமடைந்து விட்டதைப் போன்ற மகிழ்ச்சியிலும், நூறு சத நம்பிக்கையிலும் தேவாலயத்திற்குள் செல்கின்றான். தனது பெற்றோருடன் அவன் பிரார்த்தனை முடிந்து வெளியில் வரும் பொழுது, ஒரு மான் குட்டியைப் போன்று துள்ளிக் குதித்து, தம் உடலில் ஊனமிருந்த தடயமே தெரியாத அளவிற்கு உற்சாக மாய் ஓடி வந்தான்.

உண்மையான விசுவாசத்தோடு கூடிய பிரார்த்தனைக்கு தேவ மைந்தன் ஒருபோதும் செவிமடுக்கத் தவறியதில்லை. மனிதர்களின் துன்பங்களையும், ரோகங்களையும், ஊனங்களையும் களைவதில் அன்பின் நேசர் எப்போதும் பிரியமுடையவராய் இருக்கிறார் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். நம் அன்னையாய், தந்தையாய், நண்பராய், ஊழியராய், இருந்து நம்மை என்றென்றும் வழி நடத்துகின்ற ஆண்டவரை நீங்கள் அணிகின்ற ஆடையைப் போல் உங்கள் மீது எப்போதும் நம்பிக்கையுடன் அணிந்து கொள்ளுங்கள்.

- ஆசிரியர்



**Publisher :**

Express Newspapers (Ceylon) Limited
185, Grandpass Road, Colombo - 14. Srilanka
Tel: +94-117-322700 (30 Lines)
Fax: +94-112-439987 website: www.virakesari.lk



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுள் நினைத்தால் எல்லாம் கைகூடும் 24

கிறிஸ்துவுக்காக யாவற்றையும் துறந்த பரி. குவின்டின் 42

சாஸ்திரியாரின் குறை தீர்த்த ஆண்டவர்! 46

இருந்தாலும், இல்லா விட்டாலும் ...! 26

மன்னியாமை விலங்கு அகற்ற... 50

உண்மை ஊழியம் செய்திட வரமருளும்...! 58

தவறு யாருடையது? ......... 52

பதின்மூன்றாம் போப் ........ 60

கனவு நனவானது .......... 62




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேவத்தை பேராலயத்தில் அருள்பாலிக்கும் தேவ தாய்!

உலகளவில் மரியன்னையின் தேவாலயங்கள் கணக்கில் அடங்காதவை. உலக நாடுகள் பலவற்றில் அன்னையின் எத்தனையோ அற்புதங்கள் அவ்வப்போது நிகழ்ந்து வருவதையும் நாம் அறியக்கூடியதாக இருக்கின்றது.

இலங்கையின் புறநகர்ப்பகுதியான றாகமையிலுள்ள தேவத்தையில் கோயில் கொண்டிருக்கும் அன்னையின் ஆலயம் பிரபலமானது. இது இலங்கையிலுள்ள கத்தோலிக்க மக்களின் பிரசித்திபெற்ற யாத்திரைத் தலமாகவும் திகழ்கின்றது.

அன்னையின் இத்திருத்தலம், என்ன நோக்கத்துக்காகக் கட்டப்பட்டது என்று அறிவதில் நமக்கு ஆர்வம் அதிகமாகவே உள்ளது. இது நேர்த்திக்காகக் கட்டப்பட்ட ஒரு தேவாலயம் என்றால் ஆச்சரியமாக இல்லையா?

நாட்டை போரிலிருந்து காப்பாற்றுமாறு கோரி, அன்னைக்கு நேர்த்தி வைக்கப்பட்டுக் கட்டப்பட்டது இவ்வாலயம்.

எமது இலங்கைத் திருநாடு, 1505 முதல் 1948 வரை வல்லரசுகளுக்கு அடிமைப்பட்டிருந்தது. அக்காலத்தில் வல்லரசுகளின் இரண்டாவது உலக மகா யுத்தம் ஆரம்பித்தது.

இந்த யுத்தம் முழு உலகத்திற்கும் அழிவையும், அனர்த்தத்தையும் கொண்டு வந்தது. இதற்கு நம் சின்னஞ்சிறிய நாடு மட்டும் விதிவிலக்காகி விடுமா? எம் நாடும் யுத்த அனர்த்தத்தினால் சீரழிந்தது.

இந்நிலையில், 1942ஆம் ஆண்டு ஜப்பான், இலங்கை மீது குண்டுத்தாக்குதல் நடத்த ஆயத்தமான விடயம் நம் நாட்டவருக்கு எட்டியது. இதனை அறிந்த அன்றைய கொழும்பு மறை மாவட்டப் பேராயராக இருந்த பேரருட்திரு எம்.மெசோன் ஆண்டகை நமது நாட்டை யுத்த அழிவிலிருந்து காப்பாற்றுமாறு அன்னையிடம் மனதுருக வேண்டினார். அதன்படியே, ஜப்பானியரின் குண்டுத்தாக்குதலிலிருந்து நாடு காப்பாற்றப்பட்டது.

அவ்வாறு காப்பாற்றப்பட்டால், அன்னைக்கு ஆலயம் அமைப்பதாக தேவ அன்னையிடம் அவர் வைத்த நேர்த்திக் கடனாகக் கட்டப்பட்டதே தேவத்தை திருத் தேவாலயம்.

இலங்கை அன்னையின் தேசிய பெசிலிக்காவாக இன்று இத்தேவாலயம் திகழ்வதற்கும் அன்னையின் அருளாசியே காரணம் என்றால் அது மிகையல்ல.

தேவ அன்னை எமது நாட்டுக்குக் காட்டிய அளப்பரிய அன்பின் நன்றியறிதலாக றாகமை தேவத்தையில் பெசிலிக்கா தேவாலயம் அமைக்கும் வேலைகள் இறையருளால் ஆரம்பமாகின.

1950 ஜூலை 15ஆம் திகதி ஆலய கட்டட வேலைகள் மங்களகரமாக ஆரம்பித்து வைக்கப்பட்டன. அதி. வந்தனைக்குரிய தோமஸ்கூறே ஆண்டகை, உட்பட மற்றும் பல ஆயர்கள் இவ் வைபவத்தில் கலந்து கொண்டனர்.

1950 நவம்பர் 14ஆம் திகதி பெசிலிக்கா கட்டடத்திற்கான அத்திவார பணிகள் ஆரம்பமாயின. அன்றிலிருந்து ஆலய வேலைகள் நிறைவுறும் வரை இலங்கை முழுவதிலுமுள்ள கத்தோலிக்கர் அனைவரும் தமது உழைப்பாலும், பண உதவிகளாலும் பெசிலிக்கா தேவாலயத்தைக் கட்டியெழுப்ப பரந்த மனதுடன் முன்வந்தனர்.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வத்திக்கான் செய்திகள்

## குடும்ப மாநாட்டில் திருத்தந்தையின் உரை

அடுத்த அனைத்துலக குடும்ப மாநாடு அமெரிக்க ஐக்கிய நாட்டு பிலடெல்ஃபியாவில் 2015ஆம் ஆண்டு நடைபெறும் என அறிவித்தார் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட்.



இத்தாலியின் மிலான் நகரில் திருச்சபையால் ஏற்பாடு செய்த அனைத்துலக குடும்ப மாநாட்டில் 150 நாடுகளிலிருந்து கலந்து கொண்ட சுமார் பத்து இலட்சம் விசுவாசிகளுக்கு நிறைவேற்றிய திருப்பலியின் இறுதியில் மூவேளை செப உரை வழங்கிய திருத்தந்தை, மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை இடம்பெறும் குடும்ப மாநாடு 2015இல் பிலடெல்ஃபியாவில் இடம்பெறும் என்றார்.

மேலும், பெருந்துன்பங்களை அனுபவிக்கும் குடும்பங்களுடன் எப்பொழுதும் தோழமையுணர்வு கொண்டு வாழுமாறும், நெருக்கடிகளால் பாதிக்கப்பட்டுள்ள ஏழைக் குடும்பங்களுக்குப் பணக்காரக் குடும்பங்கள் உதவுமாறும் திருத்தந்தை கேட்டுக்கொண்டார்.

மனிதரை மதித்தல், நன்றிமனப்பான்மை, நம்பிக்கை, பொறுப்பு, ஒத்துழைப்பு, ஒருமைப்பாடு போன்ற சமூகப் பண்புகளின் முதல் கல்விக்கூடமாக குடும்ப வாழ்வு அமைந்துள்ளது என்பதையும் சுட்டிக்காட்டினார் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட்.

உரையாடலை வளர்த்து, ஒருவர் ஒருவரின் கண்ணோட்டத்தை மதித்து, சேவை செய்வதற்குத் தயாராக இருந்து, பிறர் தவறும் போது பொறுமை காத்து, பிறரை மன்னித்து, மன்னிப்புக் கேட்டு, மோதல்கள் ஏற்படும்போது அறிவு மற்றும் தாழ்மைப் பண்பால் அவற்றைச் சமாளித்து, பிற குடும்பங்களுக்குத் திறந்த மனதாக இருந்து, ஏழைகள்மீது அக்கறை காட்டி, சமுதாயத்தில் பொறுப்புள்ளவர்களாய் வாழ்வதன் தேவையையும் வலியுறுத்தினார் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட்.

## குவாதமாலா கர்தினால் மறைவுக்கு திருத்தந்தை இரங்கல்

மத்திய அமெரிக்க நாடான குவாதமாலா கர்தினால் ரொடொல்ஃபோ கெசாதா தொருனோ இறைபதம் அடைந்ததையொட்டி தனது அனுதாபங்களைத் தெரிவிக்கும் இரங்கல் தந்தியை அனுப்பியுள்ளார் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட்.

குவாதமாலாவின் சந்தியாகோ நகரின் முன்னாள் பேராயராகிய கர்தினால் கெசாதா தொருனோ அவர்கள் அகிலத் திருச்சபைக்கும், தலத்திருச்சபைக்கும் நாட்டுக்கும் ஆற்றிய அருஞ்சேவைகளைப் பாராட்டியுள்ள திருத்தந்தை, அவரின் ஆன்மா நிறை சாந்தி



யடையத் தான் செபிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

குவாதமாலாவின் 36 வருட உள்நாட்டுச் சண்டை முடிவுக்கு வருவதற்கு இடைநிலை வகித்த கர்தினால் கெசாதா தொருனோவின் பங்கு குறிப்பிடும்படியானது. 1990களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந் நாட்டில் அமைதியைக் கட்டியெழுப் புவதற்கும் இவர் முக்கிய அங்கம் வகித்தார்.



''தூய்மையிலும் தங்களது சொந்த வாழ்க் கையிலும் தங்களது அழைப்பைக் கண்டுணரும் உண்மையான விசுவாசமுள்ள கிறிஸ்தவர்களை நாம் அதிகமாகக் கொண்டிருக்கும்வரை மனி தாபிமானமும் நீதியும் நிறைந்த சமுதாயத்தை நாம் கொண்டிருப்போம்'' என்று சொல்லியிருப்பவர் இறந்த கர்தினால் கெசாடா தொருனோ.

அண்மையில் இறைபதம் சேர்ந்த கர்தினால் கெசாதா தொருனோ, 2003ஆம் ஆண்டில் அருளாளர் திருத்தந்தை 2ஆம் ஜோன் போல் அவர்களால் கர்தினாலாக உயர்த்தப்பட்டார். கடந்த மார்ச் 8ஆம் திகதி தனது 80ஆவது வயதை நிறைவு செய்துள்ளார் கர்தினால் கெசாதா தொருனோ.

## உலகின் பசியைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுக்க கரித்தாஸ் அழைப்பு

உலகில், பசியால் ஒவ்வொரு 12 வினாடி களுக்கும் ஒரு குழந்தை இறக்கும்வேளை, பசிக்



கொடுமை தவிர்க்க முடியாதது அல்ல எனவும், இதற்கு சமூக, பொருளாதார மற்றும் அரசியலே காரணம் எனவும் அனைத்துலக கரித்தாஸ் நிறு வனத் தலைவர் கர்தினால் ஒஸ்கார் ரொத்ரி குவெஸ் மாராதியாகா கூறினார்.

''பசியற்ற வருங்காலம்'' என்ற தலைப்பில் ஒஸ்ட்ரியாவின் தலைநகர் வியன்னாவில் கடந்த மாத முதல்வாரத்தில் அனைத்துலக கரித்தாஸ் நிறு வனம் நடத்திய கருத்தரங்கில் உரையாற்றிய கர்தி னால் மாராதியாகா, உலகில் பசியால் வாடும் சுமார் 92 கோடியே 50 இலட்சம் மக்களின் பசி யைப் போக்குவதற்கு உலக அளவில் தீர்வுகள் காணப்படவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

பிரேசில் நாட்டு ரியோடிஜெனிரோவில் நடை பெறவிருக்கும் ஐ.நா.மாநாட்டில், உணவுப் பாது காப்பு குறித்த விவகாரம் முக்கிய அங்கம் வகிக்க வேண்டுமென்றும், உலகின் பசியைப் போக்குவதற்கு உலகத்தலைவர்கள் நடவடிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுக்கு மாறும் கரித்தாஸ் தலைவர் அழைப்பு விடுத்தார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடிகளைக் களைவதற்கு வளர்ச்சியடைந்த நாடுகள் தீவிரமாய் முயற்சித்து வரும் வேளை, சுமார் 100 கோடி மக்களுக்கான உணவுப் பாதுகாப்புக்கும் உலகின் பசியை அகற்றுவதற்கும் அந்நாடுகள் முயற்சி எடுக்குமாறும் கர்தினால் மாராதியாகா வலியுறுத்தியுள்ளார்.

## நைஜீரிய அசம்பாவிதங்களால் திருச்சபை அதிர்ச்சி

**- ஆயர் பேரவையின் தலைவர்**




கடந்த மூன்றாம், நான்காம் திகதிகளில் நைஜீரியாவில் நிகழ்ந்த துயர நிகழ்வுகள் திருச்சபையை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது என்று நைஜீரிய ஆயர் பேரவையின் தலைவர் கூறினார்.

லாகோஸ் நகருக்கருகே ஏற்பட்ட விமான விபத்தில் 153 பேர் கொல்லப்பட்டனர், இதைத் தொடர்ந்து, மறுநாள் போச்சி நகரில் வாகன வெடிகுண்டு மூலம் ஒரு கிறிஸ்தவக் கோவில் தாக்கப்பட்டதில் 15 பேர் கொல்லப்பட்டனர். இவ்விரு நிகழ்வுகள் குறித்து ஊடகங்களுக்கு பேட்டி அளித்த நைஜீரிய ஆயர் பேரவைத் தலைவரும், ஜோஸ் பேராயருமான இக்னேஷியஸ் அயோ கைகமா, நைஜீரியாவில் தொடந்து நிகழும் தீவிரவாதத் தாக்குதல்களும், ஆயுதம் தாங்கிய கொள்ளைகளும் நாட்டுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் வன்முறைகள் என்று கூறினார்.

நாட்டில் அமைதி நிலவுவதற்காக நடைபெற்ற நாடுதழுவிய கத்தோலிக்கத் திருப்பயணத்தில் கலந்து கொள்ள பேராயர் கைகமாவும் இன்னும் மற்ற ஆயர்களும் தலைநகர் அபுஜாவுக்கு வந்திருந்ததாகவும், இத்திருப்பயணத்தின் இறுதியில் ஆயர்கள் அரசுத் தலைவர் குட்லக் ஜொனாதன் அவர்களைச் சந்தித்ததாகவும் பேராயர் தன் பேட்டி யில் குறிப்பிட்டுள்ளார்.

அரசுத் தலைவருடன் ஆயர்கள் மேற்கொண்ட சந்திப்பில் நாட்டின் பாதுகாப்பு குறித்த பல்வேறு விடயங்கள் பேசப்பட்டன என்றும், இச்சந்திப்பு பயனுள்ளதாக அமைந்தது என்றும் பேராயர் கைகமா தெரிவித்தார்.



## குருக்கள், இருபால் துறவியரின் வாழ்க்கையில் செபம் முக்கியம்

அருட்பணியாளர்கள் மற்றும் இருபால் துறவிகளின் அன்றாட வாழ்க்கையில் செபத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட்.

ஏழாவது குடும்ப மாநாட்டை சிறப்பிப்பதற்காக இத்தாலியின் மிலான் நகரத்திற்குச் சென்றுள்ள திருத்தந்தை, அருட்பணியாளர்கள் மற்றும் இருபால் துறவிகளை மிலான் பேராலயத்தில் சந்தித்து உரையாற்றியபோது இவ்வாறு கூறினார்.

கிறிஸ்துவின்மீது அன்பு கொண்டு வாழ்வது அனைத்துக் கிறிஸ்தவர்களுக்கும் முக்கியம் என்றாலும், கன்னிமை வாழ்வை ஏற்றுள்ள குருக்களுக்கும் துறவிகளுக்கும் இது தனிப்பட்ட விதத்தில் இன்றியமையாதது என்று கூறினார் திருத்தந்தை.

இச்சந்திப்புக்குப் பின்னர், உறுதிபூசுதல் திருவருட்சாதனத்தை அண்மையில் பெற்ற மற்றும் பெறவிருக்கும் இளம்வளர் பருவத்தினரைச் சந்தித்து உரையாற்றிய திருத்தந்தை, இயேசுவின் நற்செய்திக்கு ''ஆகட்டும்'' என்று சொல்லி அதனை ஏற்றுக் கொண்டவர்கள் வாழ்க்கையில் தூயஆவியின் வியத்தகு வல்லமை எவ்வாறு செயல்படுகின்றது என்பது குறித்து எடுத்துச் சொன்னார்.

ஞானம், அறிவு, ஆலோசனை, உறுதி, விமரிசை, பக்தி, தெய்வபயம் ஆகிய தூய ஆவியின் ஏழு கொடைகள் பற்றியும் விளக்கினார் திருத்தந்தை.

அன்பு வாசகர்களே! உங்கள் கதைகள், கட்டுரைகள் மற்றும் சபை நிகழ்ச்சிகளை எங்களுக்கு அனுப்புங்கள்.
**'ஆசீர்வாதம்'** பற்றிய தங்களின் எண்ணங்களையும் எங்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.
முகவரி:
**ஆசீர்வாதம்**
12-1/1, செல். செபஸ்தியன் மாவத்தை, வத்தளை.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புனிதர் டொன் பொஸ்கோவின் அழியா வலக்கரம்



இளைஞரின் தந்தை என்று அழைக்கப்படும் புனித டொன்பொஸ்கோ, நடமாடும் புனிதராக இம் மண்ணில் வாழ்ந்து 31 ஜனவரி 1888 இல் விண்ணில் ஓர் இளஞ்சூரியனாக உதயமானார்.

நம் தந்தை பொஸ்கோ 1929ஆம் ஆண்டு முக்தி பேறு பட்டம் பெற்ற பொழுதுதான் அவரது வலக் கரம் அழியாமல், தசைநார்களோடு இருப்பதைக் கண்டார்கள். ஓயாது அனைவரையும் ஆசீர்வதித்து, இளைஞர்களை அணைத்த நம் புனிதரின் கரம் இன்றும் அழியாமல் நம்மை ஆசீர்வதித்துக் கொண் டிருக்கிறது.

நம் டொன் பொஸ்கோவின் கரம் 132 நாடுகளில் வலம் வந்து கொண்டிருக்கிறது. முதன் முதலாக 25 ஏப்ரல் 2009இல் இத்தாலியிலுள்ள தூரின் நகரத்தி லுள்ள வல்தோகா என்னும் சலேசிய இல்லத்திலி ருந்து புனிதரின் வலக்கரம் புறப்படத் தொடங்கியது.

இவ்வலக்கரத்தின் வருகை, உலகமெங்கும் பல ஆயிரக்கணக்கான மக்கள் புனிதரின் ஆசீரைப் பெற ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல பாதை
## நித்திய வாழ்வின் வழி

பாட்டுப் பாடிக்கொண்டு மகிழ்ச்சியாக நடந்து சென்றான் கிறிஸ்தியான். அவன் சென்ற பாதையின் இருபுறத்திலும் இரட்சிப்பு என்ற சுவர்கள் இருப்பதைக் கண்டேன். உற்சாகமடைந்தவனாக முதுகுச் சுமையோடு ஓடத் தொடங்கினான் கிறிஸ்தியான்.

ஓர் உயரமான இடத்தை அடைந்தான் அவன். அங்கே மரத்தாலான ஒரு சிலுவை நிறுத்தப்பட்டிருந்தது. அதனருகே காலியான ஒரு கல்லறை.

கிறிஸ்தியான் சிலுவையின் அருகே வந்தவுடன் அவன் முதுகிலிருந்த சுமை 'படாரென்று' அறுந்து கீழே விழுந்தது. உருண்டுபோய் திறந்திருந்த கல்லறைக்குள் சென்று மறைந்துவிட்டது. அதன் பிறகு அவன் அந்தச் சுமையைப் பார்க்கவில்லை.

'அவரது பாடுகளால் எனக்கு விடுதலை கிடைத்தது. அவரது மரணத்தால் எனக்கு வாழ்வு கிடைத்தது' என்று கூறி மகிழ்ச்சியுடன் துள்ளிக் குதித்தான் கிறிஸ்தியான்.

வியப்போடு சிலுவையைப் பார்த்தவனாக அங்கேயே நின்று கொண்டிருந்தான்.

### ஆண்டவரே உம்மை வணங்குகிறேன்

★ கடவுளே, வானங்களுக்கு மேலாக நீர் உயர்த்தப் பெறுவீராக.

**- உம்மை வணங்குகிறேன்**

★ கடவுளே நீர் எனக்கு அரண், எனக்குப் பேரன்பு.

**- உம்மை வணங்குகிறேன்**

அவன் கண்களிலிருந்து நீர் வழிந்தது.

அப்போது பிரகாசமான ஆடையணிந்த மூவர் வந்து, 'உனக்குச் சமாதானமுண்டாகட்டும்' என்று கிறிஸ்தியானை வாழ்த்தினார்கள்.

முதலாமவர் 'உன் பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்பட்டன' என்றார். இரண்டாமவர் அவனது கந்தை ஆடைகளைக் களைந்து புதிய வெண்ணங்கியை அவனுக்கு உடுத்தினார். மூன்றாமவர் அவன் நெற்றியில் ஒரு



அடையாளத்தைப் பதித்து, அவன் கையில் முத்திரையிடப்பட்ட சுருள் ஒன்றைக் கொடுத்தார். 'நீ போகும் பாதையில் இதைப் படித்துப்பார். நீ மோட்ச வாயிலை அடையும் போது இந்தச் சுருளைக் கண்டிப்பாகக் கொடுக்கவேண்டும்' என்று கட்டளையிட்டார்.

மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தபடி எந்த விதமான முதுகுச் சுமையும் இல்லாதவனாகத் தன் பயணத்தைத் தொடர்ந்தான் கிறிஸ்தியான்.

அந்த இடுக்கமான பாதையின் இடதுபக்கச் சுவற்றில் ஏறிக் குதித்து, கிறிஸ்தியானை நெருங்கும் இருவரை அவன் கண்டான். சம்பிரதாயன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவேஷக்காரன் என்ற இருவருமே அவர்கள்.

அவர்களைக் கண்டவுடன் கிறிஸ்தியான் 'ஐயா, நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்? எங்கே போகிறீர்கள்?' என்று கேட்டான்.

'வீண்பெருமை என்ற ஊரிலிருந்து வருகிறோம். மோட்சத்துக்குச் சென்று



பேரும் புகழும் பெற ஆசைப்படுகிறோம்' என்றார்கள் அவர்கள்.

'ஐயாமார்களே, நீங்கள் மோட்சத்துக்குப் போக வேண்டுமென்று கூறுகிறீர்கள். ஆனால் இடுக்கமான வாசல் வழியே வராமல் குறுக்குப் பாதையில் வருகிறீர்கள். ஒழுங்கை மீறிய உங்களை ஆண்டவர் மோட்சத்துக்குள் நுழைய அனுமதிப்பாரா?' என்று தாழ்மையுடன் சந்தேகம் கிளப்பினான் கிறிஸ்தியான்.

'எங்களுடைய வழி குறுக்குவழிதான். இவ்வாறு வருவது தான் எங்கள் ஊர்மக்களின் பழக்கம். நீயோ இடுக்கமான வாசல் வழியே வந்தாய். நாங்களோ சுவர் ஏறி வந்தோம். ஆனால் இருவரும் ஒரே பாதையில் தான் செல்கிறோம்' என்று கூறினார்கள் அந்த இருவரும்.

'நானோ ஆண்டவரின் கட்டளைப்படியே நடக்கிறேன். நீங்களோ உங்கள் சுயவிருப்பத்தின்படி நடக்கிறீர்கள். ஆண்டவர் ஏற்கெனவே உங்களைக் கள்வர்கள் என்று தீர்ப்பளித்திருப்பார்' என்று உறுதியாகக் கூறினான் கிறிஸ்தியான்.

'நாங்கள் எங்கள் வழியில் செல்லுகிறோம். நீ உன் வழியைப் பார்த்து நட' என்று கூறிவிட்டார்கள் இருவரும். மூவருமாக அந்தப் பாதையில் தொடர்ந்து நடந்து சென்றார்கள். அவர்கள் இருவரும் மீண்டும் கிறிஸ்தியானோடு விவாதத்திற்கு வந்தார்கள்.

'நாங்களும் விதிகளைக் கடைப்பிடித்து நடக்கிறவர்கள் தான். எங்களுக்கும் உனக்கும் ஒரே வித்தியாசம்தான். நீ வெண்ணங்கி அணிந்திருக்கிறாய். எங்களுக்கு இல்லை. அவ்வளவுதான்' என்றார்கள்.

'ஆண்டவர் அளித்த அங்கி இது. நான் மோட்ச வாசலை அடையும்போது இந்த அங்கியின்மூலம் அவர் என்னை அடையாளம் கண்டு கொள்வார். என் நெற்றியில் ஓர் அடையாளம் போடப்பட்டுள்ளது. இதோ, இந்த முத்திரையிடப்பட்டுள்ள சுருளை நான் வாசலண்டை கொடுக்கவேண்டும். நீங்கள் இடுக்கமான வாசல் வழியே வராதபடியால் உங்களுக்கு இவை கொடுக்கப்படவில்லை' என்றான் கிறிஸ்தியான்.


ஒன்றுமே பதில் கூறாத அவர்கள் கிறிஸ்தியானைப் பார்த்துக் கேலியாகச் சிரித்தார்கள்.

மூவரும் கடினமலை என்ற மலையின் அடிவாரத்தை அடைந்தார்கள். அங்கே ஒரு நீரோடை காணப்பட்டது. அவர்கள் சென்ற பாதையின் இடது புறமும், வலது புறமும் இரண்டு பாதைகள் பிரிந்து சென்றன. ஆனால் இடுக்கமான பாதையோ அவற்றின் நடுவே மலையுச்சியை நோக்கிச் சென்றது.

கிறிஸ்தியான் அந்த நீரோடைக்குச் சென்று தெளிந்த நீரைப் பருகினான். களைப்பு நீங்கியவனாக இடுக்கமான பாதையின் வழியாக மலை யேறத் தொடங்கினான்.

- தொடரும்

- எச்.பி. ராஜ்குமார்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னங்க நீங்க நாளைக்கு வருஷம் பொறக்கப் போவது மசமசனு நின்னு கிட்டிருக்கீங்க. போங்கங்க போய் சாமான்களை வாங்கிக்கிட்டு வாங்க." புரு ஷனை விரட்டினாள் சாரா.

"இந்தாப் புறப்பட்டிட்டேன் சாரா. மத்த தெல்லாம் ரெடி பண்ணு. கேக்கு மூணு கிலோ போதுமுல.

"போதும் போதும். நா தான் முருக்கு அதிரசமெல்லாம் செய்றேன்ல. மறக்காம ரோஜா நெய் மட்டும் வாங்கிவிட்டு வந்திருங்க."

"ஆகட்டும்" வெளியே புறப்பட்டான் ராயர். மகன் ரமேஷ் "அப்பா நானும் வாறேன்னு" ராயரின் கால்களைக் கட்டிப் பிடித்து அழுதான். "இங்க பாருடி. ரமேஷ் வாறேனு அழுறான்." "சரி சரி கூட்டிக்கிட்டுப் போங்க. இங்கே இருந் தாலும் என்னை பலகாரம் பண்ண விடமாட் டான்."

பிள்ளையைத் தூக்கிக் கொண்டு காரைக்குடிக்குச் சென்று வாங்க வேண்டிய சாமான் களையெல்லாம் போட்ட லிஸ்ட்படி ஒவ் வொன்றாக வாங்கிச் சேர்த்தான் ராயர். தோளில் பையனை வைத்துக் கொண்டு கையில் கட்டைப் பையைத் தூக்கிய படி பஸ் ஸ்டாப்புக்கு நடந்து வந்துகொண் டிருந்தான்.



# குழந்தையை மீட்டுத் தந்த குழந்தை இயேசு!

வரும்போதே ராயரை, மதுபானக் கடை சுண்டி இழுத்தது. பஸ் ஸ்டாப் வந்ததும் பெஞ் சில் பையனையும் சாமான்களையும் வைத்து விட்டு பக்கத்திலிருந்த பெட்டிக்கடைக்காரரிடம் பையனையும் இந்தச் சாமான்களையும் கொஞ் சம் பாத்துக்கங்க" என்று சொல்லிவிட்டுப் புறப் பட்டான் ராயர்.

ரமேஷ் நானும் வருகிறேன்' என்று அடம் பிடித்ததும் அவனுக்கு மூக்கு கண்ணாடி வாங்கிக் கொண்டு வருவதாகச் சொல்லி சமாதானப்படுத்தி உட்கார வைத்துவிட்டு சந் துக்குள்ளி ருந்த மதுக்கடைக்குள் நுழைந்தான் ராயர். அங்கே இரண்டு மூன்று 'குடி' மக்கள் சேர்ந்ததும் அவர்களுடன் உல் லாசமாக ஊற்றிக் கொண்டான். போதை எல்லை மீறியதும் தன்னை மறந்தான். பிள்ளையும் சாமானும் பஸ் ஸ்டாப்பில் இருப்பது கூட அவன் நினைவுக்கு வரவில்லை. செல்போனையும் தொலைத்து விட்டான்.

மதுபானக்கடையில் வேலை பார்க்கும் ஒரு பையன் ராயருக்கு பழக்கமானவன் என்ப் தால் தனக்கு வேண்டிய ஒரு ஆட்டோ ரிக்ஷாக் காரரிடம் சொல்லி ராயரை பஸ் ஸ்டாண்டுக்குக் கூட்டிச் சென்று கல்லுப்பட்டி பஸ்ஸில் ஏற்றி விட்டு விட்டு வருமாறு சொல்ல ஆட்டோ ரிக்ஷாக்காரரும் அப்படியே செய்தார்.

பஸ்ஸில் செல்லும்போதும் என்ன நடக்கிற தென்று தெரியாமல் தலையை உருட்டிக் கொண்

## ஆண்டவரே உம்மை வணங்குகிறேன்

★ ஆண்டவரே, ஆண்டு முழுவதும் உமது நலத்தால் முடிசூட்டுகின்றீர்.

**- உம்மை வணங்குகிறேன்**

★ ஆண்டவரே, நீர் எம் கால்கள் இடறவிட வில்லை.


**- உம்மை வணங்குகிறேன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிருந்தான் ராயர். பஸ்ஸில் இருந்த பெரும்பாலா னவர்கள் அவன் ஊர்க்காரர்கள்தான். என்றாலும் யாருக்கும் இவன் பையனோடு சாமான்கள் வாங்கப் போனது தெரியாது என்பதால் யாரும் இதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

மணி ஆறு. கல்லுப்பட்டி பஸ் ஸ்டாண்டில் வலுக்கட்டாயமாக ராயரை கண்டக்டர் இறக்கி விட்டார். சாமான்களையும் பிள்ளையையும் தூக் கிக் கொண்டு வருவது கஷ்டமாகச்சே என்று பஸ் ஸ்டாண்டில் காத்தி ருந்த சாராவுக்கு இது பேரதிர்ச்சி யாக இருந் தது.



''தள்ளாடிக் கொண்டே, ''சாரா... எங் கேடி எம் புள்ள ரமேஷ்'' என்று பினாத்திக் கொண்டிருந்தான் ராயர். சாரா ''மாதாவே ஆண்டவரே... ஏசுவே...'' என்று கதறி அழுதபடியே பஸ்ஸை விட்டு இறங்குபவர்களிடமெல்லாம் 'அன்னே என் புள்ளயப் பார்த்தீங்களா' - 'அக்கா என் புள் ளயப் பார்த்தீங்களா' என்று கேட்டுக் கொண்டிருந்தாள்.

''உம் புருஷனையே ஒரு ஆள் கைத் தாங் கலா பஸ்ஸிலே ஏத்திவிட்டான். அவன் எங்கேடி புள்ளையோட வந்தான்.'' ''உன் புருஷன்தான் மொடாக் குடிகாரன். குடிச்சுப்புட்டு வந்தான்னா இடுப்பிலே வேட்டி இருக்கா இல்லையானு கூட அவனுக்குத் தெரியாது. இவன் ஒரு ஆளுனு... இவனை நம்பி எப்படிடி நீ புள்ளையை அனுப்புனே.'' என்று சாராவைக் கடிந்து கொண்டாள் ஒரு மூதாட்டி.

ஒரு பெரியவர். சாராவைச் சமாதானப்படுத்தி ''குழந்தை இயேசு எப்படியும் உம் புள்ளையக் கொண்டாந்து சேர்த்துருவாரும்மா நம்பிக்கை யோடு இரு. அவசரப்படாதே ஆத்திரப்படாதே. உம் புருஷனுக்கு இன்னும் கொஞ்சம் போதை இறங்கட்டும்.'' ''எங்கே... போனான்... பிள் ளைய எங்கே விட்டானு'' கேட்போம் என்று அமைதிப்படுத்தினார். அதற்குள் இளைஞர் மன்றத்தார் பத்துப் பேர் திரும்பி வரும்போது இதே பஸ்ஸில் ஏறி காரைக்குடி சென்று குழந்தையைத் தேட முற்பட்டனர். அன் பியத்தார் செபத்தில் ஈடுபட்டனர்.

கல்லுப்பட்டி கிராமமே துயரத் தில் மூழ்கியது.

ராயர் போதை தெளிந்து ஓரளவு சில தகவல்களைச் சொன் னான். அந்த விபரங்கள் செல் போனில் கிராம இளை ஞர்களுக்கு அறிவிக்கப்பட்டன. அதை வைத்து எல்லா இடங்களிலும் தேடிப் பார்த்தனர். குழந்தையைக் கண்டு பிடித்தனர். இதற்கிடையில் மிக் கேல் ஆண்டவர் ஆலயத்தி லிருந்து வந்த, ''தொலைந்து போன ரமேஷ் பாலகனை மீட்டுத் தந்த இறைவா உமக்கு நன்றி,'' என்ற நன்றி மன்றாட்டு எல்லோர் மனதிலும் தேனை வார்த்தது. பெரியவர் சொன்னது போலவே குழந்தையை மீட்டுக் கொடுத்து விட்டார் குழந்தை இயேசு.

''இழந்த வாழ்வை மீட்கவா குழந்தை இயேசுவே'' என்று மிக்கேல் ஆண்ட வர் ஆலயத்தில் இருந்து வந்த பாடல் விண்ணைப் பிளந்தது.

இராசி சேவியர்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இறைவனைப் பற்றிய கேள்விகள் எல்லாக் காலகட்டங்களிலும் மனித வாழ்க்கையில் தொடர்ந்துவரும் புரியாத புதிர்கள்.

இறைவன் என்ற ஒரு சக்தி இருக்கத்தான் வேண்டும் என்ற முடிவு, வாழ்க்கை நிகழ்வுகளைப் பார்க்கும்போது மனித மனத்தில் எழுகின்ற உறுதிப்பாடு.

வகை வகையான வண்ண வாழ்வியல்களையும், உயிர்ச் செறிவுகளையும், அண்ட சராசரங்களையும் பிரபஞ்ச சிதறல்களையும் நோக்குகின்ற நேரத்தில் இந்த உறுதிப்பாடு உள்ளொளியாகப் பளிச்சிடுகின்றது.

அத்தனை இயக்கங்களுக்கும் நடுவில் ஒருமைப்பாட்டை ஏற்படுத்துகின்ற ஒரே உண்மை இறைச்சக்திதான் என்பதை அத்தனை அனுபவங்களின் ஆழங்களும் மிகத் தெளிவாக உணர்த்துகின்றன.

இத்தகைய இறைச்சக்தியின் இயல்புகள் என்ன, என்பது பற்றிய ஆய்வு எல்லா நிலைகளிலும் தொடர்கின்ற ஒன்றாக இருக்கிறது.

## ஆண்டவரே உம்மை வணங்குகிறேன்

★ கடவுளே, என் உயிர் உம்மீது தாகம் கொண்டுள்ளது.

**- உம்மை வணங்குகிறேன்**

★ கடவுளே, வறண்டுபோன நிலத்தை மீண்டும் வளமாக்குகின்றீர்.

**- உம்மை வணங்குகிறேன்**

★ ஆண்டவரே, நீர் போற்றி! போற்றி!

**- உம்மை வணங்குகிறேன்**

# மனிதனின் நம்பிக்கை நாளங்கள்!

"ஆதி அந்தம் இல்லாத தனிப்பெரும் ஜோதி; தண்ணரும் வெளிக்குள்ளே அகிலாண்ட கோடியெல்லாம் தங்கும்படி செய்தவன்; மூவா முதலா முற்றினையாய் மூவாளாய் ஒரு தற்பரனாய் இருப்பவன்"-என்றெல்லாம் சமயக் கோடிகள் இறைவனின் இயல்பை விளக்குவதற்கு வார்த்தைகள் தேடிக்கொண்டே இருக்கின்றனர்.

### புராணங்களும் புனைவுகளும்

இறைவனின் இயல்புகள் பற்றி எத்தனை எத்தனை காவியங்கள் இந்தப் பூமியில் வலம் வருகின்றன என்பதை நினைத்தால் வியப்பு நம் கண்களை விரியச் செய்கின்றது. கதைகளாய், புராணங்களாய், சிலைகளாய், ஓவியங்களாய், வழிபாடுகளாய் அவை வலம் வருகின்றன.

இவையெல்லாம் கற்பனைகள் அல்ல; ஆழ்ந்த உண்மையைச் சொல்வதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள். கற்பனைகள் என்றால் களைந்த மேகங்களாய் காலத்தால் சிதறிப் போகும்.

ஆண்டவன் தான் நம்மைப் படைத்தவன் என்பதை ஆணித்தரமாக விளக்க பல்வேறு புராணங்கள் எழுந்திருக்கின்றன. அவற்றில் ஒன்று ஆதாம் ஏவாள் கதை என்ற, விவிலியம் தருகின்ற வியத் தகு காவியம். இந்தக் காவியத்தில் எழுந்தோடும் உயிரோட்டங்கள் ஏராளம்.

இறைவன் தான் நம்மைப் படைத்தவர் என்ற உண்மையை மட்டுமன்று, இறைவனை நோக்கித்தான் நாம் பயணம் செய்கிறோம் என்ற உண்மையையும் இந்தக்கதை இனிதாக எடுத்துக்கூறுகிறது.

ஒன்றுமில்லாமையிலிருந்து உலகைப் படைத்த இறைவன் அந்த உலகத்தின் சிகரமாக மனிதனைப் படைக்கிறார். தமது அதி உன்னதமான வாழ்க்கையில் தம்முடைய படைப்புக்கும் பங்கு தரவேண்டும் என்பதுதான் இறைவனின் உள்நோக்கமாக இருக்கிறது என்பதே அந்தக் கதைசொல்லும் செய்தி.

படைத்த அத்தனை வடிவங்களும், வண்ணங்களும், பிரபஞ்ச உண்மைகளும் 'மனிதன்' என்ற மாபெரும் உயிர் உருவாவதற்குத்தான் உபகரணங்களாக அமைகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மனிதனே மையம்:*

அத்தனை படைப்புக்களும் மனிதனுக்காகவே சிகரம் என்பது ஆண்டவன் வகுத்த நெறி. பூமியில் உள்ள அத்தனை அழகுக் கோலங்களும் மனிதனில் தான் சங்கமிக்கின்றன. இத்தகைய அதிசயமாக உருவெடுத்த மனிதனுக்கு ஒரு நோக்கம் உள்ளூர வைக்கப் பட்டிருக்கிறது. இறைவன் என்ற மாபெரும் சக்தியில் சங்கமிப்பதே அந்த நோக்கம்.

''படைத்தான் படைப்பெல்லாம் மனிதனுக்காக! மனிதனைப் படைத்தான் தன்னை வணங்க'' என்பது தமிழ்மொழி. 'உன்னை அடைந்தால் அன்றி இறைவா! என் உள்ளம் நிறைவு பெறுவதில்லை' என்பது புனித அகுஸ்தினாரின் மொழி.

மனிதன் உருவானது இறைவனின் கரத்தில்! மனிதன் சென்று அடைவது இறைவனின் பாதத்தில்! இறைவனை அடைய வேண்டும் என்ற ஏக்கம் எல்லோருடைய இதயத்திலும் எழுகின்ற வேட்கை. இந்த வேட்கை மனிதனில் எல்லா உயிர்த்துடிப்புகளிலும் வெளிப்படுகிறது. இன்பமாக இருந்தாலும் துன்பமாக இருந்தாலும் அவற்றின் இறுதி எல்லை இறைவன் தான்.

அந்த எல்லையற்ற பேரோளியில் சங்கமிக்க மனிதனுக்குக் கொடுக்கப்பட்ட இயக்க சக்திதான் வாழ்வாய், வளர்ச்சியாய், தாழ்வாய், தளர்ச்சி யாய் மாறி மாறிப் பரிணமிக்கிறது.

*இறைவனை அறிவது*

படைத்தவன், பாதை அமைத்தவன், வளர்ப் பவன், வாழ்வைத் தருபவன் என்று அனைத்திற் கும் காரணமாக அமைந்த இறைவனை அறிவது எப்படி? அவன் மனிதனுக்கு வெளியே இருந்தால் ஆய்வுகள் மூலமாக அறிய முற்படலாம். ஆனால் இறைவன் மனிதனுக்குள்ளே தானே இருக்கிறான். தண்ணீருக்குள் வாழுகின்ற தவளை, தண்ணீர் எங்கே என்று தேடுவது என்ன நியாயம்?

இறைவனை அறிவது என்பதைவிட அனுபவிப்பது என்பது தான் சரியான தேடல். இதை உண ராமைதான் மனிதன் வாழ்க்கையை நெறி தவறி அழைத்துச் செல்கிறது. ஆதி மனிதன் ஆதாம் இறைவனை அனுபவிப்பதை விட்டு விட்டு அறிவதை நோக்கமாகக் கொண்டதால் தான் தனது பேரின்ப வாழ்க்கையை இழந்தான்.

இறைவனை அறிவது என்பதைவிட அனுபவிப்பது என்பது தான் சரியான தேடல். இதை உணராமைதான் மனிதன் வாழ்க்கையை நெறி தவறி அழைத்துச் செல்கிறது. ஆதி மனிதன் ஆதாம் இறைவனை அனுபவிப்பதை விட்டு விட்டு அறிவதை நோக்கமாகக் கொண்டதால் தான் தனது பேரின்ப வாழ்க்கையை இழந்தான்.

இறைவனைப் போல் ஆக வேண்டும், இறைவனைப் போல் படைப்புகளையெல்லாம் அதிகாரம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் தான் ஆதிமனிதனைப் பாவக்குழியில் தள்ளியது.

இறைவன் அறிவைக் கடந்தவன். அறிவால் அவனை அகப்படுத்துவது அறியாமை. அன்பால் மட்டுமே அவனை அகப்பட வைக்க முடியும் என்கிறது விவிலியம். மோசே இறைவனால் அழைக்கப்பட்ட போது அவர் இறைவனிடம் கேட்ட முதல் கேள்வி இதுதான். ''நீர் என்னை இஸ்ராயேல் மக்களிடம் அனுப்புகிறீர். அவர்கள், 'உன் இறைவன் யார்' என்று கேட்டால் நான் என்ன சொல்வது?''

''இருக்கிறவர் நாமே! என்று சொல்'' என்று அனுப்புகிறார் விவிலிய இறைவன். இறைவன் என்றுமே வாழ்பவர். நிரந்தரமானவர். ஆதி அந்தம் இல்லாதவர். மாறாதவர், அவரை அறிந்து கொள்வது என்பது மனிதனுக்கு அப் பாற்பட்ட செயல். இறைவனோடு உறவு கொள்வதே மனிதனால் இயலும் செயல்.

- அருட்தந்தை. க. வலன்டின் ஜோசப்

## ஆண்டவரே உம்மை வணங்குகிறேன்

★ ஆண்டவரே, தாயின் வயிற்றில் இருந்து நீர் என்னைப் பிரித்தெடுத்தீர்.

**- உம்மை வணங்குகிறேன்**

★ உண்மையாகவே கடவுளே, நீர் எவ்வளவு நல்லவர்!

**- உம்மை வணங்குகிறேன்**


★ ஆண்டவரே, நீர் ஒளிமிக்கவர்.

**- உம்மை வணங்குகிறேன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுத்திகரிக்கும் தியானம்

இன்று தியானம் செய்யும் வழக்கம் பரவியுள்ளது. சமயசார்பற்ற விதமாகவும் பார்க்கப்படுகிறது. குறிப்பாக, உடல் இறுக்கங்களை தளர்த்தவும், உள்சுதந்திரம் பெறவும், முழு ஆர்வத்துடன் செயல்படவும், தியானம் செய்வதை பயனுள்ளதாகப் பார்க்கின்றனர். குறிப்பாக, இன்றைய போட்டி நிறைந்த உலகில், தன்னை உயர்த்திக் கொள்ளவும் தன்னையே அமைதிப்படுத்தவும், உள்ளார்ந்த தடைகளிலிருந்து விடுபடவும் தியானம் பயன்படுவதாக கருதப்படுகிறது.



மாறாக, தியானம் நம்மைக் கடந்த நிறை உண்மையோடு நம்மையே ஒன்றிப்பதற்கு வழியாகவும், கடந்து நிற்கும் உண்மையின் வெளிப்பாடுகளைப் பெற்றுக் கொள்ளவும் ஒரு வழியாக அமைகிறது என்பதுதான் உண்மை. ஏனெனில் எல்லாவற்றையும் கடந்து நிற்கும் இறைவன், நம் வாழ்வுச் சூழலில் பல நிகழ்வுகள் வழியாகவும், ஆட்கள் வழியாகவும், பொருட்கள் வழியாகவும் தம்மையே வெளிப்படுத்துகிறார்.

எனவே நம்முடைய வாழ்க்கையின் அனுபவங்களை வைத்துத் தியானத்தைத் தொடங்குவதே முறையானதாகும். இருப்பினும் சிலர் மறைநூலையும், இறை வார்த்தைகளையும் தங்கள் தியானத்தின் தொடக்கமாகவும் பயன்படுத்துகின்றனர். இறை வார்த்தையில் பொதிந்து இருக்கும் மறைபொருளைக்கண்டு, தங்களையே கடவுளுக்குச் சரணாகதி ஆக்குகின்றனர். இதனால் பிறரோடு திறந்த மனதோடு அக்கறை கொள்கின்றனர். இறைவார்த்தை வழியாக தியானம் செய்வோர், தங்களின் உண்மையையும் கண்டுகொள்கின்றனர்.

தியானம் செய்வோர் இறைவார்த்தை ஆழ்ந்து படிப்பதாக மட்டும் கருதாது, அதன் உண்மை பொருளை உணர்ந்து தனிமனித, சமூக உண்மைகளை அறிய முயலவேண்டும். தியான தொடக்கத்தில் கவனத்தை ஒருமுகப்படுத்த ஒரு படம், ஒரு வார்த்தை, ஒரு வாசகம், ஓர் உவமை தொடக்கமாய் இருக்கலாம். ஆனால் தியானம், புலன்களின் அமைதிக்கு இட்டுச் சென்று மனதிலும், இதயத்திலும் ஆழ்ந்த அமைதியை உருவாக்க வேண்டும். அது வாழும் பிரசன்னமாகவும், ஒன்றிப்பாகவும், ஐக்கியமாகவும் உணரப்படுகிறது. இந்த அனுபவத்தில், ஆழ்ந்த மகிழ்ச்சி அமைதி உருவாகிறது. ஆனால் இதில் அதிகநேரம் ஆழ்ந்திருக்க முடியாது. மீண்டும் நாம் வார்த்தைகள், வாசகங்கள், படங்கள் இவைகளைச் சார்ந்து இருக்க வேண்டியிருக்கிறது.

தொடர்ந்து தியானம் செய்பவர்கள், தங்கள் புலன்களின் மேல் சுதந்திர உணர்வு பெறுவர். அதுபோல உணர்வுகளிலும், விடுதலை பெற்ற சுதந்திர நிலையை அடைவர். தியானம் செய்வோர் ஒளிவு மறைவு இன்றி வாழ்கின்றனர். அவர்களின் வாழ்வு பிறருக்குக் கண்ணாடி போல் இருக்கிறது.

தியானம் செய்வோர் எதையும் ஒத்துப் பார்க்க மாட்டார். பிறரைப் பற்றி தீர்வு கூறாத மனநிலை பெறுவர். பல செபமுறைகளையும், பயிற்சிகளையும் கையாண்டு அவைகளை கடவுளுக்கு இட்டுச்செல்லும் வழியாக காண்பர்.

கடவுளோடு இருப்பவர், கடவுளில் எல்லாவற்றையும் பெற்றுள்ளார். உண்மையாக செபிப்போர் கடவுளிடம் கேட்டுக்கொண்டிருப்பதில்லை. மாறாக செபிப்பவரே கடவுளின் விருப்பத்தையும், அவர் சொல்வதையும் கேட்கிறார். தியானிப்பவர் தியானத்தில் தான் விரும்புவதை அடையவேண்டும் என்று எண்ணுவதில்லை. ஏனெனில் தன்னில் இருக்கும் கடவுளின் ஆவியானவரே தன்னில் செபிக்கின்றார். என்பதை அறிகின்றார்.

அன்றாடம் தியானம் செய்து, தினசரி வாழ்வை ஆழ்ந்த அர்த்தம் உள்ளதாக்குவோம்!

- சேவியர் இருதயராஜ், சே.ச


## ஆண்டவரே உம்மை வணங்குகிறேன்

★ ஆண்டவரே, உம் மக்களைப் பாதுகாப்புடன் அழைத்துச் செல்கிறீர்.

**- உம்மை வணங்குகிறேன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உண்மை நிறைந்த வார்த்தைகள்...

முனைவர் மன்ஸாரு என்பவர் ஜப்பானிய அறிவியல் அறிஞராவார். நாம் பயன்படுத்தும் வார்த்தைகளால் தண்ணீருக்குள் பாதிப்பினை ஏற்படுத்த முடியும் என்பதை நிரூபித்திருக்கிறார். முதலில் தண்ணீர் அடங்கியுள்ள நீர் தொட்டியை எடுத்துக் கொண்டார். அவற்றை வார்த்தைகளாலும் இசையாலும் மற்றும் சூழலாலும் மாற்றத்தின் தன்மைக்குரிய மூன்று மணி நேர ஆய்வினை மேற்கொண்டார். தம் ஆய்வில் பூதக்கண்ணாடி *(Microscope)* வழியாக இருளிலும் தெளிவான உருமாற்ற நிலைகளைக் கண்டறிந்துள்ளார். அவையனைத்தையும் புகைப்படங்களாக எடுத்துக்கொண்டார். அவருக்குக் கிடைக்கப் பெற்ற ஆய்வின் பயன்கள் அனைத்தும் மனதில் புத்தொளி வீசிடச் செய்கின்றன.

முதலில் எவ்வித செபமோ அல்லது வார்த்தைகளோ பயன்படுத்தப்படாத நீரின் தன்மையானது பிரிக்கமுடியாத அணுமூலக்கூறாக *(Molecular structure)* ஒழுங்கற்ற நிலையில் *(Disarray)* காட்சியளித்தது. அதே நீரில் செபம் கூறிய பிறகு உற்று நோக்கினால் தம்மை ஆச்சரியமடையச் செய்கின் றது என்று அவர் கூறுகிறார். "காரணம் அந்த நீருக்குள் நற்கருணை கதிர் பாத்திரம் போன்ற உருவமாற்றத்தைக் கண்டேன். உலோகத்தாலான பாத்திரத்தில் இசை எழுப்பி நீரை உற்றுநோக்கும் பொழுது ஒன்றுமில்லாமையிலிருந்து வட்ட வடிவில் புதியதாக ஒன்று உருவாகக் கண்டேன். கர்நாடக இசை மற்றும் கிராமிய நடன இசை அதிர்வலைகளால் தண்ணீரில் விண்மீன்கள் போன்ற வடிவம் பிரகாசமாக ஜொலிப்பதைக் கண்டேன்" என்று கூறுகிறார். இறுதியாக "தண்ணீரே! நான் உன்னை அன்பு செய்கிறேன் என்று கூறியவுடன் தண்ணீரில் வைரக்கற்கள் போன்ற உருவங்கள் ஜொலிப்பதைக் கண்டேன்" என்கிறார் முனைவர் மன்ஸாரு.

## ஆண்டவரே உம்மை வணங்குகிறேன்

★ படைகளின் ஆண்டவரே, உம் உறைவிடம் எத்துணை அருமையானது!

**- உம்மை வணங்குகிறேன்**

★ ஆண்டவரே, உம் மக்களின் பாவங்கள் அனைத்தையும் மறைத்து விட்டீர்.

**- உம்மை வணங்குகிறேன்**

பிரான்சில் உள்ள தூய லூர்தன்னை திருத்தலத்தில் ஊற்றெடுக்கும் தண்ணீரில் ஒருங்கிணைக்கப்பட்டவை போன்று அவை காட்சி தந்தன" என்று சான்று கூறுகின்றார்.

முனைவர் எமாட்டோ அரிசியிலும் ஆய்வினை மேற்கொண்டார். காற்றுப் புகமுடியாத இரண்டு குவளைக்குள் அரிசியை நிரப்பினார். ஒரு அரிசி குவளையின் மேல் "நான் உன்னை அன்பு செய்கிறேன்" என்று எழுதினார். மற்றொரு அரிசி குவளையின் மீது "நீ ஒரு முட்டாள்" என்ற வாசகத்தை ஒட்டினார். முப்பது நாட்கள் அளவாக அரிசி குவளையின் மீது எழுதப்பட்ட வாசகத்தை சொல்லிக்கொண்டே வந்தார். முப்பது நாட்களுக்குப் பிறகு "நான் உன்னை அன்பு செய்கிறேன்" என்று எழுதப்பட்ட அரிசி குவளை வெண்மையாகக் காட்சியளித்து. ஆனால் "நீ ஒரு முட்டாள்" என்று எழுதப்பட்ட அரிசி குவளையானது கருமையாகக் காட்சி தந்தது. என்ன ஆச்சரியம்!

அது மட்டுமல்ல உணவு அருந்துவதற்கு முன் உணவையும், தண்ணீரையும் குறித்து செபிக்கும் பொழுது அவை ஆசீர்வதிக்கப்பட்ட பொருளாக மட்டுமல்ல. மாறாக நாமும் ஆசிர்வாதிக்கப்பட்டவர்களாக உருமாறுகிறோம். உண்மை நிறைந்த வார்த்தைகளைப் பேசுவதால் நாம் உற்சாகமடைகிறோம்.

- அருட்தந்தை சகாய அம்புரோஸ் ராஜா



கடவுளின் ஆதரவைப் பெற்றுள்ளவர்களுக்கு எதிராக யாரும் எதுவும் செய்துவிட முடியாது என்கிற உண்மையை புனித பவுல் விசுவாசத்துடனும், நம்பிக்கையுடனும் உரோமை கிறிஸ்தவர் சமுதாயத்திற்கு எடுத்துச் சொல்வதாக இறை வாசகம் கூறுகிறது. இயேசுவின் பரிந்துரையைப் பெறுகிறவர்கள் பிறரால் குற்றம் சாட்டப்பட்டு, இகழப்பட்டாலும், கடவுள் அவர்களை மனமுவந்து ஏற்றுக் கொள்வார் என்பது பவுலின் அசைக்க முடியாத நம்பிக்கை. பவுலின் நம்பிக்கையை நோக்கும்போது 'உம் பக்கம் ஆயிரம் பேர் தாக்கினாலும், உம் வலப்புறம் பதினாயிரம் பேர் தாக்கினாலும், எதுவும் உம்மை அணுகாது' (திபா 91:17) என்கிற திருப்பாடலின் வரிகள்தான் நம் நினைவுக்கு வருகிறது. இறைவனில் அடைக்கலம் தேடுவோர் ஒருபோதும் தோல்வியைச் சந்திக்க மாட்டார்கள் என்பது இறையனுபவம் பெற்றவர்கள் வழங்கும் சாட்சியம்.

கிறிஸ்துவின் அருளுதவியைப் பெற்ற பவுல் 'நான் வலுவுற்றிருக்கும்போது வல்லமை பெற்றவனாக இருக்கிறேன்' (2 கொரி 12:10) என்று அறிவிப்பது இறையாற்றலை அவர் தன் தனிப்பட்ட வாழ்வில் அனுபவித்துப் பயனடைந்ததை நமக்கு நினைவூட்டுகிறது. அதாவது



# நற்குணங்களை நிரூபித்த ஆபிரகாம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசு கிறிஸ்துவிடத் தில் தன்னை முற்றிலும் அர்ப்பணித்துக் கொண்ட பவுல், அவரையே வாழ்வின் ஆதாரமாகக் கொண்டு வாழ்ந்தார். ஆகவே, எத்துன்பத்தையும் இறையருளின் உதவியுடன் மிக எளிதில் மேற்கொள்ள முடியும் என்று இயேசு அவருக்கு ஆறுதல் கூறியதனால் (2 கொரி 12:9) அவரை ஆட்டுவித்துக் கொண்டிருந்த பலவீனம் அவருக்குப் பெரிய சுமை யாகத் தெரியவில்லை. அவர் தன்னையே நம்பிக் கொண்டு வாழவில்லை. மாறாக, இறைவனின் பலத் தில் மட்டும் தன் முழு நம்பிக்கையையும், விசுவா சத்தையும் வைத்த காரணத் தினால் பலவீனமான நிலை யிலும்கூட பலம் பெற்றவ ராய் அவரால் செயல்பட முடிந்தது.

இந்நாளின் முதல் வாச கத்தில் விசுவாசத்தின் தந்தை யாகிய ஆபிரகாம் கடவுளி டம் தான் வைத்திருந்த ஆழ்ந்த விசுவாசத்தை வெளிப்படுத்தி, அதனால் மிகுந்த பலனடைந்ததைக் காண்கிறோம். ஆபிரகாம் தன் வாழ்வில் கடவுளுக்கு உண்மையுடனும், பிரமா ணிக்கத்துடனும் சேவை செய் தார் என்பதில் சந்தேக மில்லை. அதே வேளையில் அவரும் சில சமயங்களில் தவறுகள் புரிந்தார் என்றறி கிறோம். எடுத்துக்காட்டாக, உயிருக்குப் பயந்து, தன் மனைவி சாராவை அவர் இரண்டு முறை பொய் சொல் லத் தூண்டினார் (தொநூ 12:11-19, 20:2-11). மேலும் தன் மனைவி சாராவை திருப்திப்படுத்துவ தற்காக தான் மனைவியாக ஏற்றுக் கொண்ட எகிப்தியப் பணிப்பெண்ணை சாரா துன் புறுத்தியபோது, சாராவை அவர் தடுத்து நிறுத்த முன் வரவில்லை (தொநூ 16:6). இருப்பினும் இறைவனின் வாக்குறுதியின் பலனாகப் பிறந்த தன் மகன் ஈசாக்கைப் பலியிடுமாறு ஆண்டவர் கட் டளையிட்டபோது, எவ்வித மறுப்புமின்றி, அதைச் செய்ய முன்வந்தார் என்று வாசகம் தெரிவிக்கிறது. ஆகவே, கடவுள் அவரது மகன் ஈசாக்கை அவரிடம் திரும்பி ஒப்ப டைத்து, அவர் மீது தம் ஆசியை ஏரா ளமாய் பொழிந்தார்.

கடவுள் ஆபிரகாமின் விசுவாசத்தையும், பிரமாணிக்கத்தையும் பரிசோதித்தார் என்பதை அறியும்போது, உண்மையில் கடவுள் ஆபிரகாமுக்கு ஒரு சவால் விடுத்தார் என்று புரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. ஐந்நூலில் இந்த ஓரிடத்தில் மட்டும்தான் கடவுள் தனி மனிதர் ஒருவரின் விசுவாசத்தைச் சோதித்தார் என்று கூறப்பட்டுள்ளது. மற்ற இடங்களில் தனி மனிதரையன்றி, இஸ்ரயேல் மக்கள் யாவரையும் சோதித்ததாகப் பார்க்கிறோம் (விப 15:25, 16:4, இச 8:2,16, 13:4, 33:8). கடவுள் ஆபிரகாமிடம் தன் மகன் ஈசாக்கை மோரியா நிலப்பகுதி யிலுள்ள மலையில் எரிபலியாகப் பலியிடுமாறு கட்டளையிடுகிறார். மோரியா மலை எருசலே மில் இருப்பதாகவும், அங்குதான் சாலமோன் அரசர் கடவுளுக்குக் கோயில் எழுப்பினார் என்றும் பார்க்கிறோம் (2 குறி 3:1).

அப்படியென்றால் எருசலேம் கோவில் கட் டப்படவிருந்த இடத்தில் தான் ஆபிரகாம் ஈசாக் கைப் பலியிட வேண்டும் என்று கடவுள் கூறி னார் என்று எடுத்துக் கொள்ளலாம். அதாவது எருசலேம் கோவில் எழுப்பப்பட இருந்த இடத் தில் யூத குலத்தின் தந்தை ஆபிரகாம்தான் கட வுளை முதலாவதாக வழிபட்டார் என்றிகிறோம்.

ஆபிரகாம் இறையச்சம் கொண்டு விளங்கி னார். அதாவது இறைவன் ஒருவரையே மகி மைப்படுத்தவும், அவருக்காக எதையும் இழக்க வும் தான் தயாராக இருப்பதை தன் அன்பு மக னையே இழக்கக் கூடிய அளவுக்கு ஆபிரகாம் துணிந்தார். ஒரே செயலின் மூலம், ஆபிரகாம் அன்பு, தாழ்ச்சி, கீழ்ப்படிதல், விசுவாசம், நம்பிக்கை ஆகிய நற்பண்புகளை நிரூபித்தார்.

★ ஆண்டவரே, என் தலைவரே, தெய்வங்களுள் உமக்கு நிகரானவர் எவருமில்லை. **- உம்மை வணங்குகிறேன்**

★ ஆண்டவரே, நீர் இரக்கமிகு இறைவன், அருள் மிகுந்தவர்.

**- உம்மை வணங்குகிறேன்**

★ ஆண்டவரே, வான்வெளியில் உமக்கு நிகரானவர் யார்?- **உம்மை வணங்குகிறேன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புறவு வாழ்க்கை... அருமையான கிறிஸ்தவர்கள்!

### பிற இனத்தாரிடையே பெருமை

பழைய ஏற்பாட்டில், இஸ்ராயேல் மக்களைப் பார்த்து, அவர்களை சுற்றிலுமிருந்த புற இனத்தவர்களான, அம்மோனியர்கள், பிலிஸ்தியர்கள், எகிப்தியர்கள், கனானேயர்கள், பாபிலோனியர்கள் போன்றோர், ஆச்சரியப்பட்டனர். அதற்கு காரணம் என்ன தெரியுமா? இ.ச 4.6-8ஐ எடுத்து வாசியுங்கள்.

சுற்றிலுமுள்ள வேற்றின மக்கள் இஸ்ராயேல் மக்கள்மேல் ஆச்சரியமும், பொறாமையும் கொண்டதற்குக் காரணம்: கட்டளைகள், இப்பகுதியில் வேற்றினத்தார். இஸ்ராயேல் மக்களைப் பார்த்து கூறுவது இதோ, ''உண்மையிலே, இந்த மாபெரும் இனம், ஞானமும், அறிவாற்றலுமுடையது (7) ''எந்த இனம், இந்த இனத்தைப் போல இறைவனுடன் இவ்வளவு நெருக்கமாக அன்புறவு கொண்டுள்ளது! (8)'' ஆக பாலஸ்தீனாவை சுற்றிலுமிருந்த பிற இனத்தார் இஸ்ராயேல் மக்களின் கட்டளை முறைமைகளையும் நியமங்களோடு இயைந்த அவர்களின் வாழ்க்கை முறையையும் கண்டு ஆச்சரியப்படுகின்றனர். ''தங்களுக்கு இப்படி இருந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும் என்று தங்கள் ஆற்றாமையை வெளிப்படுத்துகின்றனர். இன்றும், பிற சமயத்தவர், நம்மைப் பார்த்து கூறும் சொற்களும் இவைதான். என்ன வேலையிருப்பினும் ஞாயிற்றுக்கிழமைகளில், ஒழுங்கமைவுடன் சாரைசாரையாக ஆலயம் நோக்கிச் செல்லும் கிறிஸ்தவர்களைப் பார்த்து மனதுக்குள் ஆச்சரியப்பட்டு அவர்கள் கூறுவதும் இதுதான். ''என்ன அருமையான கிறிஸ்தவர்கள்! என்ன அருமையான அன்புறவு வாழ்க்கை! வாழ்வை செம்மையாக வாழ்வதற்கு இவர்களுக்கு கட்டளைகள்! ஊக்குவிக்க இறைவார்த்தை நூல்கள்! அதை ஒவ்வொரு நாளும் குறிப்பாக ஞாயிற்றுக்கிழமைகளில் கற் பிக்க விளக்க குருக்கள்! உலகம் முழுவதும் 2.16 பில்லியனாக பரவியிருக்கும் இந்த கூட்டத்தை வழி நடத்த திருச்சபை கோட்பாடுகள் கொள்கைகள், வழிபாடுகள் கொண்டாட்டங்கள்! அப்பப்பா!'' என்று வியக்கின்றனர்; தங்கள் ஆற்றாமையை வெளிப்படுத்துகின்றனர், பிற இனத்தார்.

கட்டளை - முறைமைகள் - நியமங்களால் நமது வாழ்வு எவ்வாறு கட்டி எழுப்பப்படுகின்றது என்பதற்கு அதற்குபின் நடந்த ஒரு உரையாடலைப் பார்ப்போம். சிறுவய தில் நாம் கற்கும் திருச்சபைக் கட்டளைகள், ஒழுங்கு முறைமைகள், இறைவார்த்தை போதனைகள் நமது ஆழ்மனதில் பதிந்து, நம்மை சமீபத்தில் செம்மையானவர்களாக வழி நடத்தும் ஆற்றல் பெற்றவை என்று கூறி உங்களில் எத்தனை பேருக்கு ''பத்துக்கட்டளை கள்'' மனப்பாடமாக தெரியும்? என்றேன். கேட்டவுடன் சிறுவர் சிறுமியர் கரங்கள் உயர்ந்தன. அதில் ஒரு சிறுவனை அழைத்து ஒப்புவிக்கச் சொன்னேன். அவனும் 7 வரை சரியாகச் சொன்னான். பின்னர் 8ஆம் கட்டளைக்கு அவன் ''பிறர் தாரத்தை விரும் பாதிருப்பாயாக'' என்றான், 9ஆம் கட்டளைக்கும் அந்த சிறுவன் ''பிறர் மனைவியை விரும்பாதிருப்பாயாக'' என்று கூறி 10ஆம் கட்டளைக்கும் ''பிறர் பொண்டாட்டியை'' என்றதும் அனைவருமே சிரித்துவிட்டனர். சிறிது இடைவேளைக்குப் பின் சிறுவனை அமர வைத்து விட்டு நான் கூறினேன். ''பிறன் மனை நயவாதே'' என்றால் என்ன என்றுகூட உணர முடியா பருவம் இச்சிறுவனுக்கு! 9ஆம், 10ஆம் கட்டளைகளுக்குள் உள்ள வித்தியாசமான 'பிறர் தாரம்: பிறர் உடைமை' போன்ற வேறுபாட்டைக்கூட புரிந்து கொள்ள முடியாத பருவம். ஆனாலும் இக் கட்டளைகளை இதயத்தில் பதித்து வைப்பதால், இ ச் சி று வ ன் வ ள ர் ந் து

### ஆண்டவரே உம்மை வணங்குகிறேன்

★ ஆண்டவரே, நீதியும் நேர்மையும் உம் அரியணைக்கு அடித்தளம்.

**- உம்மை வணங்குகிறேன்**

★ ஆண்டவரே, உம் வியத்தகு செயல்களால் என்னை மகிழ்வித்தீர்.

**- உம்மை வணங்குகிறேன்**

★ ஆண்டவரே, நீர் பூவுலகை நிலைப்படுத்தினீர், அது அசைவுறாது.

**- உம்மை வணங்குகிறேன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞனானதும் இதன் அர்த்தத்தை, அவன் இதயம் கற்றுக் கொள்ளும்'' என்றேன். பிற்காலத்தில் கிறிஸ்தவ ஒழுங்கு நெறிமுறைமைகளோடு வாழ்வதற்கு சிறுவயதிலிருந்தே நமது பிள்ளைகள் கற்கும் மறைக்கல்வி, கட்டளைகள், இறைவார்த்தை அறிவுறுத்தல்கள் போன்றவை எவ்வளவு முக்கியத்துவம் பெறுகின்றன என்பதைப் பார்த்தோம்.

தி.ச. 1090 ''கொலை செய்யாதே'' இதே போன்ற 5ஆம் கட்டளையையும் 9ஆம் கட்டளைகளையும் இணைத்து எழுதப்பட்ட சட்டம் தான் 109. 5ஆம் கட்டளை ''கொலை செய் யாதே!''

9ஆம் கட்டளை ''பிறர் தாரத்தை விரும்பாதே.'' தி.ச.1090இல் நாம் பார்ப்பது சாதாரண கொலை அல்ல. மாபாதக் கொலை அருட்தந்தை Y. இருதயராஜ் இந்த பாவத்தை ''பாதகம்'' என்று குறிப்பிடுகின்றார். அதாவது தன் துணையைக் கொலை செய்வது. அதாவது இன்னொரு திருமணம் செய்வதற்காக தன் துணையையோ அல்லது அடுத்தவரின் துணையையோ கொலை செய்வது.

இச்செய்கை கிறிஸ்தவ திருமணத்துக்குரிய முறையில் தடையாகும். இந்த 'பாதகம்' என்னும் பாவம் ஒருவருடைய திருமணத்தில் இருந்தால். அத்திருமணம் செல்லாத் திருமணமாக அறிவிக்கப்படலாம். மேலும் புதிதாக செய்யப்போகும் ஒரு திருமணத்துக்கு அது முறையில் தடையாகவும் கருதப்படும் ஆகவே இப்படி கொலை செய்தவர் அக்குறிப்பிட்ட திருமண பந்தத்தில் இன்றைய திருச்சபை தடை விதிக்கின்றது.

பாதகம் என்ற முறியல் தடை இருவகைப் படும். 1) ஒரு குறிப்பிட்ட நபருடன் திருமணம் செய்யும். நோக்கத்துடன் அக்குறிப்பிட்ட நபரின் வாழ்க்கைத் துணையை அல்லது தனது சொந்த வாழ்க்கைத் துணையை கொலையை செய்து. (ii) உடல் ரீதியான அல்லது மன ரீதியான பரஸ்பர ஒத்துழைப்புடன் தங்களுடைய துணைவரின் சாவை விளைவிப்பது, இன்றைய செய்தித்தாள்களில் இதுபற்றிய செய்திகள் அடிக்கடி வெளிவந்து கொண்டிருக்கின்றன. காதல், காமம் கண்களை மறைப்பதால் குடும்ப வாழ்வையே சீர்குலைக்கும் செய்கைகள் இலகுவாக நடைபெறுகின்றன காதலுக்காக, காமத்துக்காக அடியாட்களை வைத்து துணையை கொல்வது போன்ற குற்றச் செயல்கள் நவீனகாலத்தில் பெருகிவிட்டன.

இறுதியாக உலகிலேயே திருமண பந்தம் போற்றிப் பாதுகாக்கப்படும் நாடு இந்தியா, குடும்ப கட்டுமானத்தை நேர்த்தியாக பாதுகாக்கும் கலாசாரம் உடைய நாடு இந்தியா. நமது நாட்டில் இத்தகைய பிரச்சினைகள் அடிக்கடி இல்லை என்றாலும் மேனாட்டு கலாசாரத்தால், ஊடக தாக்கத்தால் நுகர்வு வெறிக் கலாசாரத்தால் வரும் இத்தகைய தீமைகளிலிருந்து கிறிஸ்தவக் குடும்பங்களை பாதுகாக்கவே, திருச்சபை இந்த முறியல் தடையை ஏற்படுத்தியுள்ளது. திருமண வாழ்வும், குடும்பங்களும் உலகியல் வாழ்வைச் சார்ந்தவை என்றாலும் தூய பவுல் காட்டுகின்ற கிறிஸ்தவ குடும்ப வாழ்வு (கலா 5.22-23) நமது எல்லா பங்குகளிலும் செழிக்க வேண்டும் என்பதற்காக இம்முறியல் தடை திருச்சபை திருமண சட்டத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- அருட்தந்தை ஜான் திரவியம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அரசருக்கெல்லாம் அரசராய்...

இயேசு கிறிஸ்துதான் உண்மையான அரசர் என்கிற முக்கிய உண்மையை இந்நாளில் நாம் நினைவுகூர்ந்து கொண்டாடுகிறோம். இந்நாளின் விவிலிய வாசகங்களை நுணுக்கமாக ஆராய்கின்றபோது, பழைய ஏற்பாட்டில் இஸ்ரயேலின் கடவுள் மக்களை வழிநடத்தும் அரசராகத் திகழ்கிறார் என்று பொதுவாக உணரப்படுவதைப் பார்க்கலாம்; புதிய ஏற்பாட்டில் இயேசு அரசுரிமையைப் பெற்று விளங்குவதாகச் சித்திரிக்கப்படுவதையும் காணலாம். இயேசு 'தாவீதின் மகன்' என்று அழைக்கப்படுவதைக் காணும்போது (மத் 1:1, மாற் 10:47), அவர் அரசர் என்று அவர் காலத்தைச் சேர்ந்த மக்களுள் பலர் ஏற்றுக்கொள்வதை நாம் தெரிந்து கொள்கிறோம். புதிய ஏற்பாட்டில் இயேசுவின் அரசுரிமையைப் பற்றியத் தர்க்கம் ஏற்பட்ட போது, தாம் ஓர் அரசர் அல்லர் என்று சொல்லி இயேசு ஒருபோதும் விலகிவிடவில்லை. மாறாக, தாம் எத்தகைய அரசர் என்று அவர் விளக்குவதை இரண்டு இடங்களில் பார்க்கிறோம். இயேசுவின் சீடர்களாகிய யாக்கோபுவும், யோவானும் இயேசுவின் அரசில் முக்கியப் பதவியை நாடியதனால், மற்றச் சீடர்களின் மத்தியில் சலசலப்பு ஏற்பட்டபோது, இயேசு தலையிட்டு ''மானிட மகன் தொண்டு ஏற்பதற்கு அல்ல, மாறாகத் தொண்டு ஆற்றுவதற்கும் பலருடைய மீட்புக்கு ஈடாகத் தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார்'' (மாற் 10:45, மத் 28:28) என்று சிறு விளக்கம் கொடுப்பதாகப் பார்க்கிறோம். அவர் கைது செய்யப்பட்டு, தண்டனைக்காக உரோமை ஆளுநர் பிலாத்துவின் முன்னிலையில் நிறுத்தப்பட்டபோது, ''நீ அரசன் தானோ?'' என்று பிலாத்து அவரைக் கேட்க,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''உண்மையை எடுத்துரைப்பதே என் பணி'' (யோவா 18:37) என்று இயேசு பதில் கூறுகிறார். மேலே குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு இடங்களிலும், அரசர் என்றால் பணிபுரிபவர் என்றும், உண்மையை எடுத்துரைப்பவர் என்றும் இயேசு விளக்கம் சொல்வதாக அறிகிறோம். அப் படிப் பார்க்கும் இயேசுவைவிட சிறந்த அரசரை நாம் காண முடியாது.

இயேசு கடவுளின் மகன் என்கிற உண்மையை இயேசு திருமுழுக்கு யோவானிடம் திருமுழுக்குப் பெற்ற வேளையிலும் (மத் 3:17), அவர் உயர்ந்ததொரு மலையில் தோற்றம் மாறிய போதும் (மத் 17:5) தந்தையாகிய இறைவன் பகிரங்கமாக வெளியிடுவதைக் காண்கிறோம். ''நானும் தந்தையும் ஒன்றாய் இருக்கிறோம்'' (யோவா 10:30) என்றும், யூதர்களிடம் நடந்த வாக்குவாதத்தின்போது ''ஆபிரகாம் பிறப்பதற்கு முன்பே நான் இருக்கிறேன்'' (யோவா 8:58) என்றும் இயேசு சொல்லும்போது, அவர் கடவுள்தான் என்கிற உண்மை வெளிப்படுகிறது. அப்படியானால் பழைய ஏற்பாட்டில் கடவுளுக்கும், மக்களுக்கும் இடையே நடந்த உறவுப் பரிமாற்றத்தில் நிச்சயமாக இயேசுவுக்கும் தொடர்பு உண்டு என்று உறுதியுடன் சொல்லலாம். சீனாய் உடன்படிக்கையின் விளைவாக, இஸ்ரயேல் மக்கள் கடவுளின் ஆட்சிக்கு உட்பட்ட மக்களாக மாறினார். அதாவது அவர்கள் கொண்டிருந்த நிர்வாக முறை 'கடவுளின் ஆட்சியை' அடிப்படையாகக்கொண்டு தான் திகழ்ந்தது. ''நீங்கள் என் மக்களாய் இருப்பீர்கள். நான் உங்கள் கடவுளாய் இருப்பேன்'' (ஏரோ 30:22) என்று கடவுள் அடிக்கடி மக்களிடம் சொல்லும்போது கடவுள் தான் அவர்களின் உண்மையான அரசர் என்று அறிந்து கொள்கிறோம். பத்துக் கட்டளைகளில் முதல் கட்டளை இந்த உண்மையைத்தான் கூறுகிறது. (விப 20:3). சீனாய் உடன்படிக்கை இறையாட்சியை மக்களுக்கு உணர்த்தும் ஒரு பிரகடனமாக அறியப்படுகிறது. மக்களை வழிநடத்திச் சென்ற மோசே கடவுளின் 'அடியான்' (எண் 12:7), அதாவது 'கடவுளின் ஊழியர்' என்றுதான் கருதப்பட்டார். சாமுவேல் இறைவாக்கினரிடம் மக்கள் தங்களுக்கு மானிட அரசன் ஒருவர் வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டபோது, சாமுவேல் அதை விரும்பவில்லை (1சாமு 8:5-6). அதற்குக் காரணம், கடவுள் ஒருவர்தான் இஸ்ரயேலின் அரசர் என்று சாமுவேல் உறுதியாக நம்பினார் கடவுளின் கட்டளையின் பேரில் சாமுவேல் முதலில் சவுலையும் (1சாமு 10:1), பின்னர் தாவீதையும் (1 சாமு 16:3) திருப்பொழிவு செய்தார். இதன் பொருள் என்ன? மக்களை ஆளுகின்ற அரசன் கடவுள் என்கிற அரசருக்குக் கட்டுப்பட்டவன். அதனால்தான் கடவுளின் அடியாராகிய சாமுவேல் அந்த இரண்டு பேரையும் திருப் பொழிவு செய்து, அரசராக அங்கீகரித்தார். மொத்தத்தில் இஸ்ரயேலின் அரசன் யாராக இருந்தாலும் அவர் கடவுளின் ஊழியர்தான் என்கிற உண்மை பழைய ஏற்பாட்டில் வெளிப்படுகிறது.




இஸ்யேலின் ஆயர்களைக் கடிந்து கொண்ட பின் (எசே 34:1-10), இஸ்யேலின் மக்களைத் தேடி தாமே வரப் போவதாகக் கடவுள் எசேக்கியேல் இறைவாக்கினர். மூலம் அறிவிப்பதை வாசகங்கள் எடுத்துக் கூறுகிறது. இஸ்ரயேலின் ஆயர்கள் என்றால் அவர்களின் அரசர்கள் மற்றும் சமயத்தலைவர் கள் என்று பொருள் கொள்ளலாம்.

இயேசு அன்பையும் இரக்கத்தையும் பொழிவதில் அரசர். நீதித்தீர்ப்பைக் கண்டிப்புடன் வழங்குவதிலும் அரசர்.

எங்கும் நன்மை செய்துகொண்டே சென்ற இயேசு (திப 10:38). அரசர் என்கிற முறையில் நியாயமானத் தீர்ப்பை மக்களுக்கு வழங்க வேண்டியிருக்கிறது. இறுநாளின்போது எல்லாத் தீயசக்திகளையும் முறியடித்து, இயேசு தந்தையாகிய கடவுளிடம் ஆட்சியை ஒப்படைப்பார் என்று புனித பவுல் இரண்டாம் வாசகத்தில் குறிப்பிடுகிறார். ஆம், இயேசு அன்பையும், இரக்கத்தையும் பொழிவதிலும் அரசர்: நீதித் தீர்ப்பைக் கண்டிப்புடன் வழங்குவதிலும் அரசர்.

- அருட்தந்தை ஆர். ஜோஸப் ரவீபாலன்

## ஆண்டவரே உம்மை வணங்குகிறேன்

★ ஆண்டவரே, நீர் பூவுலகை நீதியுடன் ஆண்டிடுவீர்.

**- உம்மை வணங்குகிறேன்**

★ ஆண்டவரே, உயிர்களே, ஆண்டவரைப் போற்றுங்கள்.

**- உம்மை வணங்குகிறேன்**

★ ஆண்டவரே, வீணையுடன் யாழிசைத்து.

**- உம்மை வணங்குகிறேன்**

★ ஆண்டவரே, உம் மக்கள்மீது விருப்பம் கொள்கிறீர்.

**- உம்மை வணங்குகிறேன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கடவுள் நினைத்தால் எல்லாம் கைகூடும்

அன்பு சிறுவர் சிறுமிகளே,

நம் அனைவர் மனதிலும் சொந்த வீடு, சொந்த இடம், நிலம் வாங்க வேண்டும் என்கிற ஆவல் நிச்சயம் இருக்கும். அதற்காக ஆண்டவர் இயேசுவிடமும், அன்னை மரியாவிடமும் அனுதினமும் செபிப்பவர்கள் ஆயிரமாயிரம். இந்த ஆவலால் பலர் இடம் வாங்க முயல்வதால் மிகவும் விலை குறைவாக இருந்த காடு, மேடு, வயல் எல்லாம் விலையுயர்ந்த வீட்டுமனைகளாக மாறி விட்டன.

'சொந்த இடம் ஒன்றை வாங்கிப் போடுங்கள். பிற்காலத்தில் உதவும்' என்று சொந்த பந்தங்கள், நண்பர்கள் சொல்வதையும் கேட்டிருக்கிறோம். கடவுள்கூட தம் அடியவர் ஒருவரை 'சொந்த நிலம் வாங்கிப் போடு, முறையாக பத்திரப் பதிவு செய், பிற்காலத்தில் பயன்படும்' என்று சொன்ன விவிலியக் கதையை உங்களுக்குச் சொல்கிறேன்.

கடவுள்தாம் அன்பு செய்த மக்களைப் பார்க்க விரும்பி, ஆவலோடும், அன்போடும் அவர்கள் இருந்த இடம் தேடிப் போனார். அந்த மக்கள் கடவுளைப் பார்க்க விரும்பாமல், அவருக்குத் தங்களது முகத்தை காட்டாமல் முதுகைக் காட்டி அலட்சியப்படுத்தினர். இதனால் கோபம் கொண்ட கடவுள் தம் மக்களையும், அரசரையும் அயல்நாட்டு அரசர் கைகளில் அடிமைகளாக ஒப்படைத்து விட்டார்.

இந்தச் செய்தியை முன்கூட்டியே இறைவாக்காகச் சொன்ன கடவுளின் அடியவரையும் சிறையில் அடைத்து விட்டனர். ஒருநாள் சிறையில் இருந்த தன் அடியவரிடம் 'நீ இந்த நாட்டில் சொந்தமாக கொஞ்சம் இடம் வாங்கிப் போடு. என் கோபத்தால் இன்று காடாய் இருக்கும் இந்த நாடு மீண்டும் என் பேரன்பால் செழித்து ஓங்கும்' என்று சொன்னார் கடவுள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி கடவுள் சொன்ன சில நாட்களி லேயே அவருடைய பெரியப்பா மகன் தன் நிலத்தை அவருக்கு விற்க முன்வந்தான். அவ ரும் அதற்குரிய சரியான விலையைக் கொடுத்து வாங்கி முறையான கட்டணம் கட்டி, சரியான சாட்சிகளின் கையெழுத்தோடு பத்திரப்பதிவும் செய்தார். சிறையில் சிரமப்பட்டுக் கொண்டிருந்த தன் அடியவருக்கும் சொந்த இடம் வாங்க ஆலோசனை கூறி அதற்கான வழிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தார் கடவுள்.

இந்தக் கதையிலிருந்து, சொந்த இடம், நிலம், வீடு வாங்குவது கடவுளின் அருளால் தான் என்பதையும், தன்னை நம்பும், வழிபடும் தம் அடியவர்களுக்குத் தாமே அதற்கான ஆலோ சனைகளையும், வழிமுறைகளையும் கடவுளே வழங்கிடுவார் என்பதையும், முறையான விலை கொடுத்தும், முறையான கட்டணம் கட்டியும், முறையான சாட்சிக் கையொப்பமிட்டும் பத்திரப் பதிவு செய்ய வேண்டும் என்பதையும், எவ்வளவு சிரமத்தில் இருந்தாலும் கடவுள் நினைத்தால் எல்லாம் கைகூடும் என்பதையும் கற்றுக் கொள்வோம்.

கடவுளுக்கு முகத்தைக் காட்டாமல் முதுகைக் காட்டியவர்கள் யார்?

சொந்த நிலம் வாங்க யாருக்குக் கடவுள் ஆலோசனை கூறினார்?

தானாகத் தேடிப்போய் அவருக்கு நிலம் விற்றவர் யார்? எவ்வளவு விலை கொடுத்து அந்த நிலத்தை வாங்கினார் என்பதை அறிய உங்கள் விவிலியத்தில் எரேமியா 32ஆம் அதிகாரத்தைப் படித்துப் பாருங்கள்.

இப்படிப்பட்ட வரம் வேண்டி வருவோருக்கு ஆண்டவரின் தாய் அன்னை மரியா அருள்புரிய வாழ்த்தி செபிப்போம்.

அருமைராஜ்

சிறுவர் பகுதி

# தேள் கடிபட்ட மாணவன்!

செல்லப் பிள்ளையாக வளர்ந்த செல்வன் பள்ளிக்குப் போவதாக வீட்டிலிருந்து தன் டிபன் நிறைய ஆகாரத்தைப் பெற்றுக் கொண்டு தன் புத்தகப்பையையும் எடுத்துக் கொண்டு சரியான நேரத்திற்கு வீட்டை விட்டு சென்று விடுவான். ஆனால் அவன் படிக்காத மற்ற பையனையும் தன்னுடன் சேர்த்துக் கொண்டு சில நாட்களாக பக்கத்து மாந்தோப் பில் விளையாடி விட்டு சரியான நேரம் பார்த்து வீடு வந்து விடுவான்.

இப்படி பெற்றோரை வஞ்சித்துக் கொண்டு வந்தவனை ஒருநாள் ஆண்டவரே பாடம் புகட்டினார். ஒருநாள் செல்வன் வீட்டுக்கு ஒரு பையன் ஓடி வந்து, ''செல் வன் அப்பா, உங்கள் பையன் மாந்தோப்பில் தேள் கடித்து அழுது புரண்டு கொண்டிருக்கி றான்'' என்றான்.



உடனே வீட்டுக்காரர், ''என் மகனுக்கு பஸ் பாஸ் வாங்கிக் கொடுத்து தினமும் டிபனில் ஆகாரம் கொடுத்து பள்ளிக்கு அனுப்பி வைக்கிறேன். யாரோ வீட்டு பையனைப் பற்றி என்னி டம் சொல்லுகிறாயா? அந்தப் பையன் வீட்டில் போய் சொல்லு'' என்றார். ''ஐயோ, உங்க பையனை எனக்குத் தெரியாதா? இதோ இந்த டிபன் உங்களுடையது தானே...?'' என்று கூறிக்கொண்டே டிபனை அவரிடம் கொடுத்தான். உடனே டிபனைப் பார்த்து, ''ஆமா எங்களுடையதுதான். இதோ என் பெயர் போட்டிருக்கிறதே'' எனச் சொல்லி கொண்டே தன் சைக்கிளை எடுத்து வேகமாய் மாந்தோப்பை அடைந்தார்.

தன் தகப்பனைப் பார்த்த செல்வனுக்கு தான் தேள்கடித்த அழுகையுடன் தன் திருட் டுத்தன விளையாட்டு தன் அப்பாவுக்கு தெரிந்து விட்டதே என மற்றொரு தேள் கடித் தது போல் வலியோடு வலியாக கதறி அழு தான். அவன் பரிதாப நிலையைப் பார்த்த செல்வன் அப்பா தன் சைக்கிளில், அழைத் துச் சென்று ''இனிமேல் இப்படி செய்தால் இனி பாம்பே கடிக் கும்'' என எச்சரித்து மறுநாள் பள்ளிக்கு அனுப்பினார். கிருபை யுள்ளவர்கள் தேவ தண்டனையில் திருந்துவர் மற்றவர்கள் தேவனை தூஷிப்பார்கள்.

*- என். தானியேல் தாசன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞர் சிறுகதை

# இருந்தாலும் இல்லாவிட்டாலும்!

எப்போதும் என்னிடம் அதிகம் பேசாத அப்பா, இரண்டு வாரத்துக்கு முன்பாக என்னிடம் தனிமையில் நிறையப் பேசினார். என் மனைவி வழக்கம் போல இரண்டு வாரத்துக்கொருமுறை எங்கள் இரண்டு வயது மகனுடன் தன் அம்மா வீட்டுக்குப் போயிருந்தாள். சரியான பொறுப்பும், வேலையும் இல்லாத என்மேல் அப்பாவுக்கு எப்போதும் இரக்கம் இருக்கும். அதைவிடப் பரிதாபம் என் மனைவி! ஓரிடத்தில் நிரந்தரமாக சம்பாதிக்க முடியாத, அதிக வருவாய் ஈட்டித்தர முடியாத என்னுடைய இயலாமையை அவருடைய காதுபடக் குத்திக் காட்டும்போது ஏற்படும் அவமானம்!

அப்பா தனியார் நிறுவனமொன்றில் உழைத்து ஓய்வு பெற்றவர். அவருடைய உழைப்பின் நிறைய வருவாய், இறந்துவிட்ட என் தாயின் மருத்துவச் செலவுக்கே அதிகப்படியாக கரைந்தது. அப்பாவுக்கு வரும் ஓய்வூதியத்தில் அவ் வப்போது வீட்டுச் செலவுக்குப் பணம் தருவார். அவருக்கு நான் உதவ வேண்டிய நிலைபோய் இந்த வயதிலும் அவர் உதவியை நாடும் அவலம் எனக்கு அமைந்துவிட்டது.

அப்பா என்னிடம் தனியே பேசும்போது என்னை வளர்த்த பழைய நாட்களை நினைவு கூர்ந்தார். என்னுடைய பொறுப்பின்மையையும், தான்தோன்றித்தனத்தையும் சுட்டிக்காட்டிய அவர், என் மனைவி என்னைக் குத்திக்காட்டிடப் பேசுமளவுக்கு என் நிலைமை இருப்பது குறித்து வருத்தப்பட்டார். கடனிலிருக்கும் வீட்டுத் தவணை முடிய இன்னும் ஆறு மாதம் பாக்கியிருக்கிறது. அவர் சேமித்த ஆயுள் காப்பீட்டுத் திட்டத் தவணை அடுத்த மூன்றாம் மாதம் முடிவடைதாகவும் தெரிவித்தார்.

அம்மா இல்லாததால் என்னை வாரிசுதாரராகக் குறிப்பிட்டதைச் சொன்னார். அவருடைய பென்ஷன் பணம் அவருக்குப் பிறகு எனக்குக் கிடைக்காது என்று கூறியவர் கடைசியாக சொன்னதுதான் என் மனதை உடைத்துவிட்டது.

நான் இறந்தபிறகு உடனடியாக இறப்புச் சான்றிதழ் வாங்க மறந்துவிடாதே என்றதைத்தான் என்னால் தாங்க முடியவில்லை.

தீர்க்கத்தரிசனமாக பதினைந்து நாட்களுக்குள் அவர் பேசியதைப் போலவே நேற்று இரவு உறங்கப் போனவர் இன்று காலை எழுந்திருக்கவேயில்லை. மாரடைப்பால் காலமாகிட்டிருந்தார்.

பதற்றத்தோடு முதல் வேலையாக தன் அம்மா வீட்டுக்குப் போயிருந்த என் மனைவிக்குத் தொலைபேசி வழியாக சேதி சொன்னேன். மற்றவருக்கெல்லாம் செய்தி தெரிவிக்கச் சொன்ன அவள், போனிலேயே குத்திக்காட்டினாள். ''இதுநாள்வரை உங்களை நம்பிவந்த எனக்குதான் எதுவும் செய்யவில்லை, இறந்துவிட்ட உங்க அப்பாவின் இறுதிச் சடங்கை எப்படி செய்யப் போறீங்க?'' என்று கேட்டதோடு நிற்காமல், ''அவர் இருந்தாலாவது அவரிடம் கையேந்தலாம். அவருடைய இறுதிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சடங்குக்கு அவரே வந்து பணம் கொடுப்பாரா?''

வார்த்தைகளால் ஈட்டி பாய்ச்சிய அவள் பேச்சால் நொந்து போனேன்.

அவள் வருவதற்குள் உறவினர்களுக்கு, தெரிந்தவர்களுக்குச் செய்தி தெரிவித்தேன். அவள் வீடு திரும்பியபோது அப்பாவுடைய இறுதிச் சடங்கு ஏற்பாடுகளில் நான் மும்முரமாக இருப்பதைக் கண்டு அவள் சற்று வியந்தாள். ஒருவேளை இந்த நேரத்தில் உதவாதவர்கள்கூட உதவுவார்கள் என நினைத்தாளோ என்னவோ?

அப்பாவின் இறுதிச் சடங்குகள் எல்லாம் முடிந்தும்கூட என் மனைவிக்கு இப்போதும் வியப்பிருந்தது.

## ஆண்டவரே உம்மை வணங்குகிறேன்

★ மண்ணுலகில் ஆண்டவரைப் போற்றுங்கள்.

**- உம்மை வணங்குகிறேன்**

★ ஆண்டவரே, உலகுக்கு நீர் நீதியான தீர்ப்பு வழங்குவீர்

**- உம்மை வணங்குகிறேன்**

★ ஆண்டவரே, உம்மிடமிருந்து வலிமை பெற்ற மானிடர் பேறு பெற்றோர்.

**- உம்மை வணங்குகிறேன்**

★ ஆண்டவரே, நீரே என்னைப் பாதுகாப்புடன் வாழச் செய்கின்றீர்.

**- உம்மை வணங்குகிறேன்**

★ ஆண்டவரே, நீர் நேரிய உளத்தோரை விடுவிப்பீர்.

**- உம்மை வணங்குகிறேன்**

இந்தச் செலவுக்கு எப்படி பணம் வந்தது? அவளுக்குத் தெரியாது, இது அப்பாவின் பணம்தான் என்பது. அவர் கொடுத்த பணம் அவருக்காகவே செலவு செய்யப்பட்டது.

அன்று அப்பாவுக்கு மனதில் என்ன பட்டதோ என்னிடம் பத்தாயிரம் ரூபாய் கொடுத்தபோது அதை வாங்கிக்கொள்ளக்கூடிய மன நிலையில் நான் இல்லை. 'ரொம்பக் கஷ்டப்படுகிறாய். வைத்துக்கொள்' என்று கூறி கொடுத்த பணத்தை நான் மறுத்துவிட, 'என்றாவது உனக்குத் தேவைப்படும். பீரோவிலிருந்து எடுத்துக் கொள்' என்று கூறிவிட்டார். அப்போது கொடுத்த பணம் எனக்கு ஆபத்தில் உதவியது.

அப்பாவுடைய இறுதிச் சடங்குக்கு அவரே வந்து பணம் கொடுப்பாரா? என்று என் மனைவி வழக்கம்போல குததிக்காட்டிக் கேட்டபோது அவமானமாக இருந்தது. அப்பா தந்த பணம் என்று என் மனைவியிடம் கூறி என் கௌரவத்தைக் கெடுத்துக்கொள்ளாமலேயே குடும்பத்துக்குச் செலவழித்தேன். பணம் கரைந்து கொண்டிருந்தது. அப்பாவின் நினைவுகளை மட்டுமே சேமிக்க ஆரம்பித்தேன். அவர் எனக்கு வைத்துவிட்டுப் போயிருக்கும் சேமிப்புப் பணத்தைவிட அவருடைய நினைவுகள் இப்போது எனக்கு ரொக்கமாகத் தெரிந்தது.

அவரின் நினைவுகளோடு என் வாழ்க்கையை சீர்ப்படுத்திக்கொள்ளத் தீர்மானித்துவிட்டேன். இருந்தாலும் இல்லாவிட்டாலும், உதவிய அந்த நல்ல அப்பாவுக்கு இனியாவது நல்ல பெயர் எடுத்துத் தர வேண்டாமா? அவர் இழப்பில் எனக்குத்தான் ஞானம் வந்திருக்கிறது. இந்த ஞானம் 'உனக்கும் ஒரு மகன் இருக்கிறான்' என்பதை விடாமல் அறிவுறுத்தத் தொடங்கி விட்டது.

- ரோஜா ஆல்பர்ட்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# பாடுகளின் வழிவந்த இறைமீட்பு

மனித வாழ்க்கை என்றாலே துயரம் நிறைந்ததுதான். இந்த உண்மையை உணர்ந்துகொள்வது அவ்வளவு எளிதல்ல. உலகில் இரவு பகல் வருவது போல ஒவ்வொருவர் வாழ்விலும் இன்பமும் துன்பமும் வரும்.

துயரம்தான் வாழ்க்கை என ஏற்றுக்கொள்வோர்க்கு வாழ்க்கை மகிழ்ச்சியாக மாறுகிறது. ஆயினும் துயரங்கள் நம்மைத் தாக்கும்போது நம்மால் அவற்றைத் தாங்க முடிவதில்லை. எல்லோருடைய வாழ்விலும் துன்பங்கள் வருகின்றன. என்றாலும் எல்லா துன்பங்களும் ஒரே தன்மை வாய்ந்தவை அல்ல.

மரியாவின் வாழ்விலே ஏற்பட்ட துன்பங்கள் எத்தகையவை என்று நாம் அறிகின்றபோது மரியாவின் மேன்மையும் மனவலிமையும் இறைப்பற்றும் புரியும். அன்னை மரியாவின் வாழ்வில் ஏற்பட்ட துன்பங்களை வியாகுலங்கள் என்று குறிப்பிடக் காரணம் அத்துன்பங்கள் ஆறாத்துயரைக் கொண்டிருப்பதால்தான். தாய்த் திருச்சபை பாரம்பரியமாக ஏழு வியாகுலங்களை நம் கண்முன்பாக வைக்கின்றது.

பிறக்கும் யூத ஆண்குழந்தை ஒவ்வொன்றுக்கும் வழக்கப்படி மூன்று சடங்குமுறைகள் செய்யப்பட்டன. முதலாவதாக பிறந்த எட்டாம் நாளில் குழந்தைக்கு விருத்தசேதனம் செய்யப்பட்டது. அது ஓய்வு நாளாக இருந்தாலும் அந்நாளில் விருத்தசேதனம் செய்யப்பட வேண்டும் என்ற அளவுக்கு விருத்தசேதனம் மிக முக்கியமாகக் கருதப்பட்டது. விருத்தசேதனம் செய்யப்படும் எட்டாம் நாளில் பெயர் சூட்டும் நிகழ்ச்சியும் நடைபெறும்.

''விருத்தசேதனம் செய்யவேண்டிய எட்டாம் நாள் வந்தது. தாயின் வயிற்றில் உருவாவதற்கு முன்பே வானதூதர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லியிருந்தவாறு அதற்கு இயேசு என்று பெயரிட்டார்கள்'' (லூக் 2:21).

இரண்டாவது, தலைமகனை மீட்கும் சடங்கு முறை நிறைவேற்றப்பட்டது. பழைய ஏற்பாட்டு முறைப்படி பிறக்கும் ஆண் தலைப் பேறு அனைத்தும் ஆண்டவருக்குப் புனிதமாகக் கருதப்படும் (விப 13:2). ஆகவே இறைவனுக்குச் சொந்தமானதை பெற்றோர் மீண்டும் மீட்டெடுக்க விலைகொடுத்து வாங்கவேண்டும் என்ற கோட்பாடு இருந்தது.

மூன்றாவது, குழந்தை பிறந்து சிலநாட்கள் கடந்து தூய்மைச் சடங்கு நிறைவேற்றப் பட்டது. பிறந்தது பெண்மகவு என்றால் 80 நாட்கள், ஆண்மகவு என்றால் 40 நாட்கள் கடந்து தூய்மைச் சடங்கு நிறைவேற்றப்படும். அன்னை மரியா இத்தூய்மைச் சடங்கை நிறைவேற்றும் விதமாக திருச்சட்டத்தில் கூறியவாறு (லேவி 12:8) ''ஏழையரின் காணிக்கையாக இரண்டு மாடப்புறாக்கள் அல்லது இரு புறாக் குஞ்சுகளை பாவப் பரிகாரப் பலியாகக் கொடுத்தார்'' (லூக் 2:24). இயேசு மிக எளிய குடும்பத்தில் பிறந்து வளர்ந்தார், வசதிகள் ஏதுமின்றி ஏழ்மையில் நம்மில் ஒருவராக வாழ்ந்தார் என்பதற்கு இந்நிகழ்ச்சியும் ஒரு சான்றாகும்.

யூதர்கள் தங்களை தேர்ந்தெடுக்கப்பட்ட இனமாகக் கருதினர். இறைவன் அவர்களை உயர்த்தி உலகை ஆளும் இனமாக மாற்றுவார், மெசியா எனும் பேரரசரை தோன்றச் செய்து அவர் வழியாக இறைவன் தமது மாட்சியை நிலைநாட்டுவார் என்று எதிர்பார்த்திருந்தனர். அவர்கள் வேதனை நாட்கள் முடிவுக்கு வரும். அதற்காக இறைவனே இறங்கி வருவார் என்றும் கருதினார்கள்.

''மோசேயின் சட்டப்படி தூய்மைச் சடங்கை நிறைவேற்ற வேண்டிய நாள் வந்தபோது குழந்தையை ஆண்டவருக்கு அர்ப்பணிக்க அவர்கள் எருசலேமுக்குக் கொண்டு சென்றார்கள்'' (லூக் 2:22). இயேசுவின் பெற்றோர் எருசலேம் தேவாலயத்தில் இருந்தபோது சிமியோன் என்பவர் வருகிறார். இவரும் இறைவன் அனுப்பவிருக்கும் மீட்பரை எதிர்பார்த்திருந்தவர். இறைவன் தம் மக்களைத் தேற்றும் நாளுக்காக காத்திருந்தவர். செபப்பற்று மிக்கவர். 'ஆண்டவரை மெசியா காணுமுன் அவர் சாகப் போவதில்லை' என்று தூய ஆவியால் உணர்த்தப்பட்டிருந்தார் (2:26).

சிமியோன் குழந்தையைக் கையில் ஏந்தி கடவுளைப் போற்றினார்.

''ஆண்டவரே, உமது சொற்படி உம் அடியான் என்னை இப்போது அமைதியுடன் போகச் செய்கிறீர். ஏனெனில் மக்கள் அனைவரும் காணுமாறு நீர் ஏற்பாடு செய்துள்ள உமது மீட்பை என் கண்கள் கண்டுகொண்டன. இம் மீட்பே பிற இனத்தாருக்கு வெளிப்பாடு அருளும் ஒளி.

இதுவே உம் மக்களாகிய இஸ்ரேயலுக்குப் பெருமை! என்றார்'' (லூக் 2: 29-32).

மரியாவின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. மரியாவும் - யோசேப்பும் குழந்தையைக் குறித்து கூறியவை பற்றி வியப்புற்றனர். சிமியோன் மரியாவை நோக்கி, ''இக் குழந்தை இஸ்ரயேல் மக்களுள் பலரின் வீழ்ச்சிக்கும் எழுச்சிக்கும் காரணமாக இருக்கும்; எதிர்க்கப்படும் அடையாளமாகவும் இருக்கும்... உமது உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவிப் பாயும்'' என்றார் (லூக் 2: 34-35).

சிமியோன் இவ்வார்த்தைகளைக் கூறிய அக்கணமே மரியாவின் உள்ளத்தை வேதனை தாக்கியது. தன் மகன் மேற்கொள்ளப் போகும் வாழ்வின் தன்மையை நினைத்து மரியா கலங்கியிருக்கக்கூடும். எத்தகைய பெருந்துயர் தன்னை தாக்கப்போகிறது என்று அன்னை நினைத்திருப்பார்.

வியாகுலங்களின் அன்னை இறைவனின் கரங்களில் தன்னை ஒப்படைத்தார். தன் மகன் ஏற்கப்போகும் பாடுகள், மரணம் குறித்து தனக்கும் ஏற்படப்போகும் சொல்லொண்ணா வேதனையில் அன்னை மூழ்கினார். சிலுவையில் அறையப்பட்டு கொடூர மரணம் அடையப் போகும் தனது அருமை மகனின் வாழ்வைக் குறித்து மீளாத்துயரைத் தாங்கி நின்றார்.

சிமியோன் உரைத்த இறைவாக்கு எதிர்காலத்தில் நடைபெறப் போகும் பெரிய இடரினைச் சுட்டிக் காட்டியது.

விண்ணாளும் வேந்தன் வீணரின் கையில் அகப்பட்டு வீழ்வதை, படைப்பின் தேவன் பண்பற்றோரின் பரிகாசத்திற்கு ஆளாவதை, மாசில்லா தேவப் புறா அடிபட்டு துடிதுடித்து இறப்பதை, தீதறியா செம்மறி ஒன்று வேட்டை நாய்களின் பிடியில் சிக்கித் தவிப்பதை, பச்சை மரம் ஒன்று வெட்டி வீழ்த்தப்பட்டு சிதைக்கப்படுவதை, தேவ மகனை சொந்த இனத்தவரே சிலுவையில் ஏற்றி கொலை செய் வதை இந்தத் தாய் காண நேரிடும், எதிர்க்கப்படும் அடையாளம் உடைக்கப்படும் என்பதை அன்னை அறிந்தார்; இந்தப் பாடுகளின் வழியாகவே இறைமீட்பு வரும் என்பதையும் மரியா தீர்க்கமாய் உணர்ந்தார்.

வேதனைகள் இன்றி வாழ்க்கையில் வசந்தங்கள் பிறப்பதில்லை.

துயர்களின் அன்னை மானுட விடுதலைக்காக பாடுகளை ஏற்றார். அன்னை மரியாவின் வழிகள் புனிதமானவை.

ஏனெனில் அவர் நடந்துசென்ற பாதைகள் துயரமானவை.

- அருட்தந்தை ராஜ் ஆண்டனி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வழிப்போக்கன் 'ஈசாப்' என்னும் ஞானியிடம் ''கரிசலூர் மக்கள் எப்படிப்பட்டவர்கள்?'' எனக் கேட்டார். அப்போது அந்த ஞானி அவரிடம் ''தாங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்?'' எனக் கேட்க ''தரிசலூரிலிருந்து வருகிறேன்'' எனப் பதில் வந்தது. ''தரிசலூர் மக்கள் எப்படிப்பட்டவர்கள்'' என ஞானி கேட்க, அந்த வழிப் போக்கன் ''தரிசலூர் மக்கள் அயோக்கியர்கள், நாணயமற்றவர்கள் மோசமானவர்கள்'' என்றார். ''கரிசலூர் மக்களும் அப்படியே ''என்று ஞானி பதில் அளித்தார்.

ஈசாப் சற்று தூரம் கடந்து சென்றபோது மற்றொரு வழிப்போக்கன் எதிர் கொண்டு அவரிடம் ''கரிசலூர் மக்கள் எப்படிப் பட்டவர்கள்?'' என்று கேட்டார். ஞானி அவரிடம் ''தாங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்?'' என்று கேட்க, அவர், ''தரிசலூரிலிருந்து வருகிறேன்'' என்றார். ஞானி அவரிடம் ''தரிசலூர் மக்கள் எப்படிப் பட்டவர்கள்?'' என்று கேட்டதும் வழிப்போக்கன் ''அவர்கள் நல்லவர்கள், நாணயமானவர்கள், நேர்மையானவர்கள்'' என்று கூறினார். உடனே ஞானி ''கரிசலூர் மக்களும் அப்படியே'' என்று கூறினார்.

மற்றவர்களை எடை போட்டுப் பார்க்கும் முன்பு நம்மையே நாம் எடைபோட்டு நம்மைப் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற சிந்தனையை வழங்குகிறது இந்தச் சிறிய கதை.

''பரிசோதிக்கப்படாத வாழ்வு பயனற்ற வாழ்வு'' என்ற சாக்ரடீசின் தத்துவ வார்த்தைகளுக்கு ஏற்ப, நம்மையே நாம் பரிசோதித்து நமது கடமைகளை ஆற்றவேண்டும் என்ற சிந்தனையை கொடுப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

## நமதாக வேண்டிய நம்பிக்கைகள் மூன்று

### தன்னம்பிக்கை

நம்பிக்கையோடு முயற்சி எடுப்பவருக்கு நல்லது நடக்கும். நம்மை நம்புபவர் எப்போதும் வாழ்வை நேர்மறையாகப் பார்த்து, தோல்வியால் துவண்டு போய்விடமாட்டார்கள். தன்னம்பிக்கை கொண்டோர் தோல்விகளில் பாடங்கள் கற்றுக்கொண்டு நல்லதையே நாடுவர். இவர்கள் பிறருடைய நிறைகளைக் கண்டு பாராட்டும் பக்குவம் பெற்றிருப்பர். தன்னுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைபாடுகளால் மனமுடையாமல், மன உறுதியோடு சாதனை படைப்பார்கள். சாதிக்கப் பிறந்தவர்கள் என்ற உறுதி இவர்களை உந்தித் தள்ளும். முதிர்ச்சி மனநிலை கொண்டவர்கள்.

**பிறர் நம்பிக்கை**

தன்னை நம்புபவர்கள்தான் பிறரை நம்புவார்கள். இவர்கள் வெளுத்ததெல்லாம் பால் என்று எல் லோரையுமே நம்பாமல், கவனத்தோடும், விவே கத்தோடும் தங்கள் நம்பிக்கையை பிறரில் பதித்து முதிர்ச்சி பெறுவார்கள். இதனால் இவர்கள் உண் மையான உறவு வட்டத்தில் மகிழ்ச்சி அடைவார்கள். மனிதர்கள் அனைவருமே கெட்டவர்கள். யாரையும் நம்ப முடியாது என்ற வெறுப் புணர்வு பிறர் நம்பிக்கை கொண்டவர்களுக்கு இருக்காது. இவர்கள் பிறர் வாழ்வில் பங்கு கொண்டு அவர்கள் வாழ்விலும், வளர்ச்சியிலும் அக்கறை செலுத்துவார்கள்.

**இறை நம்பிக்கை**

தன்னை நம்புவோர், பிறரை நம்புவர். பிறரை நம்புவோர்தான் இறைவனையும் நம்புவர். கண்ணுக்குத் தெரியும் அடுத்தவனை நம்பாதவர், கண்ணுக்குப் புலப்படாத ஆண்டவரை நம்ப இயலாது. ''இறை நம்பிக்கை என்பது நாம் எதிர் நோக்கி இருப்பவை கிடைக்கும் என்னும் உறுதி. கண்ணுக் குப் புலப்படாதவை பற்றிய ஐயமில்லா நிலை''' (எபி 11:1).

இறை நம்பிக்கைதான் நமது வாழ்வின் மேடு, பள்ளங்களைச் சரிசமமாகப் பார்த்து, பயணத்தைப் பக்குவத்தோடு நடத்திச் செல்லும். வாழ்வு வசமாகும், வசந்தமாகும். நிறைவாகும். இறைமகனிடம் நம்பிக்கை கொண்டுள்ளோருக்கு நிலை வாழ்வு உண்டு (1 யோவா 5:13).

நம்மை விட்டு விலக்க வேண்டிய மூன்று நம்பிக்கைகளும் இருக்கின்றன.

**அவநம்பிக்கை**

அவநம்பிக்கையால் ஆட்கொள்ளப்பட்டவர்கள் வேதனையால் கண்ணீர் வடித்துக் காலத்தைக் கழிப்பார்கள். கடவுளால்கூட தன் கஷ்டங்களை நீக்கமுடியாது என எண்ணி முயற்சிகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பவர்கள். தங்களையே நொந்து கொண்டு வாழ்வின் யதார்த்தங்ளை எதிர்கொள்ளப் பயப்படுபவர்கள். மகிழ்ச்சியின்கோடு இவர்கள் முகத்தில் இராது. எல்லோரையும் சந்தேகிப்பார்கள். தங்களையே வெறுத்து பரிதாபக் காட்சியை பலருக்குக் காண்பிப்பார்கள். இவர்களால் யாருக்கும் பயனில்லை.

**அதி நம்பிக்கை**

அதி நம்பிக்கை கொண்டவர்கள் எப்பொழுதும் என்னால் மட்டுமே எல்லாம் நிகழும் என்ற எண்ணத்தில் வாழ்பவர்கள். அடுத்தவர் துணையும் தேவை இல்லை, ஆண்டவன் துணையும் தேவையில்லை என்று இறுமாப்புடன் நடந்து கொள்வார்கள். இவர்கள் அடுத்தவர்களை அவமதித்து அடிமையாக்குவார்கள். தன்னையே மையப்படுத்தி வாழ்வார்கள்.

# நம்பிக்கைகள் மூன்று!



- ச.சேகர் செபாஸ்டியன்

**மூடநம்பிக்கை**

குறுக்கு வழியில் செல்லத் துடிப்பவர்கள். தன்னை நம்புவதைவிட அடுத்தவர், ஆண்டவர் மீது நம்பிக்கை கொள்வதை விட மந்திரங்கள், மாயாஜாலங்கள், குறுக்கு வழிகளைக் காணும் மனநிலை கொண்டவர்கள்.

முயற்சிக்கு முட்டுக்கட்டை போட்டு, காரியத்தைச் சாதிக்கத் துடிப்பவர்கள். விதியின்படி அனைத்தும் நடக்கும் என்று தனக்குத் தானே சமாதானம் தேடிக் கொள்பவர்கள்.

இத்தகைய அவநம்பிக்கை, அதிநம்பிக்கை, மூடநம்பிக்கை நம்மை விட்டு அகன்றால் புதுப் பொலிவுடன் நமது வாழ்வு தொடரும், நிறைவுபெறும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரோசா காய்கறி நறுக்கும் போது அரிவாள்மனையில் கைப்பெருவிரலை அறுத்துக் கொண்டாள். ராணி ஒரு கந்தல் துணியை ரிப்பன் போல வெட்டியெடுத்து, சரோசாவின் வெட்டுப் பட்ட விரலில் கொஞ்சம் கோப்பித்தூளை வைத்து அழுத்தமாக ஒரு கட்டுப் போட்டாள்.

சரோசா அந்தப் பெரிய வீட்டின் சமையல்காரி, ராணி அவளுக்கு எடுபிடி. பாத்திரம் கழுவ, துணிகளைத் துவைக்க, வீட்டைச் சுத்தப்படுத்த, கடைக்குப் போய் வர!

ஒருநாள் காலைச் சிற்றுண்டிக்கு நண் பனின் வீட்டுக்குச் சென்ற ராஜேஷ் அப்போது தான் வீட்டினுள் நுழைந்தான். மாடிப் படியில் ஏறிக் கொண்டிருந்தவன், சமையலறைச் சுவரில் சாய்ந்தபடி வெட்டுப்பட்ட விரலைத் தலைக்கு மேல் தூக்கிப்பிடித்துக் கொண்டிருந்த சரோசா வைப் பார்த்ததும் இறங்கி அவளருகே வந்தான்.

''என்ன பாட்டி? விரலுக்கு கட்டுப் போட்டிருக்கிறே?''

''காய்கறி நறுக்கும்போது கண்ணசந்துட்டேன், விரல்ல வெட்டு விழுந்துருச்சு'' என்றாள்.

அறைக்குத் திரும்பிய ராஜேஷ் உடை மாற்றி விட்டு உடனே படுக்கையில் சாய்ந்தான். ''இரவு தூங்கவேயில்லை. ஒருநாள் தூக்கம் கெட்டால் உடல் எவ்வளவு சோர்ந்து போகிறது?'' என்று முணுமுணுத்தவன் சரோசாவை நினைத்துப் பார்த்தான்.

வீட்டு வேலைக்கு ஆள் வேண்டும் என்று எங்கெங்கோ தேடியும் வீட்டோடு தங்கி வேலை செய்ய ஆள் கிடைக்கவில்லை. அப்பாவின் நண்பர் வழியாக இந்த அபலைப் பெண் சரோசா கிடைத்தாள். ஆளிருந்தும் ஆதரவில்லை. பிச்சையெடுக்க மனமில்லை. உழைத்து வாழ ஆசைப் பட்டவள் நிரந்தர வேலைக்காரி ஆகிவிட்டாள்.

நேற்றிரவு வீடு திரும்பியபோது வோட்ச்மேனை தட்டியெழுப்ப வேண்டியதாயிருந்தது. ஆனால் சரோசாவும் ராணியும் தூங்காமல் கதை பேசிக் கொண்டிருந்தார்கள்.



# ஏழைகளின் வாழ்வு மலர...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசதியான வீடுகளைப் பார்த்து திருடர்கள் கைவரிசை காட்டுவது இவர்களுக்குத் தெரியும். எனக்கென்ன ஆச்சு என்று இழுத்து மூடிப் படுத் துக்கொள்வது இந்த ஏழைகளைப் பொறுத்த வரை உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்தது மாதிரி! அதனால்தான் கண்விழித்துக் காக்கிறார் கள்.

வாலிபனான ராஜேஷின் வாழ்க்கை வட்டம் ஆலயத்தைச் சுற்றியே வரையப்பட்டிருக்கிறது.

மறைக்கல்விச் சிறுவன், பீடச் சிறுவன், வாலிபர் சங்க அங்கத்தினன் என்று ஆலயத்தைச் சார்ந்தே அவன் வளர்ந்து வருகிறான். ஆனாலும் சில முற்போக்குச் சிந்தனைகளில் முரண்பட்டுப் போவதுண்டு.

''ஏழைகளின் வாழ்வு மலர எளிமையின் வடி வேற்றுப் பிறந்தவர் ஆண்டவர்! ஆனால் இன்று வீடுகள், ஆலயங்களைவிட வர்த்தக நிறுவனங் களும், கடைகளும், அலங்கார விளக்குகளால் ஜொலிக்கின்றன. இயேசு பிறந்த காலத்திலும் சரி, ஈராயிரம் ஆண்டுகள் கடந்த பின்பும் சரி, கிறிஸ்துமஸ் கொண்டாட்ட காலத்தின் வெளிச்ச வட்டங்களுக்கு வெளியேதான் நிறுத்தப்பட் டிருக்கிறார்கள் ஏழைகள்!''

இதற்கு சரோசாவும், ராணியும் இங்கே சாட்சிகள்.

இவர்கள் பண்டிகை நாட்களில் பகலிலும் தூங்க முடியாது, வேளைக்குச் சாப்பிடவும் இய லாது. விருந்தினர்களும் உறவினர்களும் வந்து கொண்டே இருப்பார்கள். இந்த பண்டிகை நாளைக் கொண்டாட இவர்களுக்கு கொடுப் பினை இல்லையா?

படுக்கையை விட்டு எழுந்தான் ராஜேஷ்.

பேராலயம் ஒன்றில் டிசம்பரில் நடைபெற்ற கிறிஸ்து பிறப்பு விழாவை தொலைக்காட்சியில் பார்த்துக் கொண்டிருந்தார் அம்மா.

''அம்மா... ஒரு ஹெல்ப் பண்றீங்களா?'' ராஜேஷ் அம்மாவிடம் கேட்டான்.

''சொல்லு தம்பி''

''சரோசாவுக்கும் ராணிக்கும் இன்று ஓய்வு கொடுங்க. இன்றைய பண்டிகை நாளைக் கொண் டாட வேண்டியவங்க முதல்ல ஏழைகள்தான். ஆலயத்தில் கேட்ட மறையுரைகளை இன்னிக்கு ஒருநாளாவது கடைப்பிடிங்க'' என்றான் ராஜேஷ்.

''பாவம்! அண்ணனுக்குத் தூக்கமில்லாம மூளை குழம்பிப் போச்சு'' என்றாள் தங்கை.

''அவங்களை ரெஸ்ட் எடுக்கச் சொன்னா எப் படி? ஜேம்ஸ் அங்கிள் வீட்டிலிருந்து லஞ்சுக்கு வருவாங்களே? நமக்குச் சாப்பாடு எப்படி?'' அம்மா கேட்டார்.

''முடிஞ்சா நீங்களே சமையல் செய்யுங்க. இதுங்க ரெண்டையும் கூட வச்சுக்குங்க. சமை யலைக் கத்துக்க வேணாமா? இதுவும் கஷ்ட மானா ஹோட்டல்ல இருந்து வரவழைக்கிறேன்'' என்றான் ராஜேஷ்.

இறைக் கருத்துக்களைத் தன் மகன் கடைப் பிடிப்பதைக் கண்ட அம்மா அதற்குச் சம்மதித் தாள். வேலைக்காரப் பெண்களுக்கு ஓய்வு கிடைத்தது.

**ஏழைகளுக்கு உதவிய மனத்திருப்தி கிடைத்தது ராஜேசுக்கு!**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த இராணுவ அதிகாரி ஒருவர் பிரான்ஸ் நாட்டின் மருத்துவமனை ஒன்றில் காயப்பட்ட நிலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அவருக்கு மருத்துவப் பணி செய்த அருட்சகோதரியும் ஜெர்மன் நாட்டைச் சேர்ந்தவராகவே இருந்தார். தாய்மொழிப் பற்று அவர்களைப் பாசத்தில் இணைத்தது.

இராணுவ அதிகாரி கத்தோலிக்க கிறிஸ்துவர் என அறிந்து, குருவானவர் ஒருவரை அவருக்கு திவ்விய நற்கருணை வழங்கவும், பாவசங்கீர்த்தனம், திருவருட்சாதனம் நிறைவேற்றவும் ஏற்பாடு செய்வதாகக் கூறினார்.

அவரோ ''இவற்றிலெல்லாம் எனக்கு நம்பிக்கை இல்லை. உங்களுக்கு ஏன் வீண் முயற்சி?'' எனக் கூற, அருட்சகோதரி அவரிடம் ''அப்படியானால் உங்களின் மனமாற்றத்திற்காய் அதிகம் செபிக்கப் போகிறேன்'' என்றார். அதற்கு அவர் ''நீங்கள் அம் முயற்சியில் தோல்வியடையத்தான் போகிறீர்கள்'' என்றார்.

அருட்சகோதரி அவரிடம், ''என் அம்மா மார்கிரேட், நம் நாட்டில் உள்ள பற்றிக் என்பவரிடம் வேலை பார்த்தார். அவர்களின் மகன் இராணுவத்தில் இருக்கிறார். பற்றிக்கின் அம்மா என் அம்மாவிடமும், என்னிடமும், 'என் மகன் இறைவனை விட்டுப் பிரிந்து துன்மார்க்கனாய் வாழ்கிறான். அவனுக்காய் செபியுங்கள்' என்றார். நான் அவர்களுக்காய் 16 ஆண்டுகள் செபித்துக் கொண்டிருக்கிறேன். அவர் யாரென்றே எனக்குத் தெரியாது'' என் றார்.

இதைக்கேட்ட இராணுவ அதிகாரி துடித்துப் போய் கண்ணீர் வடித்து, ''நான்தான் அம்மனிதன். உங்கள் அம்மா மார்கிரேட்டை எனக்குத் தெரியும். உங்கள் இடைவிடா செபம் கேட்கப்பட்டது'' எனக்கூறி, குருவானவரை அழைத்து வரச் சொன்னார். குருவானவரும் வந்தார். அதிகாரி இறுதி திருவருட்சாதனம், பாவசங்கீர்த்தனம் செய்து திவ்விய நற்கருணை அருந்தி அமைதியாய் மரணமடைந்தார். பாவி மனந்திரும்ப துன்பங்களை ஏற்ற அருட்சகோதரியின் செபம் வீணாகவில்லை.

புனித பவுல் தெசலோனிக்க மக்களுக்கு இவ்வாறு அறிவுரை கூறுகிறார்: ''எப்பொழுதும் மகிழ்ச்சியோடு இருங்கள். இடைவிடாது செபியுங்கள். என்ன நேர்ந்தாலும் நன்றி கூறுங்கள்'' (1தெச 16:17).

யோவான் நற்செய்தியில் புனித பேதுருவின் மரணம் குறித்து உயிர்த்தெழுந்த



# உங்கள் வேதனை மகிழ்வாய் மாறும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டவர் இயேசு இவ்வாறு குறிப்பிடுகிறார்:

''நீ இளைஞனாக இருந்தபோது நீயே இடையைக் கட்டிக்கொண்டு உனக்கு விருப்பமான இடத் திற்குச் சென்றாய். வயது முதிர்ந்தபோதோ நீ கைகளை விரித்துக் கொடுப்பாய். வேறொருவன் உன் னைக் கட்டி உனக்கு விருப்பமில்லாத இடத்திற்குக் கூட்டிச் செல்வான்'' (யோவா 21:18).

புனித பேதுரு எத்தகைய கொடிய மரணத்தினால் மரிப்பார் என இயேசு முன்மொழிகிறார். புனித பேதுரு இயேசுவை மறுதலிக்கும் பலவீனத்தில் கடந்து சென்றாலும் பின் அதற்காய் மனம் வருந்தி மன்னிப்புப் பெற்று பரிசுத்த ஆவியானவரால் வல்லமை பெற்று கொடிய சிலுவைச் சாவை யும் ஏற்று மரணமடைகிறார்.

''தலை மேலாகவும், கால் கீழாகவும் இருந்த நிலையில் இயேசுவைப் போல் மரணமடைய எனக்குத் தகுதியில்லை. எனவே நான் தலை கீழாகவும், கால் மேலாகவும் உள்ள நிலையில் சிலுவையில் அறையப்பட்டு மரிக்க விரும்புகிறேன்'' எனக்கூறி, அப்படியே மரணமடைந்தார். கிறிஸ்துவின் மேல் கொண்ட அன்பு எத்தகைய இழிவையும் மனமகிழ்வுடன் ஏற்றுக்கொள்ள நம்மை உந்தித் தள்ளுகிறது.

தொடக்கத் திருச்சபையில், சொலமன்கா என்ற இடத்தில் இஞ்ஞாசியார் என்ற புனிதர் குற்றம் சாட்டப்பட்டு கொடிய சிறைத் தண்டனைக்கு உட்படுத்தப்பட்டார். அவரின் கழுத்தில் பெரிய இரும்பு வளையங்கள் மாட்டுவதற்கு ஆணையிடப்பட்டது.

அதைத் தெரிவிக்க வந்த ஒருவர் ''எத்தனை துர்ப்பாக்கியம் உங்களுக்கு?'' என்றார்.

அதற்கு அவர் ''துர்பாக்கியமா? ஒருநாளும் இல்லை. கிறிஸ்துவின் மேல் கொண்ட அன்பினுக்காக நான் சுமக்க விரும்பும் போதுமான இரும்பு வளையங்கள் இந்த சொலமன்காவிலேயே இல்லை'' என்றார்.

நம் இதயம் எப்பொழுதும் இறையன்பால் நிறைந்திருக்கட்டும். நம் உள்ளத்தில் நிறையும் அன்பே நம்மை இறை மகிழ்வுக்கும், இறை பிரசன்னத்துக்கும் தூய்மை வாழ்வுக்கும் இட்டுச் செல்லும்.

புனித கிறிஸ்தோஸ்தம் (344-407) கொன்ஸ்தாந்திநோப்பிள் பகுதிக்கு ஆயராக இருந்தார். சிறந்த மறைவல்லுநர். சிறந்த மனிதாபிமானி. எளியவர்களின் வாழ்வுக்கு வளம் சேர்த்தவர்.

இறைவழியில் செல்ல நினைத்தவர்கள் அவரின் இறைப் பணியால் மிகுந்த மகிழ்ச்சியடைந்தாலும், செல்வந்தர்களுக்கும், அநீதியானோருக்கும் அவரின் மறையுரை எரிச்சலை ஏற்படுத்துவதாகவே இருந்தது.

குறிப்பாக அந்நாட்டு அரசி எயூட்டோச்சியோ அவரைப் பழிவாங்கத் திட்டமிட்டாள். அரசி உயர்மட்ட அதிகாரிகளுடன் ஆலோசனை செய்தபோது அவர்கள் பலவித கருத்துக்களைத் தெரிவித்தார்கள்.

நாடுகடத்தி ஒரு தனிமைத் தீவில் போட்டுவிடலாம் என்றார்கள் சிலர். இன்னும் சிலர் அவரின் உடைமைகள் அனைத்தையும் பறித்துவிட்டு ஏழ்மையாக்கலாமே என்றார்கள். இன்னும் எஞ்சியோர் இருட் சிறையில் அடைத்துக் கொடிய தண்டனை அளிக்கலாம் அல்லது மரணத்திற்குத் தீர்ப் பிடலாம் என்றார்கள்.

ஆனால் ஒரு பெரியவர் எழுந்து ''இவைகளுக்கெல்லாம் கிறிஸ்தோஸ்தம் பயப்படமாட்டார். மாறாக, இவைகளெல்லாம் அவரைக் கிறிஸ்து மேல் விசுவாசத்தையும், அன்பையும் அதிகப்படுத்துமே தவிர அவரை அழுத்திவிடாது. மாறாக, அவர் பயப்படுவது ஒன்றே ஒன்றுக்குத்தான். அதுதான் இறைவனுக்கு விரோதமாய் பாவத்தைச் செய்ய வைப்பது. அது நம்மால் முடியுமா? முடியாது'' எனக் கூறி முடித்தார்.

புனித கிறிஸ்தோஸ்தம் கடைசியில் கௌக்காசுஸ் என்ற தீவுக்கு நாடுகடத்தப்பட்டார். வேதனை மிகுதியால் போகும் வழியிலேயே ''இறைவா, எனக்குச் செய்த எல்லாவற்றுக்கும் நன்றி'' எனக் கூறி மரித்தார்.

நம்முடைய வாழ்வில் கிறிஸ்துவுக்காகவும், இறைப்பணிக்காகவும் இறை மக்களுக்காகவும் ஏற்கப்படும் துன்பமே நமக்கு நித்திய வாழ்வின் ஏணியாக மாறும். சிந்திப்போம்.

- Fr. ஜெகநா[illegible]

## ஆண்டவரே உம்மை வணங்குகிறேன்

★ என் கடவுளாகிய ஆண்டவரே, நீர் எத்துணை மேன்மை மிக்கவர்.

**- உம்மை வணங்குகிறேன்**

★ ஆண்டவரே, நீர் மண்ணகத்தின் முகத்தைப் புதுப்பிக்கின்றீர்.

**- உம்மை வணங்குகிறேன்**

★ ஆண்டவரே, நீரே எம் கடவுளாகிய ஆண்டவர்.

**- உம்மை வணங்குகிறேன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சாராளை நிந்தித்த ஆகார்

ஆபிராம் கடவுளின் வார்த்தைகளில் உறுதியாய் இருந்தாலும் சாராள் தனக்கு ஒரு வாரிசு இல்லையே என மிகவும் மனம் வருந்தினாள். தன்னால் ஒரு குழந்தைக்குத் தாயாக முடியாதோ என்னும் கவலை அவளுக்குள் படர்ந்து பரவியது. தன்னால் ஆபிராமுக்கும் அவப்பெயரும், மனவருத்தமும் வருகிறதே என்று அவள் மிகவும் கவலைப்பட்டாள். இன்னொரு பெண் மூலமாகவேனும் ஆபிராமுக்கு ஒரு குழந்தை கிடைக்கச் செய்யவேண்டும் என்று தீர்மானித்தாள்.

அவளுக்கு ஆகார் என்னும் எகிப்திய தேசத்துப் பணிப்பெண் ஒருத்தி இருந்தாள். அவள் வழியாக ஆபிராம் குழந்தை பெற்றுக் கொள்ளட்டுமே என்று நினைத்த சாராள் அதுபற்றிக் கணவனிடம் பேச முடிவெடுத்தாள்.

ஒருநாள் அவள் ஆபிராமை அழைத்து, 'எனக்குத்தான் குழந்தைகள் இல்லை. என்னுடைய கருவறையின் வாசல் கடவுளால் அடைத்து வைக்கப்பட்டிருக்கிறது. நீர் என்னுடைய பணிப்பெண் மூலமாக ஒரு குழந்தையைப் பெற்றெடுக்கவேண்டும்' என வேண்டினாள்.

'என்னது? பணிப்பெண் மூலமாகவா? வேண்டாம், கடவுள் நமக்குக் குழந்தைச் செல்வத்தைத் தருவதாக வாக்களித்திருக்கிறார்' என்று ஆபிராம் மறுத்தார்.

'நமக்கு வயதாகிறது. நீங்கள் இந்தத் திட்டத்திற்கு ஒத்துக்கொள்ளவேண்டும். இல்லையேல் நம்முடைய வம்சம் நம்மோடு அழிந்து போய்விடும்' என சாராள் பிடிவாதம் பிடித்தாள்.

'பணிப்பெண் மூலமாக குழந்தை பிறந்தால் அதன் பின் அவள் உன்னை மதிக்க மாட்டாள். உன்னால் அதைத் தாங்கிக்கொள்ள முடியாது. எனவே நாம் இன்னும் கொஞ்சநாள் காத்திருப்போம்' ஆபிராம் சொன்னார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இல்லை, எனக்குத் தேவை உங்கள் குழந்தை. அது எப்படியேனும் கிடைத்தாக வேண்டும். இந்தப் பணிப்பெண் என்னோடு நீண்டகாலமாக இருக்கிறவள். எனவே அவள் எனக்கு எதிராய் இருக்க மாட்டாள். நீங்கள் அதைப் பற்றியெல்லாம் கவலைப்பட வேண்டாம்' என்று சாராள் தன்னுடைய நிலையில் உறுதியாக இருந்தாள்.

மனைவியின் வற்புறுத்தலை மறுக்க முடியாத ஆபிராம் அந்த வேண்டுகோளை ஏற்றார். தன் வேண்டுதல் நிறைவேறிய மகிழ்ச்சியில் சாராள் தன் பணிப்பெண்ணை தன் கணவனுக்கு மனைவியாகக் கொடுத்தாள்.

ஆபிராம் பணிப்பெண்ணோடு கூடி வாழ்ந்தார். ஆகார் கருவுற்றாள். ஆபிராமின் முதல் வாரிசு ஆகாரின் வயிற்றில் குடியேறியது.

ஆபிராம் கணித்தது போலவே கருவுற்றதும் ஆகாரின் குணங்கள் மாறத் தொடங்கின. அவளுக்குள் அகந்தையும் கர்வமும் நிறைந்தன. அவள் சாராளை நகைக்கவும், ஏளனமாய்ப் பேசவும் தொடங் கினாள்.

'குழந்தைப் பேறு இல்லாதவர்கள் எல்லாம் கடவுளால் சபிக்கப்பட்டவர்கள். உன்னால் இத்தனை ஆண்டுகள் முயன்றும் ஒரு குழந்தைக்குத் தாயாக முடியவில்லையே. என்னைப் பார் உடனடியாக தாயாகிவிட்டேன். தாய்மைப் பேறு இல்லாமல் வாழ்ந்து என்ன பயன்?' என்று, ஆகார், சாராளின் மீது ஏளனச் சொற்களை எறிந்து மகிழ்ந் தாள்.

குழந்தைப்பேறு இல்லாத சாராளுக்கு ஆகாரின் ஏளனப் பேச்சு அதிக துன்பத்தைத் தந்தது.

'நீ என்னுடைய பணிப்பெண்தான். நான் சொல்வதைச் செய்வதுதான் உன் வேலை. குழந்தை பெற்றுக்கொள்வது என்பது நான் உனக்குத் தந்த வேலை. அவ்வளவுதான். இனி மேல் உன் வாயிலிருந்து ஒரு ஏளனச் சொல் விழுந்தாலும் உன்னைக் கொன்றுவிடுவேன்' என்று சாராள் எச்சரித்தாள்.

அதோடு விட்டுவிடாமல் கருவுற்றிருந்த ஆகாரை கடினமான வேலைகள் செய்ய வைத்து பழிவாங்கினாள் சாராள். ஆபிராமோ எதையும் கண்டுகொள்ளாமல் இருந்தார்.

சாராளின் கொடுமை அதிகரித்து தாங்க முடியாத நிலையை அடைந்தபோது ஆகார் வீட்டை விட்டுத் தப்பி ஓடினாள். ஓடி ஓடி கால்கள் தளர்ந்து பாலைவனத்தில் நம்பிக்கையற்று வீழ்ந்தபோது, ஒரு தேவதூதன் அவளைச் சந்தித்து அருகிலிருந்த நீருற்றுக்கு அழைத்துச் சென்றான்.

'நீ சாராளின் பணிப்பெண்ணான ஆகார் அல்லவா? எங்கே ஓடுகிறாய்?' என தூதர் கேட்டார்.

'ஐயா... சாராளுக்கு குழந்தை இல்லை. எனவே நான் சாராள் விருப்பப்படி ஆபிராம் மூலமாகக் கருவுற்றேன். கருவுற்றபின் சாராளின் மனது மாறிவிட்டது. அவள் என்னை எதிரியாய் பாவித்துக் கொடுமைப்படுத்துகிறாள். அதையெல்லாம் என்னால் சகித்துக்கொள்ள முடியவில்லை எனவே தப்பி ஓடுகிறேன்' என்று ஆகார் சொன்னாள்.

'நீ உன்னுடைய எஜமானியின் மனம் புண்படுமாறு நடந்திருக்கிறாய் என்பது எனக்குத் தெரியும்' எனத் தூதன் சொல்ல, ஆகார் மௌனமானாள்.

தூதன் அவளிடம், 'நீ இந்தப் பாலை நிலத்தில் அலையவேண்டாம். பேசாமல் சாராளிடமே போ. அவளைப் புண்படுத்தாமல் அவளுக்குப் பணிந் திரு. அதுதான் நல்லது' என்றார்.

'இனிமேல் நான் அங்கே போனால் என்னால் அமைதியாக வாழ முடியுமா?' ஆகார் பயந்தாள்.

'எதற்கும் கவலைப்படாதே. நீ ஒரு மகனைப் பெற்றெடுப்பாய். இது கடவுளின் வாக்கு' தூதர் சொல்ல ஆகார் முகம் மலர்ந்தாள்.

**தொடரும்**

- சேவியர்

## ஆண்டவரே உம்மை வணங்குகிறேன்

★ ஆண்டவரே, என்றென்றும் உள்ளது உமது பேரன்பு.

**- உம்மை வணங்குகிறேன்**

★ ஆண்டவரே, நீர் புயல்காற்றைப் பூந்தென்றலாக மாற்றினீர்.

**- உம்மை வணங்குகிறேன்**

★ ஆண்டவரே, வானளவு உயர்ந்து உள்ளது உமது பேரன்பு.

**- உம்மை வணங்குகிறேன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஊனமாகிப் போன உறவுகள்

அண்மையில் நாளிதழ் ஒன்றில் படித்த செய்தி ஒன்று மிகவும் வருத்தமளிக்கக் கூடியதாக இருந்தது. லண்டனில் பெற்றோருடன் வாழ்ந்து வந்த பெண் தமது பெற்றோரை வீட்டைவிட்டு வெளியே அனுப்பிவிடுகிறார். அவர்கள் வீட்டிலே வசிப்பதால், தான் வளர்க்கின்ற செல்லப்பிராணிகளான பத்து நாய்களுக்கு வசதி குறைவும், இடப்பற்றாக்குறையும் ஏற்படுகிறது என்பதே அதற்கான காரணம். வீட்டின் மீது உரிமைகோரி நீதிமன்றம் சென்ற அவரின் பெற்றோர், தங்களுக்கான உரிமையை நீதிமன்றத் தீர்ப்பின்படி பெற்று அவ்வீட்டினுள் உள்ளே நுழைய முற்பட்டபோது, அவர்களைத் தாக்கியதற்காகவும் அவர்களுக்கு உதவி செய்ய வந்த காவல்துறையினரைத் தடுத்ததற்காகவும் கைது செய்யப்பட்டு அப்பெண் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார். அவரது செல்லப் பிராணிகள் இப்போது நாய்கள் காப்பகத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. இப்பெண்ணின் நாய்ப் பாசம், தாய் தந்தைப் பாசத்தை மிஞ்சிவிட்டது என்பதைவிடக் கொன்று விட்டது எனலாம்.

அடுத்திருப்பவரோடு அண்டை வீட்டாரோடு அன்பு காட்டி உறவை வளர்க்க முனைபவர்கள் எல்லாம் 'வேலையில்லா வெட்டிகள்'. 'விவஸ்தை கெட்டவர்கள்' எனக்கருதும் விந்தை மனிதர்கள் இவர்கள். இவர்களைப் போன்றவர்கள் நிறைந்திருப்பதுதான் இன்றைய மானிடச் சமுதாயம்,

கோழி மிதித்து குஞ்சுகள் சாகா என்ற முதுமொழியினைப் பயன்படுத்துதல்கூட இப்போது குறைந்துவிட்டது. குறைத்துக் கொள்ளுதல் அவசியம் என்றே தோன்றுகிறது. காரணம் பெற்றோரால் சீரழிக்கப்படும் பிள்ளைகளின் எண்ணிக்கை கூடிக்கொண்டு வருகிறது. தான் பெற்ற மகள் என்றுகூடப் பாராது பாலியல் பலாத்காரம் செய்து சீரழிக்கும் காமக் கொடூரத் தந்தையர், தங்களது தவறான தொடர்புகளுக்குத் தடையாக இருக்கின்றனர் என்று பெற்ற பிள்ளைகளையே கொன்றழிக்கும் தரம் கெட்ட தாய்கள் போன்றோர் பற்றிய செய்திகள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அவ்வப்போது பத்திரிக்கைகளை ஆக்கிரமிக்கின்றன. இதே போலக் குஞ்சுகள் மிதித்துச் சாகும் கோழிகளும் நாட்டில் பெருகிக் கொண்டேதான் வருகின்றன. பெற்றோர் பொழிந்த பாசத்தை, புரிந்த தியாகத்தைப் பொருட்படுத்தாமல் அவர்களை அவமதித்து, புறக்கணித்து அனாதைகளாக்கும் பிள்ளைகளின் எண்ணிக்கையும் கணிசமானதாக இருக்கின்றது. ஆங்காங்கு தோன்றி வரும் முதியோர் இல்லம் அதில் நிரம்பி வழியும் முதியோர் எண்ணிக்கை இதற்குச் சான்று பகர்கிறது.

மொத்தத்தில் இன்றைய மானுட வாழ்வு, உறவு நிலையில் ஊனமும் குறையும் கொண்டதாக, உறவுகளை உபத்திரவமாகக் கருதக்கூடியதாக இருப்பதே உண்மை. உறவில் வாழ்வதே சிறந்த வாழ்வு, மனித வாழ்வுக்கான நிறைவு என்பதனை அறிதல் அவசியம்.

### இறைமையும் உறவும்

தந்தை-மகன்-தூய ஆவி என்ற திரித்துவ ஆளுமை, இறைவனே அன்புறவில் வாழ்கின்றவர், இறைமையே உறவு என்று எடுத்தியம்புறது. கடவுள் என்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற உறவாக இருக்கின்றார். என்றும் நிலைக்கும் அவரது வல்லமையும் கடவுள் தன்மையும் (உரோ. 1:20) உறவின் வழியே உலகோரின் மனக் கண்களுக்கு வெளிப்படுத்தவும் தெளிவாக்கவும் படுகின்றன.

உறவில் வாழும் கடவுள், தாம் படைத்தவற்றோடும், மாட்சிமையும் மேன்மையும் அளித்துப் படைப்பின் சிறந்த படைப்பாகப் படைக்கப்பட்ட மனிதரோடும் உறவை வளர்க்க, உறவில் நிலைக்க, எடுத்த முயற்சிகள், விடுத்த அழைப்புகள், மீட்புத் திட்டங்கள் யாவற்றையும் திருவிவிலிய இறைவார்த்தைகள் எடுத்துச் சொல்லுகின்றன. இறைவனையே உறவாக நமக்கு வெளிப்படுத்துகின்றன. இவ்வாறு இறைத்தன்மையிலே உறவு இருப்பதனாலே இறைமையே உறவென்கிறோம், உறவே புனிதம் என்று உரைக்கிறோம்.

### மனிதமும் உறவும்

''மனிதன் தனிமையாக இருப்பது நல்லதன்று. அவனுக்குத் தகுந்த துணையை உருவாக்குவேன்'' (தொ.நூ.2:18) என்ற இறைவாக்கின் திரு வுளம், மனிதன் தனது துணையான மனைவி யோடு அமைக்கும் உறவு நிலையை மட்டுமல்ல, பெற்றோர்-பிள்ளைகள் உறவு, உடன்பிறப்புகள் உறவு, உறவுமுறை உறவுகள், குடும்ப உறவுகள் என்று உறவுச் சமூகத்தில் சங்கமிக்க வேண்டும் என்பதே. உறவோடு வாழும் போதுதான் மனிதன் வாழ்கிறான். உறவுகள் இல்லாத மனிதனின் வாழ்வு வாழ்வல்ல. வறட்சி, வெறுமை எனலாம். உறவுகளில் வாழாத மனிதன் வாழ்ந்தாலும் அவன் வாழவில்லை, அப்படி வாழ்பவன் இறைவனின் திருவுளத்திலிருந்து விலகிச் செல்கிறவனாகிறான்.' உறவே மனிதம் என்ற புரிதலைத் தொலைத்தவனாகிறான்.

### உறவும் நலமும்

உறவு விரும்பியாக, உறவுகளைப் பேணிக் காக்கும் பண்பு கொண்டவனாக மனிதன் வாழும் போது ஆரோக்கிய வாழ்வு அவனை விட்டு அகன்று போகாது. உறவைத் தொலைத்தவன் நலம் தொலைத்தவன் என்பது திண்ணம். மனோதத்துவப் பேராசிரியர் ஜோன்சனின் கருத்து இதை எண்பிக்கிறது.

''பரஸ்பர உறவுகளை நாம் எப்படி வளர்க்கிறோம், எப்படிப் போற்றிப் பாதுகாக்கிறோம் என் பதில்தான் நமது மன ஆரோக்கியம் வெளிப்படுகிறது.''

### உறவும் அன்பும்

'''உன் மீது அன்பு கூர்வது போல் உனக்கு அடுத்திருப்பவர் மீது அன்பு கூர்வாயாக'' (மாற் 12:31) என்று இறைமகன் இயேசு நமக்களித்த அன்புக் கட்டளையானது உறவில் நாம் வளர கொடுக்கப்பட்ட உறவின் கட்டளை எனலாம். காரணம், 'அன்பு' என்ற சொல்லின் செயலாக்கம் உறவில்தான் நிறைவேறுகிறது.

அன்பை அந்நியப்படுத்திவிட்டு உறவில் வளரவோ வாழவோ முடியாது. அன்பைச் செயலாக்கப்படுத்துவதே உறவில் வாழும் நிலை என்றறி தல் அவசியம்.

உறவு நிலையில் நாம் உயர்த்தி, உடன் பிறப்பு போன்று உளங்கனிந்த அன்பு காட்ட வேண்டும். பிறரை மதிக்க வேண்டும். அழுவாரோடு அழவேண்டும். நல்மனத்தவராய் இருக்க வேண்டும். உயர்வு மனப்பான்மையை தவிர்க்க வேண்டும். பெருமிதம் கொள்ளுதல் கூடாது.

தீமையை நன்மையால் வென்றிட வேண்டும் என்ற அறிவுரைகளைத் தூய பவுல் அடியார் தருகின்றார் (உரோ 12:9-21) இப்படிப்பினைகளைப் பின்பற்றி வாழும்போது நாம் உறவு நிலையில் உயர்வு பெறுவோம். நமது உறவுகள் உறுதியான வையாக இருக்கும்.

எனவே, உறவுகளில் உள்ள பிளவுகளை, முறிவுகளை அகற்றி உறவுப் பாலங்கள் அமைக்க முனைவோம். உறவுகள், செலவுகள், சுமைகள் என ஒதுங்கிச் செல்லும் மனநிலைகளை மாற்றிக் கொள்வோம். உறவுகளில் ஊனமாகிக் கொண்டி ருக்கும் சமூகச் சூழலை மாற்றுவோம். அதற்கு மாற்று மருந்தாக நாமே மாறுவோம். நம்மைச் சார்ந்தவர்களையும் மாற்றுவோம்.

உறவோடு வாழ்வது உபத்திரவ மல்ல உத்தமம் என்று உணர்தலிலும் புரிதலிலும் உயிர்ப்போம், உறவுகளோடு உயர்வோம்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வல்லமையுள்ள மறைமுக நண்பர்

- ரோஸ்லின்ட் ரெக்ஸ்

பரிசுத்த ஆவியானவரை ஒரு மறைமுக நண்பர் என்று சொல்லலாம். நம்முடனேயிருந்து சகல சத்தியத்திற்குள் நம்மை வழிநடத்தி, நம் பெலவீனமான நேரங்களில் நமக்காக பரிந்து பேசும் அற்புதமான தோழர் அவர்.

என் இறையியல் படிப்புக்காக என் பிள்ளைகளை சென்னையில் விட்டுவிட்டு சிங்கப்பூருக்குப் பிரிந்து செல்ல வேண்டிய நேரமது.



கையசைத்துவிட்டு விமானத்தில் ஏறும்போது கண்களில் கண்ணீரும், மனதில் அழுத்தமுமாய் பிராயணம் செய்தேன். பிரயாணம் முழுவதும் மனது அதிக துக்கத்தாலும் ஒரு கனமான ஆவியாலும் நிறைந்திருந்தது. அடுத்து எப்போது பிள்ளைகளைப் பார்ப்போம் என்ற நினைவு நெஞ்சை முள்ளாய்த் தைத்தது.

4 மணிநேர பயணத்திற்கு பிறகு சிங்கப்பூர் விமானநிலையத்தில் இறங்கி கனத்த என் மனதோடு, கனத்த பையையும் ஏந்தியவாறு என் மனதில் சிந்தித்தேன். 'ஐயோ என் மனதுதான் கனக்கிறதென்றால் இந்தப் பையும் இவ்வளவு கனக்கிறதே. இதை எப்படித் தூக்கிச் செல்வேன்?'

இப்படி நடக்கமுடியாமல் நடந்துகொண்டிருக்கும்போது சிரித்த முகத்தோடு ஒரு வாலிபன் 'டிரொலி'யை தள்ளிக் கொண்டு நேரே என்னிடம் வந்து சொன்னான். ''கனமான பையை ஏன் வீணாக சுமக்கிறீர்கள்? இந்த டிரொலியில் வைத்துவிடுங்கள் மேடம்'' என்று என் பையை வாங்கி அந்த டிரொலியில் வைத்துவிட்டு அப்படியே கூட்டத்தில் சென்று மறைந்துவிட்டதைப் பார்த்ததும் அதிர்ந்து போனேன். என் மனதில் உள்ள பாரச்சுமையை அவர்மேல் வைக்கும்படி ஒரு தேவதூதன் வந்து ஆறுதல்படுத்திச் சென்றதை எண்ணியதும் என் துக்கம் மாறி ஆனந்தம் நிறைந்தது.

பரிசுத்த ஆவியானவர் நம் கூடவே இருந்து நம்மைத் தேற்றி, நம்மை பலப்படுத்தி, சகல பரிசுத்தத்திற்குள்ளும் நம்மை வழிநடத்த வல்லவர். பரிசுத்த ஆவியானவர் அபிஷேகமும் அனுதினமும் அவரால் நிரப்பப்படும் அனுபவமும், ஒவ்வொரு நிமிடமும் அவரால் வழிநடத்தப்படும் உன்னத அனுபவமும் நமக்குத் தேவை. மறைமுக நண்பரான அவரது நட்பை நாம் பேணிக் காக்கும்போது இயேசுவைப்போல சாயல் உள்ளவராய் நம்மை மாற்ற வல்லவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேதாகம வினா-விடை



145. தங்கள் ராஜா பள்ளியறையில் கட்டிலில் படுத்திருக்கும்போது அவரை வெட்டிக் கொலை செய்த படைத்தலைவர்களாகிய இரு சகோதரர்கள் யார்? யார்?

146. ராஜாவாகிய தங்கள் தகப்பன், கோவிலில் பணிந்துகொள்ளும்போது அவரை வெட்டிக் கொலை செய்த இரு சகோதரர்கள் யார்? யார்?

147. மரிக்கிறதற்கு முன்னே தனக்குச் சொந்தக் கல்லறை உண்டாக்கி வைத்த ராஜா யார்?

148. தன் மனைவியை அடக்கம் பண்ண கல்லறை பூமி வாங்கிய தீர்க்கதரிசி யார்?

149. ஒரு மனைவி கிடைக்க 200 பேரைக் கொன்றவன் யார்? மனைவியினிமித்தம் 30 பேரைக் கொன்றவன் யார்?

150. கர்த்தருடைய யுத்தத்திற்கு (அம்மோனியரோடு நடந்த யுத்தம்) போனதினிமித்தம் தன் மனைவியைப் பறிகொடுத்தவன் யார்?

**விடைகள்:**

145. ரேகாப், பானா-இஸ்போசேத் ராஜா. 2 சாமு. 4:1-10.

146. அத்ரமலேக், சரேத்சேர் - சனகெரிப் ராஜா. 2 இரா 19:36, 37

147. ஆசா. 2 நாளா. 16:14

148. ஆபிரகாம். ஆதி. 20:7, 23:1-20.

149. தாவீது. 1 சாமு. 18:27; 2 சாமு. 3:14; சிம்சோன். நியா. 14:1-19.

150. உரியா தன் மனைவி பத்சேபாளை. 2 சாமு. 11:1-17.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்துவுக்காக யாவற்றையும் துறந்த பரி. குவின்டின்



கிறிஸ்துவின் நற்செய்தி பரவுவதற்காக யாவற்றையும் துறந்து இரத்த சாட்சியாக மரிக்கவும் ஆயத்தமாயிருந்த ஆதிசபையிலுள்ள பக்தர்களுள் ஒருவர், பரி. குவின்டின். இவர் ரோமாபுரியைச் சேர்ந்தவர். செனெட்டர் குடும்பமொன்றில் தோன்றியவர். தனது செல்வத்தையும், தனக்கு வரக் கூடிய பதவியையும் துறந்து நமதாண்டவரை அறியாத மக்களுக்கு, பரி. லூசியன் என்பவரைத் துணையாகக் கொண்டு தற்காலத்தில் பிரான்ஸ் என்று சொல்லப்படும் கால் நாட்டுக்குச் சென்றார்.

இவ்விருவரும் அந்நாட்டில் பல பாகங்களில் ஊழியம் செய்து ஏமியன்ஸ் பட்டணத்தைச் சேர்ந்தனர். அவ்வூரிலிருந்து பரி. லூசியன், போவியஸ் நகரை அடைந்து சுவி சேஷ விதையைப் பலர் மனதில் ஊன்றி அவ் வூரில் இரத்தச் சாட்சியாக மரித்தார்.

பரி. குவின்டின், ஏமியென்ஸ் நகரில் தங்கி தனது பரிசுத்த ஜீவியத்தாலும் சாட்சி பகருதலினாலும் அற்புதங்கள் மூலமாயும் பலரை நமதாண்டவரிடம் வழிநடத்தினார்.

அந்நாட்களில் 'ரிக்டியஸ்வாரஸ்' பிரிபெக்டராக நியமிக்கப்பட்டான். அவன் அநேக கிறிஸ்தவ பக்தரை வாளுக்கு இரையாக்கி இரத்தச் சாட்சிகள் தொகை அதிகரிக்கக் காரணமாயிருந்தான்.

கால் நாட்டின் இரண்டாம் பகுதிக்குத் தலைவனாக இருந்த வாரஸ் தனது சுற்றுப் பிரயாணத்தில் ஏமியன்ஸ் நகரில் கிறிஸ்தவர்களின் தொகை அதிகரித்திருப்பதைக் கேள்விப்பட்டு மூர்க்கம் கொண்டு பரி. குவின்டினை சங்கிலிகளால் கட்டுவித்து காவலில் போடுவித்தான்.

மறுநாள் அவரைத் தன் முன்னிலையில் கொண்டுவரச் செய்து கிறிஸ்துவைக் குறித்து பிரசங்கிக்கவும் மக்களை கிறிஸ்தவர்களாக மாற்றி ஞானஸ்நானம் கொடுக்கவும் கூடாதென்றும், மீறி அப்படிச் செய்தால் தண்டனை அளிப்பதாகவும் பயமுறுத்தினான். பரி. குவின்டின் அந்த உத்தரவுக்குக் கீழ்ப்படிய மறுத்தபோது அவரை இரக்கமின்றி வாரினால் அடித்தான். பின்னர் அவரைச் சிறிய சிறையில் போட்டு சிநேகிதரும் கிறிஸ்துவின் அடியார்களும் அவரை அணுக அனுமதி கொடுக்காதபடி அவரைக் கொடுமைப்படுத்தினான்.

இந்தக் கிறிஸ்துவின் பக்தனோ வர வர கிறிஸ்துவில் பலப்பட்டு சமாதானத்தின் கர்த்தரால் மனச்சமாதானமடைந்து சிறையில் கிறிஸ்துவைப் பாடித் துதித்துக் கொண்டிருந்தார்.

பின்னர் அவரைச் சிறைக்கூடத்திலிருந்து வெளியே கொண்டு வந்து ஜனத்திரள் முன் பலவிதமான சரீர இம்சைக்குட்படுத்தினான். இவை ஒன்றும் பரி. குவின்டினின் விசுவாசத்தைக் குன்றச் செய்யவில்லை.

ரிக்டியஸ்வாரஸ், ஏமியன்ஸ் பட்டணத்தை விட்டுப் போகும் காலம் வந்தபொழுது, குவின்டினை அவ்விடம் விட்டு வெர்மாண்டி நாட்டின் தலைநகரான அகஸ்டா வெரோமான் சோரம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் பட்டணத்திற்குக் கொண்டு போனார்கள். அங்கு கிறிஸ்துவை மறுதலித்தால் அவருக்குப் பல சலுகைகளும் பதவியும் கொடுப்பதாக வாரஸ் வாக்களித்து பரி.குவின்டினை கிறிஸ்துவைவிட்டுப் பிரிக்க முயன்றான்.

அதன் பயன் ஒன்றுமில்லை என்று கண்டு எரிச்சலடைந்து, மறுபடியும் சகிக்கவொண்ணா சரீர வேதனைகளுக்கும், கொடூரமான சித்திர வதைகளுக்கும் அவரை உட்படுத்தினான்.

கழுத்திலிருந்து முழங்கால் வரை 2 இரும்புக் கம்பிகளை பிரயோகித்தும் விரல் நகங்களுள் மெல்லிய இரும்பு ஆணிகளைப் புகுத்தியும், தலையில் தசையுள்ள பாகங்களில் கம்பிகளைக் குத்தியும் கொடுமைப்படுத்தி பரி.குவின்டின் எந்த உபத்திரவத்தையும் சகித்து கிறிஸ்துவை மட்டும் மறுதலிக்க தயாராயிராததைக் கண்டு வாரஸ், பரி. குவின்டினுடைய தலையை வெட்

எடுத்துப் பட்டணத்து அருகிலுள்ள குன்றின் அடிவாரத்தில் அடக்கம் செய்தனர். சுமார் 55 வருடங்களுக்குப் பின்னர் எசிபியா என்ற கிறிஸ்தவ பக்த மாது அந்த இடத்தில் ஒரு அழகிய ஞாபகார்த்த கட்டடம் கட்டுவித்தார். தற்பொழுது அங்கு பரி. குவின்டின் பேரால் பிரமாண்டமான அழகிய ஆலயம் ஒன்று எழும்பியிருக்கிறது.

இரத்த சாட்சிகள் தாங்கள் கிறிஸ்துவுக்காக சரீரப்பாடு அனுபவிப்பதைப் பாக்கியமாகக் கருதினார்கள். அவர்கள் பட்ட சரீரப்பாடுகளை நம்மில் அநேகர் கண்ணால் பார்க்க சகியோம். அவைகளை மனமகிழ்வோடு ஏற்றுக்கொண்டு அச்சமயத்திலும் கிறிஸ்துவைப் போற்றி அவருக்கு ஸ்தோத்திரம் செய்த பக்தர்களின் விசுவாசத்தைக் குறித்து நாம் என்ன சொல்வோம்?

## பயிற்சி வேண்டும்

இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசைப் படுங்கள்... பிலி - 2:12

குதிரைப் பந்தயத்தில் அதிக ஈடுபாடு உடைய ஒரு மனிதன், அதிவேகமாக ஓடுகின்ற ஒரு குதிரையை வாங்கி வந்தான். ஓரிரு மாதங்களுக்குப் பின்னர் நடைபெற்ற குதிரைப் பந்தயத்தில் தன்னுடைய அதிவேக குதிரையையும் பங்கு பெற வைத்தான். ஆனால் அந்தக் குதிரை எல்லாக் குதிரைகளுக்கும் கடைசியாக வந்தது.

தான் அதிவேகக் குதிரை என்று வாங்கிய குதிரை எந்த வேகமுமில்லாத குதிரையாயிருந்ததைக் கண்டு அதிர்ச்சியுற்றான்.

குதிரை விற்றவர்கள் தன்னை ஏமாற்றியதாக எண்ணினான். ஆனால் அதனை வாங்கி வந்த அவன் எந்தப் பயிற்சியும் கொடுக்கா மல் அப்படியே வைத்திருந்ததால், அது வேகத்தை இழந்து போனது.

இரட்சிப்பின் அனுபவம் வல்லமையானதுதான். கர்த்தராகிய இயேசுவினால் வருகின்ற பாவ விடுதலை சக்தி மிக்கது தான்.

ஆனால் அந்த அனுபவம் தினமும் உயிரோட்டமாக வைக்கப்படவேண்டும். நாம் அசதியாயிருந்தால் அந்த அனுபவத்தில் பெரிய வல்லமை இராது. நாம் இயேசுவை ஏற்றுக்கொண்டதோடு, தொடர்ந்து அவருடைய அன்பிலும், ஐக்கியத்திலும் வளரவேண்டும். நாம் ஆவிக்குரியவர்களாக விளங்கப் பிரயாசைப்பட்டு நல்ல பயிற்சிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

ஜெபம், வேத தியானம், கர்த்தரை இருதயத்தில் தியானித்தல், சத்தியத்தைக் குறித்துச் சிந்தித்தல், கர்த்தருக்காக வாழ்வ தைக் குறித்து யோசித்தல், பரிசுத்தமாக வாழ் வதில் வாஞ்சையாயிருத்தல், ஆவிக்குரிய நல்ல ஐக்கியங்களைத் தேடுதல் போன்ற விஷயங்களால் இரட்சிப்பின் அனுபவத்தைப் பாய்ந்து செல்லும் குதிரையைப் போல பழக்கிக்கொண்டிருக்கவேண்டும். அப்போது நாம் ஆவிக்குரிய விஷயங்களில் எப்போ தும் அனலாகவும், ஆற்றலுடையவர்களாகவும் விளங்க முடியும்.

**- சாம்சன் பால்**

டிப் போட்டான்.

இது கி.பி. 287ஆம் வருஷம் அக்டோபர் மாதம் 31ஆம் திகதி நடந்தது.

அவர் சரீரத்தையும் அடக்கம் பண்ண விடாமல் சோம் நதியில் எறிந்தான். சில நாட்கள் கழித்து சில கிறிஸ்தவ பக்தர்கள் அச்சடலத்தை

அந்தச் சிறந்த இரத்தச் சாட்சிகளின் மரணமே கிறிஸ்தவ சபையின் வித்தும் ஐரோப்பிய சபைகளின் வளர்ச்சிக்குக் காரணமுமாயிருந்தது.

- A.R. இராஜரத்தினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆண்டவர் பட்ச பாதமற்றவர்!

''நீ வலதுபுறத்திலும் இடதுபுறத்திலும் இடங்கொண்டு பெருகுவாய்; உன் சந்ததியார் ஜாதிகளை சுதந்தரித்துக் கொண்டு, பாழாய்கிடந்த பட்டணங்களைக் குடியேற்றுவிப்பார்கள்'' (ஏசாயா 54:3).

யாபேஸ் என்ற மனிதன் தேவனை நோக்கி: ''தேவனே, நீர் என்னை ஆசீர்வதித்து என் எல்லையை பெரிதாக்கும்'' என்று பிரார்த்தனை செய்தான். கர்த்தர் அவனுடைய விண்ணப்பத்தைக் கேட்டார் (1 நாளா: 4:10). ஆம்! ''இந்த ஏழை கூப்பிட்டான், கர்த்தர் கேட்டு, அவனை அவன் இடுக்கண்களுக்கெல்லாம் நீங்கலாக்கி இரட்சித்தார்'' (சங்.34:6) என்ற வசனம் எத்தனை உண்மையானது! ஆண்டவர் பட்சபாதமற்றவர். தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும் அவர் நல்லவராகவே இருக்கிறார் (புலம்பல் 3:25)

ஒரு தம்பதியர், பல வாடகை வீடுகளிலே மிகவும் கஷ்டப்பட்டு, வேதனைப்பட்டு, ''நமக்கென்று ஒரு வீடு சொந்தமாகக் கிடைத்தால் எவ்வளவு நலமாய் இருக்கும்?'' என்று எண்ணினார்கள். அவர்கள் கையிலோ சேமிப்பு ஏதும் கிடையாது. ஆனால், அவர்கள் ஆண்டவர் மீது அளவில்லாத அன்பு கொண்டவர்கள். அவருக்காக தங்களால் இயன்றதை ஊழியமாகச் செய்யவும், தங்கள் சொற்ப வருவாயில் தசம பாகத்தை ஆண்டவருக்குக் கொடுப்பதில் ஜாக்கிரதையாயிருக்கவும் கவனமாயிருந்து, ஆண்டவரைப் பின் பற்றி வந்தார்கள்.

''கர்த்தராகிய நானே ஒவ்வொருவனுக்கும் அவனவன் வழிகளுக்கும் செய்கைகளின் பலன்களுக்கும் தக்கதைக் கொடுக்கும் படிக்கு, இருதயத்தை ஆராய்கிறவரும் உள்ளிந்திரியங்களை சோதித்தறிகிறவருமாயிருக்கிறேன்'' (எரே. 17:10) என்ற வசனத்தின்படி, அவர்கள் விருப்பத்தை ஆராய்ந்தறிந்து, அதை நிறைவேற்றிக் கொடுக்க வழிகளைத் திறந்தார். அவர்கள் அவரிடம் கேட்டது ஒரு சிறிய வீடுதான்! ஆனால் ஆண்டவரோ ஒரு பெரிய வீட்டை ஆச்சரியமான முறையில் அருளிச் செய்தார்.

அன்பு நண்பர்களே, உங்கள் இருதயத்தின் வேண்டுதலையும் ஆண்டவர் அறிந்திருக்கிறார். மேற்கண்ட வாக்குத்தத்த வசனத்தின்படி, ''வலதுபுறமும், இடதுபுறமும் உங்களையும் இடங்கொண்டு பெருகச் செய்ய'' அவர் வல்லமையுள்ள தேவனாயிருக்கிறாரே! அவர் உங் களை அதிசயங்களைக் காணப் பண்ணுவார் (மீகா 7:15). அவரை உறுதியாய் நம்பி ஸ்தோத் திரிப்பதில் மாத்திரம் கவனமாய் இருங்கள். ஏற்ற சமயம் உங்களை பெருகச் செய்து அள வில்லாமல் ஆசீர்வதிப்பார்.

**ஜெபம்:** ''அன்பு தெய்வமே, உண்மையான உம்முடைய அன்புக்கு நான் என்ன காணிக்கை செலுத்துவேன்? இத்தனை நாட்களும் என்னை நினைந்தருளி வழிநடத்தின உம் அன்புக்காக உமக்கு நன்றி செலுத்துகிறேன். யாபேசை ஆசீர் வதித்தது போன்று இன்று என்னையும் வலது புறமும் இடதுபுறமும் நீர் பெருகச் செய்வீர் என்று விசுவாசித்து உமக்கு நன்றி செலுத்துகிறேன். இயேசுவின் நாமத்தில் பிதாவே. ஆமென்!''

- போல்ராஜ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயேசுவின் முகத்தை துடைத்தாள் வெரோனிக்கா



**முதல்:** இயேசுவே, உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியும் புகழையும் செலுத்துகின்றோம்.

**எல்:** ஏனென்றால் உம்முடைய திருச் சிலுவையைக் கொண்டு உலகை மீட்டீரே.

இயேசுவின் தியாகத்தின் ஆறாம் நிலை இது.

தன் முகத்தை வெரோனிக்கா என்ற பெண் துடைப்பதை இயேசு ஏற்கிறார். இயேசுவின் தியாகத்தின் மற்றொரு பரிமாணம் தன் அழகைத் தியாகம் செய்கிறார்.

அழகிழந்த மக்களான பாவிகள், வரிதண்டுபவர்கள், நோயாளிகள், பேய் பிடித்தவர்கள், இவர்களுக்காக, இயேசு தம் அழகை இழக்கிறார். தன் அழகான முகத்தை சித்திரவதைக்கு கையளிக்கின்றார்.

முட்களால் பிண்ணப்பட்ட மகுடம் அவரின் முகத்தை அகோரப்படுத்துகையில் வெரோனிக்கா அவருக்கு துணையாக வருகிறார். இயேசு தன் திருமுகத்தை அப்பெண் கொண்டு வந்த வெள்ளைத் துணியில் பதிக்கின்றார்.

### தியானிப்போம்

★ அழகு நிறைந்தவராய், கவரும் தோற்றம் அடைந்தவராய் இருக்க வேண்டியவர் ஏன் கோரக் காட்சியளிக்க முன் வந்தார்?

★ இந்நிலை வராமல் அவரால் தடுத்திருக்க வாய்ப்புகள் இருந்தும் ஏன் அவற்றை அவர் மேற்கொள்ளவில்லை?

★ இவ்வாறு சித்திரவதைகளை ஏன் தாங்குகிறார்?

ஒவ்வொரு மனிதரும் தம் புறத் தோற்றத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பார். அழகு என்பது கண்ணாலோ, காதாலோ, மனதாலோ அனுபவிக்கும் இனிமை அல்லது மகிழ்ச்சியாகும். மற்றவரின் பார்வையில் தாம் எப்போதும் அழகு நிறைந்தவராய் இருக்க விரும்பும் பண்பு பலரிடம் உள்ளது.

மற்றவர்களின் அழகைப் பெரிதுபடுத்தி தங்களையே வெயிலிலும், மழையிலும், பனியிலும் வாட்டி வதைக்கும் எண்ணற்றோர் நம் உலகில் இருக்கின்றார்களே.

அழகையும் பருவத்தையும் இழந்து, அடுத்தவர்களின் வசதிகளைப் பெரிதாக்கும் கூலித் தொழிலாளர்கள், விவசாயிகள், வீதிப் பராமரிப்புத் தொழிலாளர்கள், சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் போன்ற எத்தனை எத்தனை மக்கள் நம் அருகில் வாழ்கின்றார்கள்.

இவர்களும் இயேசுவை போன்று தியாகம் செய்கின்றார்களே. இவர்கள் செய்கின்ற தியாகம் நம்மை மாற்ற வேண்டுமென்று சேர்ந்து செபிப்போம்.

### மன்றாடுவோம்

தியாகத்தின் இருப்பே இயேசுவே! புறத்தோற்றத்தில் பெருமைகொள்ளும் நாங்கள், அகத்தோற்றத்திற்கும் அகப்பார்வைக்கும் முக்கியத்துவத்தை அளிக்க கற்றுத் தாரும்.

உம்மைப் போன்று தியாகம் நிறைந்த மனப்பான்மையோடு எங்கள் பார்வையை உயர்த்த வரம் கேட்கிறோம். அழகை இழந்து தவிக்கும் எம்மவரில் உம்மை காண எங்களுக்கு நற்பார்வையைத் தந்தருள வேண்டுகிறோம்.

புற அழகைக் கண்டு மனம் மயங்கி அக அழகை மறுதலிக்கும் எம் மனங்களை மாற்றியருளும்.

**ஆமென்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாஸ்திரியாரின் குறை தீர்த்த ஆண்டவர்

1795 ஆம் ஆண்டு வேதநாயகத்துக்கும் அவருடைய அத்தை மகள் வியாகம்மாளுக்கும் திருமணம் நடந்தது. ஆனால் அடுத்த ஆண்டே வியாகம்மாள் மரித்து விட்டார். தொடர்ந்து 1798ஆம் ஆண்டு வளர்ப்புத் தந்தை ஸ்வார்ட்ஸ் குருவும் மரித்துப் போய்விட்டார். அடுத்த ஆண்டு அவர் இலங்கைக்குச் சென்றிருந்தபோது அவருடைய தந்தையும் இறந்து விட்டார்.

வேதநாயகம் மனந்தளர்ந்து போகவில்லை. இந்த வேளையில் அவர் ஆண்டவரைத் தஞ்சமாகக் கொண்டு பல பாடல்களை எழுதினார்.

1801ஆம் ஆண்டு கோலப் குரு, வேதநாயகத்துக்கு அவருடைய மாமன் மகள் மிக்கேல் முத்தம்மாளை மறுமணம் செய்துவைத்தார். இவர்களுக்குப் பிள்ளையில்லாதபடியால் வேதநாயகம் தனது சகோதரியின் மகள் ஞானதீபத்தை வளர்ப்பு மகளாக ஏற்றுக்கொண்டார்.

வேதநாயகம் தம் 34ஆம் வயதுக்குள் 52 நூல்களை எழுதிவிட்டார். இந்த நூல்கள் அனைத்தும் கிறிஸ்தவ சத்தியங்களை விளக்கும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண்டவரே உம்மை வணங்குகிறேன்

★ ஆண்டவரே, நான் உண்மையாகவே உம் ஊழியன்.

**- உம்மை வணங்குகிறேன்**

★ ஆண்டவரே, நீரே என் ஆற்றல், என் பாடல், என் மீட்பு.

**- உம்மை வணங்குகிறேன்**

★ ஆண்டவரே, நீரே எனக்குரிய பங்கு.

**- உம்மை வணங்குகிறேன்**

நூல்களாக விளங்கின. இவரது புலமையைப் பாராட்டி, 1808ஆம் ஆண்டு தஞ்சை திருச் சபையினர் 'வேதசிரோமணி மகாஞான கவிச் சக்கரவர்த்தி' என்ற பட்டத்தை அளித்து கௌர வித்தார்கள். தரங்கம்பாடி சபையினர் இவர் எழுதிய 'ஞான நொண்டி' நாடகத்தை அரங்கேற் றினார்கள். இவருக்குச் 'சுவிசேட கவிராயர்' என்ற பட்டமளித்து, பல்லக்கில் ஏற்றிச் சென்று சிறப்பித்தார்கள்.

1809ஆம் ஆண்டு வேதநாயகம் சென்னையி லுள்ள வெப்பேரி ஆலயத்தில் பெத்லகேம் குற வஞ்சி நூலை அரங்கேற்றி, நூலுக்கு விளக்கம் கொடுத்தார். இந்தச் சபையார் இவருக்கு 'ஞான தீபக் கவிராயர்' என்ற பட்டத்தை அளித்துக் கௌரவித்தார்கள்.

1811ஆம் ஆண்டு வேதநாயகம் தம் குடும் பத்துடன் இலங்கை வந்தார். வடகாற்று இல்லாத படியால் தோணி ஓடத் தடை ஏற்பட்டது. இவரி டமிருந்த பணமும் செலவாகியிருந்தது. எனவே ஒரு பாடலைப் பாடி தேவனை நோக்கி ஊக்க மாக வேண்டினார். உடனே வடகாற்று வீசத் தொடங்கியது. தோணியும் இலங்கையை வந்த டைந்தது. ஆனால் கூலி கொடுக்க கையில் பண மில்லை.

ஓடக்காரன் சாமான்களைத் தூக்கிவர, குடும் பத்தை அழைத்துக்கொண்டு தம் நண்பரான கிறிஸ் தியான் தாவீது பாதிரியார் வீட்டைச் சென்றடைந்தார். அவர் வேதநாயகத்தையும் அவ ருடைய குடும்பத்தாரையும் அன்போடு வரவேற் றார். அவரிடம் வேதநாயகம் ஒன்றும் சொல்லா மலிருந்தாலும் தாமாகவே ஓடக்காரனுக்கு கூலி கொடுத்து அனுப்பி வைத்தார். இறைவன் தம்மை நம்புகிறவர்களை எவ்வாறு அற்புதமாக நடத்து கிறார் என்பதை உணர்ந்து வேதநாயகம் அவ ரைத் துதித்தார்.

பாதிரியார் வீட்டில் சில நாட்கள் தங்கிய பிறகு வேதநாயகம் தனியாக ஒரு வீடு எடுத்துத் தம் ஊழியத்தைத் தொடங்கினார். ஒருமுறை அவரு டைய குடும்பத்தினர் தங்கள் உடைகளை ஒரு சலவைக்காரனிடம் கொடுத்திருந்தார்கள். ஆனால் அவனிடமிருந்து துணிகள் அனைத் தும் களவு போயிற்று. அடுத்த வேளை உடுக் கக்கூட மாற்றுத் துணி இல்லை. இதனால் அவ ருடைய ஊழியம் தடைப்பட்டது. அப்போதும் அவர் கலங்காமல் ஒரு புதிய கீர்த்தனையை இயற்றிப் பாடினார்.

அவர் பாடலை உரக்கப் பாடிக்கொண்டிருந்த போது வெளியே சாலையில் சென்று கொண்டி ருந்த இராமலிங்க பிள்ளை என்பவர் அதைக் கேட்டு மனம் உருகினார். உடனே உள்ளே ஓடிய அவர் வேதநாயகத்தின் நிலையை அறிந்தார். கடைக்குச் சென்று வேண்டிய துணிமணிகளை வாங்கிக்கொடுத்தார். மேலும் செலவுக்காக கையில் பணமுடிப்பையும் கொடுத்தார்.

1815ஆம் ஆண்டு திருச்சி ராப்பள்ளியில் வேதநாயகம் தம் பேரின்பக் காதல், சாஸ்திரக் கும்மி என்ற இரண்டு நூல்களையும் அரங்கேற்றி னார். தொடர்ந்து 45 நாட்கள் இந்த நூல்களி லுள்ள பாடல்களைப் பாடி மக்களின் விசுவாசத் தைப் பலப்படுத்தினார்.

கடைசி நாளில், கிறிஸ்தியான் போலே குரு அவருக்கு நீல நிற அங்கி அணிவித்து, 'வேத சாஸ்திரியார்' என்ற பட்டத்தை அளித்தார். அன்று முதல் இவர் வேதநாயகம் சாஸ்திரியார் என்று அழைக்கப்பட்டார்.

சாஸ்திரியார் பல நூல்களை எழுதியது மட்டு மல்லாமல் ஒவ்வொரு வருடமும் தபசு நாட் களில் தஞ்சையில் தம் வீட்டுக்கு முன்பாக இயேசுவானவரின் வாழ்க்கையைப் பஜனையாக வடிவமைத்துப் பாடி, அங்கே கூடிவந்த கிறிஸ்த வர்களை மட்டுமின்றி, மற்றவர்களையும் மகிழ் வித்தார்.

சாஸ்திரியாரின் இரண்டாம் மனைவியும் மரித் துப்போனபடியால் அவர் தம் 55ஆவது வயதில் வரோதய அம்மாளை மணந்து கொண்டார். இவர்களுக்கு நோவா ஞானாதிக்கம், தேவ சிகாமணி என்ற ஆண்மக்களும், மனோன்மணி என்ற பெண் பிள்ளையும் பிறந்தார்கள். இவர்கள் அவருடைய ஊழியத்தில் பெரும் பங்கு வகித் தார்கள்.

**தொடரும்**

- ம. ஜெயசந்திரன் -
ம. இஸ்ரவேல் சீனிவாசகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**1930ஆம்** ஆண்டு மே மாதம் 19ஆம் திகதி, பரணங்ஙானம் பங்கு கோவிலின் பீடத்தில் மெழுகுவர்த்திகள் எரிந்தன. அலங்கரிக்கப்பட்ட பீடத்தின் முன் எட்டு கன்னியர்கள் கண்களை மூடி, கைகளை கூப்பி பக்திக் கடலில் மூழ்கி நின்றிருந்தார்கள். அவரில் ஒருவர் அல்போன்சா. அவர்கள் திருமண ஆடை உடுத்தி, ஆபரணங்களை அணிந்து புது மணப் பெண்களைப் போலக் காணப்பட்டார்கள்.

'ஆன்மாவின் தங்க விளக்கில், பக்தியின் எண்ணெயை நிரப்பி, அந்த நல்ல நேரத்துக்காக அல்போன்சா காத்து நின்றார். வெள்ளை ஆடை உடுத்தி காதிலும், கழுத்திலும் தங்க ஆபரணங்கள் அணிந்து, பக்திப் பரவசத்துடன் தன் ஆன்மீக மணவாளனை வரவேற்க, அவருக்குத் தன்னைத்தானே அர்ப்பணிக்க, துடிக்கும் இதயத்துடன் அவர் காத்திருந்தார். மறைமாவட்ட ஆயர் காளாசேரில் ஜெயிம்ஸ் ஆண்டகை அவர்கள் இந்தக் கன்னியர்களுக்கு துறவற ஆடைகளை வழங்க வந்தார்.

பெரியம்மா, அன்னக்குட்டியின் திருமணத்திற்காக வாங்கி வைத்த உடைகளும் ஆபரணங்களும்தான் அவர் அன்று அணிந்திருந்தவை. அன்னக்குட்டி இறந்து, அல்போன்சாவாக மறு பிறவி எடுக்கும் அந்த நன்னாளைக் காண பெரியம்மா உயிரோடு இருக்கவில்லை.

சடங்குகள் ஆரம்பமானது. ஒரு குறிப்பிட்ட நேரத்தில் மணவாட்டிகள் தங்கள் உடைகளை மாற்றி, துறவற ஆடைகளை அணிந்தார்கள். நிலையற்ற உலக இன்பங்களை விட்டுவிட்டு, நிலையான வாழ்க்கையைத் தேர்ந்தெடுப்பதன் அடையாளமாக இந்தச் சடங்கு நிகழ்ந்தது.

'சிலுவையில் மூன்று ஆணிகளில் தொங்கிய இயேசு கிறிஸ்துவை உன் மணவாளனாக ஏற்றுக்கொள்' என்று கூறி ஆயர் பாடுபட்ட சொரூபத்தைப் புதுக்கன்னியர்களுக்கு வழங்கினார்.

அல்போன்சா தன் ஆன்மீக மணவாளனை முழுமனதுடன் முத்தமிட்டார். அத்துடன் கற்பு, ஏழ்மை, கீழ்ப்படிதல் எனும் மூன்று ஆணிகளால் அவருடன் சிலுவையில் அறையப்பட முன் வந்தார். தன் மணவாளனுக்காக உலகத்தின் அனைத்து இன்பங்களையும் துறக்கத் தயாரானார்.

சடங்குகள் முடிந்தன. புதுக்கன்னியர்களின் உற்றார் உறவினர்கள் கலங்கிய கண்களுடன் பிரியாவிடை சொல்லிச் சென்றார்கள். அல்போன்சம்மாவும் அப்பாவுக்கும் உறவினர்களுக்கும் நன்றி கூறி மடத்திற்குள் சென்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் காலத்தில் தற்பொழுது உள்ள மாதிரி நவதுறவறம், கிளாரம்மா மடத்தில் இருக்கவில்லை. நித்திய வார்த்தைப்பாடு வரை நவகன்னியர்கள் ஒரே தலைவியின்கீழ் வாழ்ந்து, வெவ்வேறு வேலைகள் செய்து, பயிற்சி பெற்று வந்தனர்.

1930 மே 22 அன்று துறவற ஆடை, அணிந்த மூன்றாவது நாள், தன் படிப்பைத் தொடர்வதற்காக அல்போன்சா சங்ங்னா சேரிக்கு அனுப்பப்பட்டார். அங்கே வாழப் பள்ளி எம்.எச். பள்ளியில் ஒன்பதாம் வகுப்பில் சேர்க்கப்பட்டார். மடத்திலிருந்து பள்ளிக்குச் செல்லும்போதும் திரும்பி வரும் பொழுதும் அவர் செபமாலையைச் செபித்தார். படிப்பில் அதிக அக்கறை காட்டினார். ஆனால், இரத்தக் கசிவு நோய் அவரைத் தாக்கியதால் படிப்பைத் தொடர முடியவில்லை.



வழக்கமாகக் காணப்படும். ஆனால் தன்னைத் துன்புறுத்தியவர்களையும் தன்னிடம் கோபம் கொண்டவர்களையும் வெறுத்தவர்களையும்

# ஆன்மா எனும் தங்க விளக்கு

சிகிச்சை பலன் தரவில்லை. கடைசியில் அறு வைச் சிகிச்சைக்காக எர்ணாகுளம் பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அறுவை சிகிச் சைக்குப் பின், சிறிது நாட்கள் அங்கேயே இருந்தபோது ஒரு மருத்துவர் அல்போன்சா வின் அழகில் மயங்கி, அவரின் கற்பைச் சூறை யாட முயன்றார். தன் கற்பைப் பாதுகாக்க உயி ரையும் கொடுக்கத் தயாராக இருந்த அல் போன்சா, மருத்துவரின் எதிர்பாராத தாக்கு தலை, தன் முழு சக்தியுடன் எதிர்த்தார். இயே சுநாதர் அவருக்குப் பலத்தைக் கொடுத்தார். காட்டுமிராண்டித்தனமாக நடந்துகொண்ட அந் தக் காமவெறியனின் பிடியிலிருந்து அற்புத மாகக் காப்பாற்றப்பட்டார். இன்னும் ஒரு நொடிப்பொழுதும் அங்கே தங்க விரும்பாமல், குணமாவதற்கு முன் மடத்திற்குத் திரும்பினார்.

பரணங்ஙானம் மடத்தில் தன் வாழ்க்கை யைத் தொடர்ந்தார். உயர் அதிகாரிகளுக்குக் கீழ்ப்படிந்து நடந்தார். பிறரிடம் மிக அன்பாக பழகினார். பல இடங்களில் பல சூழ்நிலை களில் பிறந்து வளர்ந்தவர்களுடன் செயல்படும் பொழுது கோபமும், பொறுமையின்மையும் உண்மையாக நேசித்தார். துன்பங்களையும் வேதனைகளையும் இயேசுவுக்கு அர்ப்பணித் தார். எல்லாவிதத் தீமைகளையும் அன்பால் வெல்ல முடியும் என்று தன் வாழ்க்கை வழி யாக நிரூபித்தார்.

'நான் ஒரு புனிதையாக வேண்டும்' என்று விரும்பினார். அந்தக் குறிக்கோளை அடைய எல்லாவித இன்பங்களையும், சுகங்களையும் துறந்து தன்னை முழுவதும் தியாகம் செய்யத் தயாரானார்.

இப்படிப்பட்ட தியாகத்தின் வழியாக முடி வற்ற ஆனந்தத்தை அனுபவிக்க முடிந்தது. அர்ப் பண வாழ்க்கையின் அடிப்படைத் தத் துவமான கற்பு, ஏழ்மை, கீழ்ப்படிதல் என்றும் புண்ணியங் களைக் கடைப்பிடித்து வாழ்வது அவருக்கு எளி தாக இருந்தது.

**தொடரும்**

- டேரா. லி. பெரியதத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மன்னியாமை விலங்கு அகற்ற...

வாழ்வின் சில அடிப்படைக் காரியங்களை ஒட்டிய ஒரு செபம் இங்கு கொடுக்கப்படுகிறது. அதை மெதுவாக, கவனமாகச் செபிக்கும் பொழுது ஒவ்வொரு பகுதியிலும் தூய ஆவியானவர் இன்னின்ன சூழ்நிலைகளை, ஆட்களை உங்கள் நினைவுக்குக் கொண்டு வருவார். சிறிது நேரம் அமைதியில் தியானிப்போம்.

'நீங்கள் வேண்டுதல் செய்ய நிற்கும்போது யார் மேலாவது நீங்கள் மனத்தாங்கல் கொண்டிருந்தால், மன்னித்துவிடுங்கள். அப்போது விண்ணகத்தில் உங்கள் தந்தையும் உங்களுடைய குற்றங்களை மன்னிப்பார்' (மாற் 11:25). இயேசு நம் வாழ்வின் மையமாக இருக்கும்பொழுது நம்முள் ளும் பிறருடனும் அவரது ஒப்புரவை நாம் எதிர் பார்க்கலாம். தூய ஆவி நம் முறிந்த உறவுகளை அப்படியே விட்டுவிட மாட்டார்.

நம் சொந்த வல்லமையால் நாம் மன்னிக்க வேண்டுமென்று அவர் எதிர்பார்ப்பதுமில்லை. நாம் அனுமதித்தால் அவரே அதை நம் வழியாகச் செய்துவிடுவார். உங்கள் வாழ்க்கையில் தொடர்புள்ளவர்களோடு ஒப்புரவாக முடிவு செய்யுங்கள். அவர்களையும், ஏன் உங்களையுமே விடுவிக்க முடிவு செய்யுங்கள். காலம் குறுகியது, மன்னியாமை என்ற விலங்குகளுக்குள் மாட்டிக் கொண்டு விலையுயர்ந்த வாழ்வை வீணாக்கிக் கொள்ள வேண்டாம்.

மன்னியாமை பேய் ஒழியட்டும். அதற்காக நீங்கள் வருந்தமாட்டீர்கள். புதைக்கப்பட்டுள்ள கோபம், மனக்கசப்பு, மன எரிச்சல் போன்றவற்றை மன்னிப்பின் மூலம் வெளியேற்றுவதற்கு,

**மன்னிப்புச் செபம்**

'கிறிஸ்து இரத்தம் சிந்தி தம் அருள் வளத்திற்கு ஏற்ப நமக்கு மீட்பு அளித்துள்ளார். இம் மீட்பால் குற்றங்களிலிருந்து நாம் மீட்புப் பெறுகிறோம். அந்த அருளை அவர் நம்மில் பெருகச் செய்து அனைத்து ஞானத்தையும் அறிவுத் திறனையும் தந்துள்ளார்' (எபே 1:7-8).

அன்புத் தந்தையே! என் வாழ்வில் சம்பந்தப்பட்ட ஒவ்வொருவரையும், என்னையும் கூட மன்னிக்க முடிவு செய்கிறேன். ஏனெனில் நீர் என்னை மன்னித்து விட்டீர். இந்த அருளுக்காக நன்றி ஆண்டவரே, என் பாவங்கள், குற்றங்கள், குறைகள் இவற்றுக்காகச் சிறப்பாக என்னையே மன்னிக்கிறேன். நான் உத்தமனாக இல்லாததற்காக என்னையே மன்னிக்கிறேன். நான் என்னையே ஏற்றுக்கொள்கிறேன். என்னிலேயே குறைகண்டு என்னையே எனக்கு கேடுகெட்ட பகைவனாக்கிக் கொண்டதை நிறுத்திவிடுகிறேன். எனக்கு எதிராக நான் கொண்டிருந்த எல்லாவற்றையும் விட்டு விட்டு விடுதலையாகிப் பரிசுத்த ஆவியின் வல்ல மையால் இன்று என்னோடு சமாதானம் செய்து கொள்கிறேன்.

என் தாயிடம் நான் கண்ட குறைக்காக, அறிந்தோ அறியாமலோ என்பால் அவர் அன்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலுத்தத் தவறியதற்காக, சிறப்பாக அவரை மன்னிக்கிறேன். ஏதாவது ஒரு வகையில் என் னைத் தவறாகப் பயன்படுத்தியதற்காகவும், எனக்கு ஆழ்ந்த நிறைவுதரக்கூடிய அன்னைக்கு ரிய ஆசீரை வழங்கத்தவறியதற்காகவும் அவரை மன்னிக்கிறேன். அவரை விடுவித்து அவரோடு சமாதானம் செய்து கொள்கிறேன்.

என் தந்தையிடம் நான் கண்ட குறைக்காக அறிந்தோ, அறியாமலோ என்பால் அவர் அன்பு செலுத்தத் தவறியதற்காக, சிறப்பாக அவரை மன் னிக்கிறேன். என்னை பல வகைகளில் தவறாகப் பயன்படுத்தியதற்காக, பரிவில்லாத செயல்களுக்காக, இழைத்த தீங்குகளுக்காக, என் தேவைகளை நிறைவேற்றாமைக்காக அவரை மன்னிக்கிறேன். ஒரு தந்தைக்குரிய ஆசீரை முழுமையாகவும் நிறைவுதரக்கூடிய வகை யிலும் எனக்கு வழங்காத அவரை மன்னிக்கி றேன். அவரை விடுவித்து அவரோடு சமாதா னம் செய்து கொள்கிறேன்.

என் வாழ்க்கைத் துணையிடம் நான் கண்ட குறைக்காக, அறிந்தோ அறியாமலோ என்பால் அன்பு செலுத்தத் தவறியதற்காக, சிறப்பாக அவரை மன்னிக்கிறேன். எங்கள் உறவில் ஏற் பட்ட புண்களுக்காக அவரை மன்னிக்கிறேன். அவரை விடுவித்து அவருடன் (அவளுடன்) சமாதானம் செய்து கொள்கிறேன்.

என் குழந்தைகள் செய்த தீங்குகளுக்காக, சிறப்பாக அவர்களை மன்னிக்கிறேன். அவர் களை விடுவித்து அவர்களோடு சமாதானம் செய்துகொள்கிறேன். ஆண்டவரே அவர்களை ஆசீர்வதியும். என்னுடைய சகோதர சகோதரிக ளிடம் நான் காணும் குறைக்காக, அன்பின்மைக் காகச் சிறப்பாக அவர்களை மன்னிக்கிறேன்.

என் உறவினர்களின் துர் பிரயோகத்திற்காக, சிறப்பாக அவர்களை மன்னிக்கிறேன். என் முன் னோர்கள் செய்த கெடுதலான செயல்கள் இன்று என் வாழ்க்கையைப் பாதித்துள்ளன. கடவுளின் பிள்ளை எனச் சுதந்திரமாக வாழத் தடையாய் உள்ளன. அதற்காக அவர்களை மன்னிக்கிறேன். அவர்களை விடுவித்து அவர் களோடு இயேசுவின் பெயரில் சமாதானம் செய்து கொள்கிறேன்.

என் நண்பர்களிடம் நான் கண்ட குறைபா டுள்ள செயல்களுக்காக, அன்பின்மைக்காக, சிறப்பாக அவர்களை மன்னிக்கிறேன். எங்கள் நட்புறவைத் தவறாகப் பயன்படுத்தி என்னைத் திசை திருப்பியதற்காக அவர்களை மன்னிக்கி றேன். பரிசுத்த ஆவியின் வல்லமையில் அவர் களை விடுவித்து அவர்களோடு சமாதானம் செய்கிறேன். இன்றும் நேற்றும் என் முதலாளி யிடம் நான் கண்ட குறைக்காகவும் அன்பின் மைக்காகவும் சிறப்பாக அவர்களை மன்னிக் கிறேன். அவர்களை விடுக்கிறேன். அவர்களை ஆசீர்வதிக்கும்படி இயேசுவின் நாமத்தில் செபிக் கிறேன்.

ஆசிரியர்கள், வழக்கறிஞர்கள், மருத்துவர் கள், தாதியர்கள், குருகுலத்தினர் இவர்களிடம் நான் கண்ட குறைக்காகவும், அன்பின்மைக்காக வும், தவறான செயல்களுக்காகவும், சிறப்பாக அவர்களை மன்னிக்கிறேன். அவர்கள் யாவரை யும் இயேசுவின் பெயரில் விடுவிக்கிறேன்.

சமூகத்தில் ஏதாவது ஒரு வகையில் எனக்குத் தீங்கு செய்த ஒவ்வொருவரையும், எனக்கும் என் குடும்பத்திற்கும் மாபாதகம் செய்தவர்களை யும் மன்னிக்கிறேன். கிறிஸ்தவ மதிப்பீடுகளுக்கு எதிராகச் சட்டங்களை இயற்றியவர்களையும் மன்னிக்கிறேன். வேதனையும், தொந்தரவும் அநியாயமாகச் செய்து அடையாளம் தெரியாத படி மறைவாய் இருப்போரையும் மன்னிக்கி றேன்.

வானகத் தந்தையே, என் வாழ்வில் எனக்கு மிகப் பெரும் தீங்கு செய்த ஒருவரை, என்னைப் புண்படுத்தி என் கோபத்துக்கு ஆளானவரை மன்னிக்க முன் வருகிறேன். மேலும் எனக்கு மிகவும் தீங்கு செய்த குடும்ப உறுப்பினர் ஒருவ ரோடு, ஒரு நண்பரோடு, ஓர் அதிகாரியோடு சமாதானம் செய்து கொள்கிறேன்.

ஆண்டவரே, இன்னும் எவரை நான் மன் னிக்க வேண்டும்? (அமைதியாக உற்றுக் கேட் கவும்). அன்புத் தந்தையே, என்னை விடுவித்த மைக்கு உமக்கு நன்றி. எனக்குத் தீங்கு செய்த வர்களை ஆசீர்வதித்தருளும். அவர்கள் ஒவ் வொருக்கும் விசேஷ கிருபை செய்யும்.

நன்றி ஆண்டவரே, உம்மைப் புகழ்கிறேன்.

**ஆமென்.**

## ஆண்டவரே உம்மை வணங்குகிறேன்

★ ஆண்டவரே, நீரே என் புகலிடம், நீரே என் கேடயம்.

**- உம்மை வணங்குகிறேன்**

★ ஆண்டவரே, என் மனதிற்கு வலிமை அளித்தீர்.

**- உம்மை வணங்குகிறேன்**

★ ஆண்டவரே, உமது ஆளுகை தலை முறை தலைமுறையாயுள்ளது.

**- உம்மை வணங்குகிறேன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தவறு யாருடையது?

அக்கரைக்குப் போவோம் என்று கூறி இயேசு சீடர்களுடன் படகில் ஏறிப் பயணப்பட்டார். இயேசு படகில் தூங்கிக்கொண்டிருந்தார். அப்பொழுது பலத்த காற்று அடித்து, படகை பயங்கரமாக அசைத்தது. சீடர்கள் பயந்து இயேசுவை எழுப்பினார்கள். இயேசு எழுந்து காற்றையும் கடலையும் அதட்டினார். காற்றும் கடலும் அவர் கட்டளைக்குக் கீழ்படிந்து அடங்கி அமைதியாயின.

இயேசு சீடர்களைப் பார்த்து 'ஏன் பயப்பட்டீர்கள்? ஏன் உங்களுக்கு விசுவாசம் இல்லாமற் போயிற்று?' என்று கேட்டார்.

படகு அமிழக்கூடிய அளவுக்குக் காற்று அடிக்கும்போது யாருக்கும் பயம்தானே வரும் என்று கேட்கலாம். உங்களுக்கு ஏன் விசுவாசம் இல்லை என்று இயேசு கேட்டதின் பொருள் என்ன?

'நான் உங்களுடன் இந்தப் படகில் இருக்கிறேன். என்னுடன் உங்களைக் கூட்டிச் செல்கிறேன். எனவே இந்தப் பயணத்தை எந்தக் காற்றும் தடை செய்யாது. இந்த விசுவாசம் உங்களுக்கு ஏன் இல்லை' என்பதுதான் இதன் அர்த்தம்.

வாழ்க்கைப் பயணத்தில் நமது குடும்பமாகிய படகில் திடீரென்று பிரச்சினைகள் எழலாம். இக்கட்டுகள் உருவாகலாம். அமைதியற்ற நிலை உருவாகலாம்.

இந்தச் சூழ்நிலையில் தேவ பிள்ளைகளாகிய நம் இயேசு நமது வீட்டில் இருக்கிறார். நிச்சயம் நம்மைப் பாதுகாப்பாக அக்கறை கொண்டு சேர்ப்பார் என்ற விசுவாசம் மிகத் தேவை.

ஆதலால், நீங்கள் ஜெபம் பண்ணும் போது எவற்றைக் கேட்டுக் கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக் கொள்வோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவை உங்களுக்கு உண்டாகும் என்று சொல்லுகிறேன் (மாற்கு 11:24).

மணிக்கணக்கில் ஜெபம் பண்ணினாலும், உபவாசம் பண்ணி ஜெபம் பண்ணினாலும், நாம் கேட்பதைக் கர்த்தர் நிச்சயம் தருவார் என்ற விசுவாசம் இல்லாவிட்டால் பலன் அதிகம் கிடைக்காது. ஜெபிக்கின்ற எல்லோரும் விசுவாசத்துடன் தான் ஜெபிக்கிறார்கள் என்று கூறமுடியாது என்பது ஒரு கசப்பான உண்மை.

மழைக்காக ஜெபம் பண்ண சில சகோதரிகள் ஆலயத்துக்குப் புறப்பட்டுச் சென்றனர். ஒரு பெண் குடையை எடுத்துக்கொண்டு புறப்பட்டாள். மற்றப் பெண்கள் அவளைப் பார்த்து எதற்குக் குடை என்று கேட்டார்கள். 'நாம் மழைக்காக ஜெபம் பண்ணப் போகிறோம் எனவே ஜெபித்து முடித்து வீட்டுக்கு வரும்போது மழை பெய்யுமல்லவா?' என்றாள். 'அடேயப்பா...! இவள் எலியாவின் பேத்தி. ஜெபம் பண்ணின உடனே மழை வந்து விடுமாக்கும்' என்று கேலி பேசினார்கள். இன்று நடக்கின்ற ஜெபங்கள் அநேகம் பலனில்லாமல் போகக் காரணங்களில் ஒன்று விசுவாசக் குறைவு.

அப்போஸ்தல நடவடிக்கைகளில் இதைப் போன்ற ஒரு சந்தர்ப்பத்தைப் பார்க்கிறோம். பேதுரு சிறைச்சாலையிலே காக்கப்பட்டிருக்கையில் சபையோர் அவனுக்காக தேவனை நோக்கி ஊக்கத்தோடே ஜெபம் பண்ணினார்கள் (அப்.12:5).

தேவதூதன் ஒருவனால் பேதுரு அற்புத விடுதலை பெற்று தனக்காக ஜெபிக்கிறவர்களை சந்திக்க இரவிலே வருகிறார். பேதுரு வாசல் கதவைத் தட்டியபோது 'ரோதை' என்ற பெண்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுகமளிக்கும் கூட்டத்திற்குப் போகும்போது அந்தப் பையன் அப்பாவைப் பார்த்து... 'அப்பா எனக்கு எல்லாரும் அணிகின்ற ஒரு சாதாரண ஷூ வாங்கித் தாருங்கள்' என்றான். 'ஏன் மகனே?' என்று தகப்பன் கேட்டார்.

அதற்கு அந்தப் பையன், 'இன்றைய கூட்டத்தில் எனக்கு அற்புத சுகம் கிடைத்து, என்னுடைய கட்டையான கால் சரியாகிவிடும். அப்புறம் நான் இப்போது போட்டிருக்கும் ஷூ போட முடியாதல்லவா?' என்று சொன்னான்.

வந்து யார் வந்திருப்பது என்று கேட்கிறாள். கதவைத் தட்டுவது பேதுரு என்று அறிந்தபோது, உற்சாக மிகுதியில் கதவைத் திறக்க மறந்து ஓடிப் போய் ஜெபித்துக் கொண்டிருந்தவர்களிடத்தில் பேதுரு வந்திருக்கிறார் என்று கூறினாள்.

அதற்கு பேதுருவின் விடுதலைக்காக ஜெபித்த விசுவாசிகள் என்ன கூறினார்கள்?

'நீ பிதற்றுகிறாய்' என்றார்கள். அவள் பேதுரு தான் என்று உறுதியாய் சொன்னபோது அவருடைய தூதனாயிருக்கலாம் என்றார்கள். கடைசியில் கதவைத் திறந்து பார்த்து பிரமித்தார்கள் (அப். 12:5-16).

தெய்வீக சுகமளிக்கும் கூட்டத்துக்கு ஒரு விசுவாசி தன் மகனைக் கூட்டிச் சென்றார். அந்தப் பையனுடைய ஒரு கால் மற்றக் காலைவிட சற்றுக் கட்டையானது. எனவே அந்த கட்டையான காலுக்கு சற்று உயரமான ஷூ அணிந்திருப்பான்.

அப்பாவுக்கு அழுகையே வந்துவிட்டது. ஆனால் அவருக்கு அந்த அளவுக்கு விசுவாசமில்லை. 'மகனே நாம் திரும்பி வரும்போது வாங்கிக் கொள்வோம்' என்றார். ஆனால் அவன் கேட்பதாயில்லை. அப்பாவும் அவன் கேட்ட படியே வாங்கிக் கொடுத்தார்.

கூட்டத்துக்குப் போனார்கள்.

பிரசங்கியார் வியாதியஸ்தருக்காக ஜெபித்த போது இந்தப் பையனும் முன்சென்றான். அற்புத சுகம் கிடைத்தது. பழைய ஷூவைத் தூர எறிந்து விட்டு புது ஷூவை மாட்டிக் கொண்டு, 'அப்பா, நான் அப்போதே சொன்னேன் அல்லவா?' என்ற போது தகப்பனுக்கு தன் மகனின் விசுவாசத்தை எண்ணி ஆனந்தக் கண்ணீர் பெருக்கெடுத்தது.

இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் சந்தேகப்படாமல் விசுவாசமுள்ளவர்களாயிருந்தால், இந்த அத்திமரத்துக்குச் செய்ததை நீங்கள் செய் வதுமல்லாமல், இந்த மலையைப் பார்த்து; நீ பெயர்ந்து சமுத்திரத்திலே தள்ளுண்டுபோ என்று சொன்னாலும் அப்படியாகும் என்று, மெய்யா கவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

மேலும், நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவற்றைக் கேட்பீர்களோ அவையெல்லாம் பெறுவீர்கள் என்றார் (மத். 21:21,22)

ஆக, நம்முடைய ஆண்டவர் நமது நம்பிக்கையுடன் கூடிய கோரிக்கைகளைத்தான் கேட்கிறார். அதை நிறைவேற்றித் தரவும் சித்தமாயிருக்கிறார்.

ஆனால், நாம்தான் அப்படிக் கேட்பதில்லை. தவறு யாருடையது?

P.S. ராஜாமணி

## ஆண்டவரே உம்மை வணங்குகிறேன்

★ ஆண்டவரே, அன்பர் சபையில் அவரது புகழைப் பாடுங்கள்


**- உம்மை வணங்குகிறேன்**

## ஆண்டவரே உம்மைப் புகழ்கிறேன்

★ எம் விண்ணப்பங்களையெல்லாம் நிறைவேற்றும் ஆண்டவரே

**- உம்மைப் புகழ்கின்றேன்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேவனின் நோக்கம்

தேவனோடு நாம் ஐக்கியமாயிருப்பதும், அவருடைய பிரசன்னத்திற்குள்ளாகி இருப்பதுமே முதலாவதாக நமக்குக் கிடைத்த ஆசீர்வாதம்.

யாக்கோபு ஒன்றுமில்லாமல் தன் மாமன் லாபானிடம் சென்று பல வருடங்கள் வேலை பார்த்து மிகுந்த ஆசீர்வாதங்களைப் பெற்றான். பின் அவனிடமிருந்து புறப்பட்டான். தன் சகோதரன் ஏசாவுக்கு வெகுமானமாக, இருநூறு வெள்ளாடுகள், இருபது வெள்ளாட்டுக் கடாக்கள், இருநூறு செம்மாறியாடுகள், இரு பது ஆட்டுக்கடாக்கள், பால் கொடுக்கிற 30 ஒட்டகங்கள், அவற்றின் குட்டிகள், நாற்பது கடாரிகள், பத்துக் காளைகள், இருபது கோளிகைக் கழுதைகள், பத்து கழுதைக் குட்டிகள் இவைகளைக் கொடுத்தனுப்பினார். அப்படியானால் அவனுக்கு எவ்வளவு திரளான ஆடு, மாடுகள், ஒட்டகங்கள், சகலமும் இருந்திருக்கும் எனப் பாருங்கள்.

அப்படி அவனுக்கு திரளான ஆசீர்வாதங்கள் இருந்தாலும் அவைகளை தேவன்தான் தந்தார். யாக்கோபு லாபானிடம் போய் சேருமுன் வழியில் ஒரு நாள் இராத்திரி தங்கினான். அவன் ஒரு கனவு கண்டான். கர்த்தர் அவனிடம் 'நீ படுத்திருக்கிற பூமியை உனக்கும், உன் சந்ததிக்கும் தருவேன், உன் சந்ததி பூமியின் தூளைப் போலிருக்கும்... உனக்குள்ளும், உன் சந்ததிக்குள்ளும் பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும். நான் உன்னோடே இருந்து நீ போகிற இடத்திலெல்லாம் உன்னைக் காத்து, இந்த தேசத்துக்கு உன்னைத் திரும்பி வரப் பண்ணுவேன் நான் உனக்குச் சொன்னதைச் செய்யுமளவும் உன்னைக் கைவிடுவதில்லை' என்றார். (ஆதி. 28:13, 15) அது போலவே ஆசீர்வதித்தார். யாக் கோபு திரும்பி வரும்பொழுது தயவுக்கும், எல்லா சத்தியத்திற் கும், நான் எவ்வளவேனும், பாத் திரன் அல்ல. நான் கோலும் கையுமாய் இந்த யோர்தானைக் கடந்து போனேன். இப்பொழுது இவ்விரண்டு பரிவாரங்களையும் உடையவனானேன் (ஆதி. 32:10) என்று தேவனிடம் ஜெபித் தான்.

அப்படி அவனுக்கு திரளான ஆசீர்வாதங்கள் கிடைத்த போதும், அவன் எல்லோரையும், எல்லாவற்றையும் அக்கரைக்கு அனுப்பிவிட்டு தேவனிடத்தில் போராடி, 'நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மைப் போக விடேன்' என்றான். (ஆதி. 32:26) கர்த்தர் அங்கே அவனை ஆசீர்வதித்தார். இவ்வளவு வசதிகளைப் பெற்ற யாக்கோபு பின்னும் எந்த ஆசீர்வாதங்களைக் கேட்டான்? தேவனுடைய ஐக்கியத்தை, தேவ சமூகத்தையே நாடினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனெனில் அதுவே அவனுக்கும், அவனுக் குள்ள எல்லாவற்றுக்கும் பாதுகாப்பைத் தரக்கூடியது.

நமது வாழ்க்கையிலும் இருக்க வேண்டிய முதலாவது ஆசீர்வாதம் தேவனோடுள்ள ஐக்கியமே. தேவனோடு நாம் ஐக்கியமாக இருக்கும் பொழுது தேவ ஐக்கியம் இல்லாத பட்சத்தில் கிடைக்கக் கூடிய எதுவாக இருந்தாலும் அது ஆசீர்வாதமல்ல, அது நமக்கு சமாதானத்தையோ, திருப்தியையோ கொடுக்காது. அவை வேதனையையே கொடுக்கும்.

நீதி. 10:22இல் கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும், அதோடே அவர் வேதனையைக் கூட்டார்' என்று கூறப்பட்டுள்ளது. கர்த்தர் ஒரு மனிதனுக்கு ஆசீர்வாதத்தைக் கொடுப்பாரேயானால் அதில் வேதனைகள் இருக்காது.

ஈசாக்கு அந்த தேசத்தில் விதை விதைத்தான். கர்த்தர் அவனை ஆசீர்வதித்ததினால் அந்த வருஷத் தில் நூறு மடங்கு பலன் அடைந் தான் என்றும், (ஆதி. 26:12) தேவனுடைய பெட்டி ஒபேத் ஏதோமின் வீட்டிலே அவனிடத்தில் மூன்று மாதம் இருக்கையில், கர்த்தர் ஒபேத் ஏதோமின் வீட்டையும், அவனுக்குண்டான எல்லாவற்றையும் ஆசீர்வதித்தார் (1நாளா. 13:14) என்றும் கூறப்பட்டுள்ளது. வேதம் முழுவதும் தேவன் தந்துள்ள ஆசீர்வாதங்களை நாம் காணலாம். பணம் பொருள் மட்டுமல்ல, பாதுகாப்பு, சுகம், ஞானம் மற்றும் பலவும் தேவனிடமிருந்து வரும் ஆசீர்வாதங்களே. ஆக, முதலாவது ஆசீர்வாதம் தேவ ஐக்கியம். இரண்டாவது பற்பல விதத்திலும் தேவன் நம்மை ஆசீர்வதிப்பதே.



தேவனுடன் உங்களுக்கு ஒரு நல்ல தொடர்பு, ஐக்கியம் உண்டா? ஒருவேளை உங்களுக்கு ஒன்றுமே இல்லாவிட்டாலும் தேவ னோடு நல்ல ஐக்கியம் உங்களுக்கு இருக்குமா னால் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே. அதே வேளையில் எல்லாம் இருந்தும் தேவனோடு ஐக் கியம் இல்லாவிட்டால் பிரயோஜனமென்ன?

ஆண்டவர் இயேசு கூறினார். 'மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஆத்துமாவை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபமென்ன?' (மத். 16:26) உலகத்திலுள்ள எல்லாவற்றையும் சம்பாதித்தும் தேவனோடு ஐக்கியம் இல்லாமல் மரித்து நரகத்தை அடைவதினால் பிரயோசனமென்ன? அதைவிட வேதனையானது ஒன்றுமில்லை.

சாலமோன் என்ற ஒரு பெரிய ராஜா இருந் தான். அவன் கூறினான்.
'எனக்கு எல்லாம் இருந்தது. என் இருதயத்துக்கு ஒரு சந்தோஷத்தையும் நான் வேண்டாமென்று விலக்கவில்லை. என் கைகள் செய்த சகல வேலைகளையும், நான் பட்ட எல்லாப் பிரயாசத்தையும் கண்ணோக்கிப் பார்த்தேன். இதோ, எல்லாம் மாயையும் மனதுக்குச் சஞ்சலமுமாயிருக்கிறது'. (பிரசங்கி 2:4, 17) என்று கூறினார்.

மாயையைப் பெருகப் பண்ணுகிற அநேக விசேஷங்கள் உண்டாயிருக்கிறபடியால் அதனாலே மனுஷருக்கு பிரயோசனமென்ன? பணப்பிரியன் பணத்தினால் திருப்தியடைவதில்லை. தேவன் தமது பார்வைக்கு நல்லவனாயிருக்கிறவனுக்கு, ஞானத்தையும் அறிவையும், இன்பத்தையும் அளிக்கிறார். பாவஞ்செய்கிறவனுக்கோ, தமது பார்வைக்கு நல்லவனாயிருக்கிறவன் வசமாய் வைத்து விட்டுப் போகும் பொருட்டுச் சேர்த்துக் குவித்து வைக்கும் தொல்லையை அவர் நியமித்திருக்கிறார். 'இதுவும் மாயையும், சஞ்சலமுமாயிருக்கிறது' என்றார்.

ஆக நம்முடைய ஆண்டவர் ஆசீர்வதிக்கிறவர், அவர் ஆசீர்வாதத்திற்கு வாக்குப் பண்ணியுள்ளார். அவர் ஆசீர்வதிப்பார். அவர் தரும் ஆசீர்வாதமே நமக்கு சந்தோஷத்தையும், சமாதானத்தையும், திருப்தியையும் கொடுக்கும். அவரோடுள்ள ஐக்கியத்திலிருக்கும்பொழுது மரித்த பின்னும் அவருடைய இராஜ்ஜியம் சென்று அங்கும் ஆசீர்வாதமாக இருப்போம்.

- எஸ்.ஜே. தினகரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒல்சனுக்கு ஆண்டவர் அளித்த கிருபை



எண்ணெய் நிறுவனம் ஒன்றின் தொழிலாளர்களைக் கவனிக்க வந்திருந்த அவர் திரும்பிச் செல்லும்போது மோடிலோன் குடியிருப்பைக் காணலாம் என்ற விருப்பத்தோடு இந்தப் பக்கமாக ஹெலிகொப்டரில் வந்திருக்கிறார்.

எத்தனையோ நூற்றுக்கணக்கான சதுர மைல்கள் மோடிலோன் குடியிருப்புகள் பரவியிருந்தபோதிலும் அவர் ஒல்சன் தங்கியிருந்த கிராமத்துப் பக்கமாக வந்தது தேவன் செய்த அதிசயமே.

ஒல்சனின் அபாயகரமான நிலையைக் கண்ட அவர் சற்றும் தாமதியாமல் ஒல்சனை ஏற்றிக்கொண்டு ஹெலிகொப்டரில் மருத்துவமனையை நோக்கி விரைந்தார்.

காட்டினுள் ஒளிந்தபடியே இதைக் கவனித்த மோடிலோன் பழங்குடிகள் 'நல்லவேளை, நாம் இவனுடைய உடலை அடக்கம் செய்ய வேண்டியிருக்கவில்லை. அவனுடைய கடவுளே பெரிய கழுகை அனுப்பி அவனை விழுங்கும்படி செய்துவிட்டார்' என்று தங்களுக்குள் பேசிக்கொண்டார்கள்.

ஒல்சன் இறந்து விட்டதாகவே அவர்கள் முடிவு கட்டி விட்டார்கள்.

பகோடா நகர் மருத்துவமனையில் ஒல்சன் சேர்க்கப்பட்டார். அவர் குணமடைய மூன்று மாதம் ஆகுமென்றும், அதன் பிறகு அவர் ஆறு மாதம் ஓய்வெடுக்க வேண்டுமென்றும் மருத்துவர்கள் கூறி விட்டார்கள்.

ஒல்சன் மனம் கலங்கினார்.

தான் கூடிய விரைவிலேயே குணமடைய வேண்டுமென்றும், மீண்டும் மோடிலோன் பழங்குடிகளிடையே செல்லவேண்டுமென்றும் ஆண்டவரை நோக்கி மன்றாடினார்.

எத்தனையோ முறை ஒல்சனை ஆபத்துக்களிலிருந்து காப்பாற்றிய தேவன் இந்த முறையும் அவருக்குப் பூரண சுகம் அளித்தார்.

ஆனால் சாத்தானின் சோதனைகள் தொடர்ந்தன.

கடுமையான வயிற்றுக்கடுப்பு நோயினால் அவதிப்பட்டார் ஒல்சன். அவரது தோலின் நிறம் மஞ்சளாக மாறியது. சிறுநீர் கன்னங்கரேலென்ற நிறத்தில் வெளியாகியது. இரவு வருமுன்னதாகவே கடுமையான ஜுரத்தினால் உடல் நடுங்கியது.

என்றாலும் ஒல்சனின் விசுவாசம் குறையவில்லை. ஊக்கத்தோடு ஜெபித்துவிட்டு காய்ந்த இலைகளைக் கொண்டு படுக்கை ஒன்றைத் தயாரித்து அதில் படுத்து விட்டார்.


மறுநாள் காலையில் ஒல்சனின் நிறம் பழைய நிலைக்கு வந்திருந்தது. காய்ச்சல் விட்டிருந்தது. மறுபடியும் தன்னைக் காப்பாற்றிய தேவனைத் துதித்தபடியே தொடர்ந்து நடந்தார் ஒல்சன்.

ஐந்தாம் நாள் காலை.

ஒல்சன் மோடிலோன் கிராமத்தினுள் நுழைந் தார்.

அவரைக் கண்ட பழங்குடிகள் அதிர்ச்சியினால் திகைத்து நின்றுவிட்டார்கள். இறந்து விட்டார் என்று நினைத்திருந்த ஒருவர் எப்படித்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



திரும்பி வர முடியும்?

தயக்கத்தோடு நெருங்கிய அவர்கள் ஒல்சன் உண்மையாகவே குணமடைந்துவிட்டார் என்பதை அறிந்து ஆச்சரியப்பட்டார்கள்.

ஒல்சன் ஒரு ஆச்சரியமான நபர் என்பதை அறிந்து அவர் தங்குவதற்கு அனுமதியளித்தார்கள். தேவனுடைய அதிசயமான வழிநடத்துதலைக் கண்ட ஒல்சன் உற்சாகமாக அவர்களுடனே தங்கினார்.

பழங்குடிகளின் உணவை முகம் சுளிக்காதவாறு உண்ணப் பழகிக் கொண்டார். அவர்கள் வேட்டையாடச் செல்லும்போது தானும் உடன் சென்று அவர்களுடைய பழக்கவழக்கங்களைக் கவனித்தார்.

கொஞ்சம் கொஞ்சமாக அவர்களது மொழியைக் கற்கத் தொடங்கினார். மொழியைக் கற்ற பின்புதானே இயேசுவைப் பற்றி அவர்களுக்குச் சொல்ல முடியும்?

பழங்குடிகளிடையே மந்திரங்களின் மூலம் நோய்களைக் குணமாக்க முடியும் என்று சொல்லும் மருத்துவச்சிகள் உண்டு. இவர்கள் பிற மதத்திலிருந்து வருகிறவர்களை வெறுப்பார்கள். இந்த வெறுப்பை மாற்றக்கூடிய வகையில் ஆண்டவர் ஒல்சனுக்கு ஒரு வாய்ப்பைத் தந்தார்.

ஒருமுறை அந்தப் பழங்குடிகளிடையே கண் நோய் பரவத் தொடங்கியது. ஒல்சன் வேண்டுமென்றே அவர்களுடன் பழகித் தானும் அந்த நோயைப் பெற்றுக் கொண்டார்.

மருத்துவச்சி தழைகளைக் கொண்டு மந்திரங்களை ஓதும்போது தனக்கும் அதே சிகிச்சை அளிக்கும்படி கேட்டுக்கொண்டார். ஆனால் நோய் குணமாகவில்லை. பதிலாக நோயின் கொடூரம் அதிகரித்தது.

மூன்றாம் நாள் ஒல்சனைக் கண்ட மருத்துவச்சி என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்து நின்றாள். வீக்கத்தினால் ஒல்சனின் கண்கள் அநேகமாக மூடிவிட்டிருந்தன.

ஒல்சன் அவளிடம் டெராமைசின் மருந்து ட்யூபைக் கொடுத்து 'மந்திரங்களோடு இந்த மருந்தையும் உபயோகித்துப் பார்' என்றார்.

முதலில் தயங்கிய அவள் பிறகு ஒல்சன் கூறியபடியே அவரது கண்களில் மருந்தைத் தடவினாள். மறுநாள், ஒல்சனின் கண்கள் ஓரளவு குணமடைந்திருந்தன. ஆனால் மற்றவர்களின் கண் நோய் மிகவும் கடுமையாகி விட்டிருந்தது.

அடுத்த நாள் ஒல்சனின் கண்கள் பரிபூரணமாக குணமடைந்திருப்பதைக் கண்டு திகைத்து நின்றாள் மருத்துவச்சி. மற்றவர்களிடமும் அந்த மருந்தைப் பயன்படுத்துமாறு ஒல்சன் அவளிடம் கூறினார். மந்திரங்களை ஓதுவதோடு நிறுத்திவிடாமல் இந்த மருந்தை அவர்களுடைய கண்களிலும் தடவி விட்டாள் அந்த மருத்துவச்சி. ஓரிரு நாட்களில் அனைவரும் அந்தக் கண் நோயிலிருந்து பூரண சுகம் பெற்றார்கள்.

எல்லோருமே மருத்துவச்சியின் திறமையைப் புகழ்ந்தார்கள். ஒல்சன் அதை மறுத்து ஒன்றுமே சொல்லவில்லை. இதற்கிடையே பக்கத்துக் கிராமத்திலும் கண்நோய் பரவியிருப்பதாகச் செய்தி வந்தது. ஒல்சன் மருத்துவச்சியை அழைத்து தலைவனின் அனுமதியைப் பெற்று அவர்களுக்கு உதவுமாறு கேட்டுக் கொண்டார். இந்த முறை மருத்துவச்சி மந்திரங்களை ஓதவில்லை. நேரடியாக டெராமைசினைத் தடவினாள். கண்நோய் பறந்து விட்டது. இன்று இந்த மருத்துவச்சி ஒல்சனின் ஊழியத்தில் அவருக்கு அதிகத் துணையாக இருந்து வருகிறாள்.

**- தொடரும்**

- எச்.பி. ராஜ்குமார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மை ஊழியம் செய்திட வரமருளும்...!

**உவமை:** கொல்கொத்தா நகரின் பிரதான அலுவலர் இருவர் அன்னை தெரசாவிடம் அலுவல் சம்பந்தமாக ஒருசில விடயங்களைத் தெளிவுபடுத்திட அவரது இல்லம் வந்திருந்தனர். வரவேற்பறையில் இருந்த கன்னியர் 'கொஞ்சம் ஓய்வு எடுங்கள். அவர்கள் அரை மணி நேரம் கழித்து வருவார்கள்' என்றனர். அந்த அலுவலர்களில் ஒருவருக்கு அன்னையின் பாடசாலை அதிலுள்ள ஆலயம், இவைகளைப் பார்க்க ஆசை.

தனது விருப்பத்தை கன்னியரிடம் தெரிவித்தார். ஒப்புதல் பெற்றபின் இருவருமாக சுற்றி வந்தார்கள். கடவுளின் ஆலயம் என எல்லாமே அன்புமயமாக காட்சியளிக்க உண்மையிலும், மெய்மையிலும் உறைந்து போனவர்கள் ஓர் இடத்தில் அதிர்ச்சியாகி நின்றார்கள். அங்கே அன்னை தனது உடைகளோடு ஒருசில உடல் நலமில்லாத கன்னியர்களின் ஆடைகளையும் சேர்த்து கையில் துவைத்துக் கொண்டிருந்தார்.

அருகே இருந்த ஓர் அறையின் கதவில் 'பணி பெற அல்ல, பணிபுரியவே வந்தேன்' என்று எழுதியிருந்தது.

**அருள்மொழி:** 'ஆண்டவரும் போதகருமான நான் உங்கள் காலடிகளைக் கழுவினேன் என்றால், நீங்களும் ஒருவர் மற்றவருடைய காலடிகளைக் கழுவக் கடமைப்பட்டிருக்கிறீர்கள்' (யோவா. 13:14).

**வார்த்தை வாழ்வாக:** 'ப்ரோட்டோகோல்' - இது பல்துறை அலுவலர்களுக்கும் புளியைக் கரைக்கும் விடயம். உயர் அலுவலர்களுக்கு, உயர் பதவி வகிப்பவர்களுக்கு பாதுகாப்பு மற்றும் மரியாதை கொடுக்கும் விதத்தில் பல்வேறு கட்டமான விதிமுறைகளின்படி நடத்தல் என்பது தான் அது. எங்கோ விரல் விட்டு எண்ணும் அளவுக்கு ஒருசில உயர் பதவியில் இருப்பவர்களும், அரசின் ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் அமைச்சர் மற்றும் சகாக்களும் இந்த விதிகளை முழுமையாக எதிர்பார்ப்பதில்லை. ஆனால் பெரும்பான்மையோர் இதில் சிறு தவறு நடந்தாலும் வானத்துக்கும், பூமிக்குமாகக் குதிப்பர்.

பணி செய்ய இதுதான் பெரும்பாலும் தடையாக இருக்கும். 'பதவி வரும்போது பணிவு வர வேண்டும், துணிவும் வர வேண்டும்' என்ற கண்ணதாசனின் பாடல் வரிகள் இதற்கு வலுவூட்டுகிறது. எங்கு எளிமை, தன்னடக்கம், தாழ்ச்சி இருக்கின்றதோ அங்கே இயல்பான கருணையும், பிறரன்பும், உதவும் மனப்பான்மையும், தன்னல மறுப்பும் நிகழும்.

இயேசு தம் வாழ்வில் எல்லாச் சூழலிலும் தேவையிருப்போரின் தேற்றரவாளராக வாழ்ந்தார். அவரது சேவை விழியிழந்தோருக்கும், பாதம் பதிக்க இயலாதோருக்கும், பசித்திருப்போருக்கும், பாவியாய் உழன்று திரிவோருக்கும், ஆறுதல் தேடுவோருக்கும் அமைதி வேண்டுவோருக்கும், எவ்வித ஒப்பந்தமின்றி செயல் வடிவம் பெற்றது.

அவரைச் சுற்றியும் எவ்வித வேலியும் இல்லை. அதனால்தான் 'தாவீதின் மகனே' என்ற கூட்டத்தில் எங்கோ குரல் கேட்டாலும் அவரால் செவிசாய்க்க முடிந்தது. தம் சீடர்களுக்கு மட்டுமல்ல, நமக்கும் முன்னுதாரணமாக பிறர் பாதங்களைக் கழுவுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாமும் இதனைப் பின்பற்றிட அழைக்கிறார். அழைப்பை ஏற்போமா?

**சுய ஆய்வு:** பதவி, அந்தஸ்து இவை பணி புரியவே அன்றி பணி பெற அல்ல என்பதனை நான் புரிந்துள்ளேனா? என்னையே தாழ்த்தி கடை நிலையிருப்போருக்கும் உரிய மரியாதை கொடுக்கும் எண்ணத்தை நான் வளர்த்துக் கொண்டுள்ளேனா?

**இறை வேண்டல்:** தாழ்ச்சியின் வேந்தனே தலைவா, உம்மைப் பின்பற்றி மற்றவருக்கு உண்மை ஊழியம் செய்யும் வரமருள உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.

## இறை அன்பில் இணைவோம்

ஒளியை ஏற்றி
ஒளியில் வாழ்வோம்
வழியைக் காட்டி
வழிகளைத் திறப்போம்
வாழ்வைக் கொடுத்து
தாழ்வை ஒழிப்போம்!

அன்பை விதைத்து
அன்பைப் பெறுவோம்
தான தர்மங்கள் செய்து
வானத்தைத் திறப்போம்!

முதியோரைப் பேணி
மதியினைப் பெறுவோம்
கல்விக் கண்ணைத் திறந்து
அறியாமையை
அகற்றுவோம்
ஏழைகள் மகிழ்வில்
இறைவனைக் காண்போம்!

தாய் மரியை வேண்டி
தரணிக்கு
அருள் சேர்ப்போம்
தந்தை இறை புகழ்பாடி
சிந்தை மகிழ்வோம்
இயேசு மரி சூசையும்
இணைந்தது போல்
அன்பில்
இணைவோம்
நாமும் இறையன்பில்!

- கலைக்கவி சவேரியப்பா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியில் மறுமலர்ச்சி - பதின்மூன்றாம் போப் லியோ

பதிமூன்றாம் போப் பாண்டவர் போப் லியோவின் இயற் பெயர் ஜியாச்சினோ வின்சென்ஜோ ரபேல் லூசி. அவர் இத்தாலியின் கார் பினேட்டோ என்னும் ஊரில் 1810ஆம் ஆண்டு மார்ச் மாதம் 2ஆம் திகதி பிறந்தார். கவுண்ட் லோடோவிக்கோ பெக்கி மற்றும் அன்னா பிராஸ் பெரி-புஜி தம்பதியருக்கு இவர் ஆறாவது மகனாகப் பிறந்தார்.

இவரது எட்டாவது வயதில், பத்து வயது நிரம்பிய கசிப்போ என்ற இவரது மூத்த சகோதரருடன் விட்டர் போவிலுள்ள 'நியூ ஜெஸ்ஷூட்' பாடசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். தற்போது இந்தப் பள்ளி மதகுருமார்கள் கல்வி பயிலும் பயிற்சிப் பள்ளியாக இயங்கி வருகிறது. இந்தப் பள்ளியில் ஆறு வருடங்கள் பயின்று லத்தீன் மற்றும் இத்தாலிய மொழிகளில் பல்வேறு விடயங்களை தெளிவாகக் கற்றுக்கொண்டார்.



இந்த இரண்டு மொழிகளிலும் இசை பற்றியும், இறையியல் பற்றியும், வாழ்வியல் விடயங்கள் பற்றியும் நன்கு அறிந்து கொள்ள உதவியவர் இவருடைய ஆசிரியர் பத்ரே லியர்னாடோ கரி பால்டிதான். இதன் பிறகு லியோ மூன்றாண்டுகள் தத்துவத்திலும் இயற்பியல் விஞ்ஞானத்திலும் கல்வி பயின்றார். அப்போதைய எல்லா ரோமானிய இளைஞர்களைப் போலவும், லியோ பொதுத்துறையில் பணியாற்றவே விரும்பினார்.

இதற்கிடையில் இறையியல், பொருளாதாரம் மற்றும் சட்டக்கல்வியைக் கற்றறிந்தார். இவருக்கு இறையியல் கல்வியைப் புகட்டியதில் முக்கியமான இறையியலாளர்கள் பெரேள் மற்றும் பட்ரீஸி ஆகியோராவர். 1832ஆம் ஆண்டில் லியோ இறையியலில் கலாநிதி பட்டம் பெற்றார். இவருடைய திறமைகள் மற்றும் கார்டினல்கள் சாலா மற்றும் பக்கா ஆகியோரின் ஆதரவு காரணமாக உள்ளூரின் மதத் தலைவராக 1837ஆம் ஆண்டில் பதினாறாம் கிரிகோரியால் பணியில் அமர்த்தப் பட்டார்.

ரோம் நகரத்தில் கொலரா தொற்றுநோய் வெகுவாகப் பரவியிருந்தபோது, நகரத்து மருத்துவமனைகளுக்குச் சென்று மேற்பார்வையிடுவதிலும், மக்களுக்குத் தேவையானவற்றைச் செய்வதிலும் கார்டினல் சாலாவுக்கு லியோ இரவு பகலாக உதவிகள் செய்தார். லியோவின் திறமைகள், அர்ப்பணிப்பு, கடமை உணர்வு ஆகியவற்றை மீண்டும் நேரில் கண்ணுற்ற கார்டினல் சாலா, லியோ பெரிய பொறுப்புகளுக்கு உரிய நபர் என்பதைப் புரிந்துகொண்டார். கார்டினல் சாலாவின் தொடர் வலியுறுத்தல்களின் பேரில், லியோ பாதிரியாருக்கான படிப்புகளை முடித்து 1837ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதி பாதிரியாருக்கான அந்தஸ்தைப் பெற்றார்.

1838இல் லியோ நேப்பிள்ஸ் நகரத்திற்கான விசேடப் பிரதிநிதியாகப் பணியில் அனுப்பப் பட்டார்.

அப்போது அந்நகரத்திலிருந்த சில விரும்பத்தகாத பிரச்சினைகளை தனது விடாமுயற்சி, தொடர் உழைப்பு, அர்ப்பணிப்பு முதலியவற்றால் முழுவதுமாகத் தீர்த்து வைத்தார். லியோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வின் தீர்க்கமான நடவடிக்கைகளும், கிடைக்கப் பெற்ற நல்ல பலன்களும் பதினாறாம் கிரிகொரியை பெரிதும் மகிழ்வித்தது.

இதைத் தொடர்ந்து லியோவுக்கு மற்றொரு முக்கியமான பொறுப்பு வழங்கப்பட்டது.

1841ஆம் ஆண்டு இவரை பெரூஜியா என்னுமிடத்திற்கு அனுப்பினர். பெரூஜியாவில் கிறிஸ்தவ மற்றும் போப்பாண்டவருக்கு எதிராக இயங்கும் ஒரு கூட்டம் இருந்து வந்தது. இவர்களைச் சரிசெய்து சமூகச் சீர்திருத்தங்கள் சிலவற்றையும் மேற்கொண்டு, அப்பிரதேசத்தை முன்னேற்றம் செய்ய வேண்டியது லியோவின் கடமைகளாக இருந்தன.

மூன்று வருடங்களில் பொருளாதார முன்னேற்றம், விரைவான நீதி, கல்வி முறையில் பெரிய மாற்றம் முதலியவற்றைச் செய்து காட்டினார் லியோ. அதோடன்றி அப்பகுதி மக்களின் பொது வாழ்வாதார முன்னேற்றங்களுக்கும் பெரிதும் பாடுபட்டார் லியோ. பெரூஜியாவின் பிஷப்பாக, இறை நம்பிக்கையின் அத்தியாவசியத்தையும், மதக்கோட்பாடுகளின் உண்மைத்தன்மைகளையும் விசுவாசிகளுக்கு விளக்குவதிலும் லியோ வெற்றி பெற்றார்.


1872ஆம் ஆண்டில் பெருஜியாவில் அரசுக்குண்டான கல்வித்தரத்தை பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் அறிமுகப் படுத்தினார். அதிகமான பள்ளிகளுக்கு புனரமைப்பு வேலைகளையும், தகுந்த அர்ப்பணிப் போடு கூடிய பெல்ஜியத்தைச் சேர்ந்த திரு இருதய கன்னியாஸ்திரிகளையும், மெர்சியைச் சேர்ந்த அருட்சகோதரர்களையும் கல்வி புகட்டும் பணிக்குத் தேர்வு செய்தார்.

தமக்குக் கொடுக்கப்பட்ட பணிகள் அனைத்தையும் மிகுந்த ஈடுபாட்டுடன், மிகச்சரியாகச் செய்த லியோ பதிமூன்றாம் போப் லியோவாக 1878ஆம் ஆண்டு பெப்ரவரி 20ஆம் திகதி பொறுப் பேற்றுக் கொண்டார்.

இருபத்தைந்து ஆண்டு காலம் போப்பாண்டவராகப் பணியாற்றிய இவர், கல்விச் சீர் திருத்தங்கள், பொது நலத் தொண்டு, கொலரா ஒழிப்பு நட வடிக்கைகள், வழிப்பறி, கொள்ளை முதலியவற்றைத் தடுத்தல், நாடுகளுக்கிடையேயான நல்லுறவுகளை வளர்த்தல், இறைப் பணிக்கு தகுந்த அர்ப்பணிப்பு உள்ளவர்களைத் தேர்ந்தெடுத்தல், ஆகிய உயரிய பணிகளை ஆற்றி, சமுதாய மேம்பாட்டிற்காக உழைத்துள்ளார்.

இவரது காலத்தில் கத்தோலிக்க விசுவாசம் மிகப்பெரிய முன்னேற்றத்தைக் கண்டது. பிறர் நலத்துக்காகவே பெரிதும் வாழ்ந்த பதிமூன்றாம் போப் லியோ 1903ஆம் ஆண்டு ஜூலை மாதம் 20ஆம் திகதி கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

A.A. ஆல்பர்ட்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கனவு நனவானது!

இலங்கையின் நுவரலியாப்பகுதியில் உள்ள தேயிலைத் தோட்டத்தில் தமக்கென ஒதுக்கப்பட்டிருந்த வசிப்பிடத்தில் வசித்து வந்தாள் மேரி ஜோசபின். அவளது கணவர் ஜோசப்பும் இதே தேயிலைத் தோட்டத்தில் வேலை பார்த்த போது சிறிது காலம் கடுமையான காசநோயாலும் மூச்சுத்திணறலாலும் பாதிக்கப்பட்டு சிகிச்சைகள் பலனளிக்காமல் தனது நாற் பதாவது வயதிலேயே இறந்து போனார். தனது ஒரே மகன் சூசை ராஜை பள்ளிப்படிப்பு வரை பல பாடுகளைப்பட்டு படிக்க வைத்தாள் விதவைத் தாய் மேரி.

தன் கணவர் இறந்த பிறகு தன்னுடைய தேயிலைத் தோட்ட உழைப்பும், இயேசுபிரானின் மேல் வைத்த மாறாத விசுவாசமுமே அவளை நம்பிக்கையுடனும் அமைதியுடனும் வாழவைத்தது. காலையில் கண்விழிக்கும் பொழுதிலிருந்து இரவு தூங்கச் செல்லும் வரையிலும் ஆண்டவர் இயேசுவைப் பற்றிய தோத் திரங்கள் மேரியின் உள்ளத்தில் இருந்து கொண்டேயிருக்கும். தொலைக்காட்சிப் பெட்டியின் முன் அமர்ந்து பொழுதைக் கழிப்பதோ, அக்கம் பக்கத்தவர்களுடன் அரட்டை அடிப்பதோ மேரிக்கு கொஞ்சமும் பிடிக்காத விடயங்கள்.

தன்னைப்போலவே தன் மகன் சூசையையும் இறை உணர்வு, சளைக்காத உழைப்பு ஆகிய நல்ல பண்புகளோடு வளர்த்து விட்டாள் மேரி. பக்கத்து வீடுகளில் யாருக்காவது உடல் நலக் குறைவு ஏற்பட்டாலும், திருமணம், சடங்குகள், இறப்பு ஏற்பட்டாலும் உதவும் உள்ளத்தோடு முதல் ஆளாக நிற்பது சூசைதான். எதுவானாலும் கடைசிவரை இருந்து தன்னாலான எல்லா உதவிகளையும் செய்துவிடுவான் சூசை. அதேபோல் சிறு குழந்தைகளைப் பள்ளியில் சேர்த்துவிடுவது, வயதானவர்களை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வது போன்ற பரோபகாரச் செயல்களையும் முழுமனதோடு செய்வான். நேரம் கிடைக்கும் போதெல்லாம் தன் தாயுடனோ, தனியாகவோ தேவாலயம் சென்று எல்லோர் நலத்துக்காகவும் ஜெபம் செய்வான்.

தந்தை, மிகக் குறைந்த வயதிலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறந்துபோனது, தனக்காக தாய் இதுவரை பட்ட பாடுகள், பள்ளிப்படிப்பை நல்ல மதிப்பெண்க ளுடன் முடித்தும் தன்னுடைய இருபத்திரண்டு வயது வரை நல்ல வேலை கிடைக்காமல் இருப் பது ஆகிய விடயங்களை அவ்வப்போது நினைத்து சூசை மனம் வருந்தினான். ஆனாலும் ''இயேசப்பாவின் மீது முழு விசுவாசம் கொண்டு வாழ்பவர்களுக்கும் தாழ்ச்சியோடு இருப்பவர்களுக்கும், விடாமுயற்சி உள்ளோ ருக்கும் வாழ்க்கையில் முன்னேற்றம் உறுதியாக ஏற்படும்'' என்று தேவாலய பிரார்த்தனைக் கூட்டத் தின் பிரசங்கத்தில் பாதிரியார் கூறியதை ஞாபகப்படுத்திக்கொண்டு மனம் நிறைந்த நம்பிக்கை யோடு இருக்கத் தொடங்கினான்.

நுவரெலியாவுக்கு மிக அருகாமையில் இயங்கிக் கொண்டிருந்த ஒரு பாடசாலையில் தலைமை ஆசிரியராக பவுன்ராஜ் பதவியேற் றார். பணியிலிருந்து ஓய்வு பெற இன்னும் சில ஆண்டுகள் உள்ள நிலையில் புஷ்பராணி என்ற மனைவியுடனும் கிரேஸி என்கின்ற தன்னுடைய ஒரே மகளுடனும் இங்கு வந்து சேர்ந்தார் பவுன் ராஜ். இவரும் இயற்கையாகவே இறை நம்பிக் கையும், உயர்ந்த நோக்கங்களும் கொண்டவர். பள்ளிப் பணிகளும், தேவாலய விஜயமுமே இவரது உலகம். வீட்டில் ஓய்வு நேரங்களிலும் வேதப் புத்தகத்தைப் படித்துக்கொண்டிருப்பார்.

பள்ளியில் புதிதாகச் சேர்ந்திருக்கும் தலைமை ஆசிரியரை மரியாதை நிமித்தமாகச் சென்று பார்த்தான் சூசை. அவனுடைய பவ்யமான, கனி வான பேச்சுவார்த்தைகளும், மரியாதைமிக்க பழக்கங்களும், தலைமை ஆசிரியர் பவுன்ராஜை வெகுவாகக் கவர்ந்தன. சிறுசிறு வேலைகளைச் செய்து கொடுப்பதற்காக தலைமை ஆசிரியர் வீட்டுக்கு ஒரு நாளைக்கு ஒரு முறையாவது சென்று வந்தான் சூசை.

சூசையின் தாய் திடீரென கடுமையான விஷக் காய்ச்சலால் தாக்கப்பட்டு படுத்த படுக் கையில் பல நாட்கள் இருக்க வேண்டியதா யிற்று. தனக்கிருக்கும் ஒரே உறவான தாய் நோய்வாய்ப்பட்டு, வேலைக்கும் செல்ல முடியாமல் முடங்கியது சூசையை பெருத்த வேதனைக்குள்ளாக்கியது. அன்றிரவு ஆண் டவரின் படத்துக்கு முன்பாக மண்டியிட்டு கண் களில் நீர் வடிய, தன் தாய் குணமாகவும், இனிமேல் அவள் வேலைக்குச் செல் லாமலிருக்க இருவர் ஜீவிக் கும்படியாக தனக்கு ஏதே னும் வேலை உள்ளூரி லேயே உடனடியாகக் கிடைக்க வேண்டும் என்றும் மன்றாடினான்.

மறுநாள் அதிகாலையில் தேவாலயம் சென்று இயேசுவிடம் மீண்டும் மன்றாடி வேண் டினான். ''உலகோர் நன்மைக்காக அனுதினமும் எத்தனையோ தெய்வீக அதிசயங்களைச் செய்து கொண்டிருக் கும் ஆண்டவரே, உம்மேல் நான் கொண் டிருக்கும் விசுவாசம் உண்மையானால், என் தாய் குணமடையட்டும், எனக்கு உள்ளூரி லேயே ஒரு வேலை கிடைக்கட்டும்'' என உருக்கமாக ஜெபித்தான்.

சூசையின் பிரார்த்தனை ஆண்டவரால் உடனே கேட்கப்பட்டது. மறுநாள் காலையில் பள்ளி ஆரம்பிப்பதற்கு முன்பாக சூசையின் தாயாரை உடல் நலம் விசாரிக்க வந்த தலைமை ஆசிரியர், புறம்படும்போது ''இந்த வயதில் நீங் கள் மீண்டும் தேயிலைத் தோட்ட வேலைக்குச் செல்ல வேண்டாம், சூசையை எங்கள் பள்ளிக் கூடத்தில் ரூபாய் ஏழாயிரம் மாதச் சம்பளத்தில் உதவியாளராகப் பணியில் அமர்த்திக்கொள்ள மேலதிகாரிகளின் அனுமதி பெற்றுவிட்டேன். சூசை நாளையிலிருந்தே பள்ளியில் வேலைக் குச் சேரலாம்'' என்ற நல்ல செய்தியை சொல்லி விட்டுச் சென்றார்.

பின் ஆறு மாதங்கள் கழித்து, சூசையைப் போன்ற ஒரு நல்ல உள்ளம் கொண்ட மனிதனை இக்காலத்தில் காண்பதரிது என்று எண்ணிய தலைமை ஆசிரியர் பவுன்ராஜ் தன் ஒரே மகள் கிரேஸியை ஆண்டவரின் ஆசீர்வாதத்துடன் சூசைக்கு மணமுடித்துக் கொடுத்து அதே ஊரில் அவர்களை மகிழ்ச்சியாகக் குடியமர்த்தினார்.


''இயேசு எனும் நம்பிக்கையுள்ள நாமத்துக் குள் வாழ்ந்தால், அவர் அதிசயம் அதிகம் செய்து நமது தேவைக்கதிகமாகவே நம்மை ஆசீர்வதிப் பார்'' என்று மனதில் நினைந்து கனவை நனவாக்கிய கருணைக் கடலான கர்த்தருக்கு சூசை ஆனந்தக் கண்ணீருடன் நன்றி ஜெபம் செலுத்தினான்.

அவி





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# பவ்லோதார் நகர புனித தெரேசா தேவாலயம் !

கஸகஸ்தானில் பவ்லோதார் நகரத்தில் பழைமையான புனித தெரேசா தேவாலயம் அமைந்துள்ளது. குழந்தை இயேசுவுக்கான இத் தேவாலயம் அமைந்துள்ள பவ்லோதார் நகரம், 1960ஆம் ஆண்டுகளில் பொறியியல் துறை, விவசாயக் கருவிகள் உற்பத்தி, அலுமினியப் பொருட்கள், கப்பல் செப்பனிடுதல் முதலியவற்றில் பெரும் வளர்ச்சியைக் கண்டது. இர்டிஸ் நதியின் மீது வாகனங்கள் கடந்து செல்லும்படியான ஒரு பெரிய பாலமும் கட்டப்பட்டது. நகரின் வெளிப்புறத்தில் இந்த காலக்கட்டத்தில் தனியாருக்கான பெரிய வீடுகளும் மிக வேகமாகக் கட்டிமுடிக்கப்பட்டன.

சமயத் தலைவர்களாலும், கிறிஸ்தவப் பெருமக்களாலும் திரட்டப்பட்ட நிதியினைக் கொண்டு ஒரு வீட்டை பவ்லோதார் நகரில் வாங்கி அதனில் குழந்தை இயேசுவின் புனித தெரேசா ஆலயத்தை 1978ஆம் ஆண்டில் நிர்மாணித்தார்கள்.

இங்கு எப்போதுமே நம்பிக்கையாளர்கள் இருந்தபோதிலும், ஸ்டாலினின் அடக்கு முறைக் காலத்தில், போர் நடந்துகொண்டிருந்த காலத்தில் வோல்கா பகுதி, காக்காசஸ் மற்றும் உக்ரைனிலிருந்து மக்கள் வெளியேறியபோது நம்பிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தது. கார்லாக் முகாம் கைதிகள் மற்றும் இராணுவத்தினரும் இம்மாதிரி புலம்பெயர்ந்தவர்களில் அடங்குவர்.

இவர்கள் பவ்லோதார் நகரத்துக்கு அடிக்கடி செல்ல முடியாவிட்டாலும், எப்போதாவது தேவாலயம் அமைந்திருந்த பவ்லோதார் நகரத்திற்கு செல்ல நேரும்போது வீடுகளில் இரகசியமாகச் சந்தித்து மத சம்பந்தமான விடயங்களைப் பற்றிப் பேசவும், பிரார்த்தனைகளை மேற்கொள்ளவும் செய்தனர். அலெக்ஸாண்டர் பென் என்னும் கிறிஸ்தவப் போதகர், நம்பிக்கையாளர்களை ஒன்றிணைத்து அவர்களை ஒரு கிறிஸ்தவ இனமாக உருவாக்குவதில் பெரும் பங்கு வகித்தார்.

இவரைப் போலவே 'ஸ்லாவ்கோராத்' முகாமில் கைதியாக இருந்து கொண்டிருந்த அருள் தந்தை அன்டான் ஷெகாவிகஸ் என்பவரும் அந்த சமயத்தில் அந்தப்பகுதியில் கிறித்தவ நெறிகளைப் பரப்புவதில் முக்கியப் பங்காற்றினார். புனித தெரேசா தேவாலயச் சபையின் உறுப்பினர்களான மரியா டைசர், யுஜினியாபுக், எல்லா லோன்வெபர், எல்லா மக்கர், ரெஜினாமேர், அடால்ப் ரஸ்பேன், கிளாரா லாங், அலெக்ஸாண்டர் பில்மேன், தாமஸ் ஸ்மன்ஸ், கான்ஸ்டன்னடள் ரொமஷ் ஆகியோருட்பட மற்றும் பலரும் மிகுந்த ஆர்வத்துடனும், கத்தோலிக்க இன மக்களின் அழைப்புக்கு மதிப்புக் கொடுத்து சேவை செய்யத் தயாராகவும் இருந்தனர். கிராஸ்னோமிஸ்க், ஷெர்பக்தி போன்ற கிராமங்களில் சேவைகளும் பிரார்த்தனைக் கூட்டங்களும் நடத்தப்பட்டன.

1978ஆம் ஆண்டில் பவ்லோதார் புனித தெரேசா தேவாலயம் பதிவு செய்யப்பட்டு லட்வியாவின் பாதிரியார் அருட்தந்தை பிரான்ஸஸ் மெர்னிஸ் அதே ஆண்டில் பொறுப்பேற்று சேவைகளைத் தொடங்கினார்.

பவ்லோதாரில் 1983ஆம் ஆண்டு வரை கிறிஸ்தவ மக்களுக்காக அரும்பாடுபட்ட அருட்தந்தை பிரான்ஸஸ்ஸின் உடல் பவ்லோதார் நகர கல்லறைத் தோட்டத்தில் அடக்கம் செய்யப்பட்டது. 1997ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் புதிதாக ஒரு கட்டிடம் கட்டப்பட்டு புனித தெரேசா தேவாலயம் உருவாக்கப்பட்டது. தேவாலயம் மிக அழகாகவும் கிறிஸ்தவ நெறிகளுக்கு உட்பட்டும் அமைந்திட கட்டிடக்கலை நிபுணர் விக்டர் இவா னிட்ஸ்கி முன்னின்று பணிகளை மேற்கொண்டார்.

புதிய கட்டிடத்தில் புனிதப் பிரார்த்தனைக் கூட்டம் மிகச்சிறப்பாக நடைபெற்றது. தேவாலயத்தின் பராமரிப்பானது, மூனிச்சின் ரெட்டி ராய்ஸ் மற்றும் கிர்ச்செ இன்னோட் போன்ற ஜெர்மனிய கிறிஸ்தவ அமைப்புகளின் நன்கொடைகளைக் கொண்டு செய்யப்பட்டு வருகின்றது.

A.A. ராபர்ட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஹல்ஃப்ஸ்டோர்ப் அனைத்து புனிதர்கள் தேவாலயம்

இலங்கையின் மீயுயர் நீதிமன்றத்திற்கோ, கொழும்பு சட்டக் கல்லூரிக்கோ எப்போதேனும் சென்றிருக்கிறீர்களா? சென்றிருந்தால், ஹல்ஃப்ஸ்டோர்ப் சேர்ச் என்று அழைக்கப்படும் அனைத்து புனிதர்களின் தேவாலயத்தைப் பார்த்திருப்பீர்கள்.

பண்டைய நாட்களில் இப்பகுதி 'ஹல்ஃப்ஸ்டோர்ப்' என அழைக்கப்பட்டது. இந்தியாவில் டச்சு ஈஸ்ட் இந்தியா கம்பெனியின் இயக்குநராகவும் இலங்கையின் தலைமைத் தளபதியாகவும் விளங்கிய ஜெனரல் ஜெரார்ட் பீட்டர்ஜீன் ஹீல்ஃப்ட் என்பவரின் நினைவாகவே இப்பகுதிக்கு இப்பெயர் சூட்டப்பட்டது. இவர் இலங்கையின் மீதான ஒரு படையெடுப்பின்போது கடுமையானதொரு போரில் கொல்லப்பட்டுவிட்டார். ஜெனரல் ஜெரார்ட் இராணுவத்தலைமையகம் அமைத்திருந்த மலைப்பகுதி 'ஹல்ப்ஃஸ்டோர்ப்' என அழைக்கப்படலாயிற்று.

பழைய காலத்தில் ஜெயவர்தனபுர கோட்டேயையும் கொழும்பு கோட்டையையும் இணைக்கின்ற ஒரு பழைமைப் பாதை ஹல்ஃப்ஸ்டோர்ப்பைக் கடந்து சென்றதாகச் சொல்லப்படுகின்றது. இப்போது 'டாம் வீதி' அல்லது 'வெல்ல வீதி' என அழைக்கப்படுவது, அந்தப் பாதையின் பக்கவாட்டுச் சுவராக இருந்ததாகவும் நம்பப்படுகிறது.

வெல்ல வீதியின் உச்சியில் கிறிஸ்தவ சமயத்தின் அடையாளமாக அமைந்தருக்கிறது அனைத்து புனிதர்களின் தேவால யம். சட்ட அலுவலகங்கள் மற்றும் இதர புராதனக் கட்டிடங்களுக்கிடையே இந்தத் தேவாலயம் மறைந்து கவனிக்கப்படாத ஒன்றாகக் காணப்பட்டாலும், இதன் சரித்திரம் நூற்று நாற்பத்தைந்து வருடங்களுக்குப் பின்னால் செல்கின்றது.

தற்போது தேவாலயம் இருக்கின்ற இடத்தில் 1815 ஆம் ஆண்டில் கத்தோலிக்க குருமார்களுக்கான பயிற்சிக்கூடம் ஒன்று இயங்கி வந்தது. அச்சமயத்தில் இலங்கையில் குடிமைப் பொறியாளராகப் பணிபுரிந்த ஜெ. எப்.சர்ச்சில் என்பவரது திட்டத்தின்படி பொதுப் பணித்துறை 1865ஆம் ஆண்டில் இந்தத் தேவாலயத் தைக் கட்டியது. தேவாலயம் கட்டி முடிக்கப்பட்டு புனிதப்படுத்தும் நிகழ்ச்சியானது நவம்பர் முதலாந் திகதி 1865ஆம் ஆண்டு, அதாவது அனைத்துலக ஆவிகள் தினத்தன்றே நடைபெற்றது.

இத்தேவாலயமானது காலனி ஆதிக்கத்தின்போது பெரும்பாலும் குடும்பத் தேவாலயமாகத் தான் இருந்தது என அருட்தந்தை ரஞ்சித் பெரேரா தெரிவித்திருக்கின்றார். அப்போது புகழ் பெற்றிருந்த உபயசேகர மற்றும் பண்டாரநாயக குடும்பங்களைச் சார்ந்தவர்களே இத் தேவாலயத்தின் அறங்காவலர்களாக இருந்திருக்கிறார்கள்.

ஹல்ஃப்ஸ்டோர்ப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவாலயம் 'கொதிக்' கட்டிடக்கலைக்கு, அதாவது, நுணுக்கமான சிற்பக் கலை வடிவங்கள் அமைந்த தேவாலயங்களுக்கு எடுத்துக்காட்டாகவும் கட்டிடம் முழுவதும் கலை நுணுக்கங்கள் நிரம்பப் பெற்றதாகவும் உள்ளது. கொதிக் கட்டிடக் கலைப் பாணிக்கே உரித்தான கூர்மையான வளைவுகள், அடுக்கடுக்கான சுவர்கள் முதலியவற்றோடு காணப்படுகிறது இத்தேவாலயம்.

இருபதாம் நூற்றாண்டுக்கு முன்பாக, கொதிக் பாணியிலான தேவாலயங்கள் ஐரோப்பாவில் ஒரு நகரத்தைக் குறிக்கின்ற அடையாளமாக இருந்துள்ளது.

மற்ற கட்டிடங்களுக்கெல்லாம் மேலாக உயர்ந்து ஒன்றிரண்டு கோபுரங்களுடன் வானுயர்ந்து நின்ற இந்தத் தேவாலயங்கள் நகரவாசிகளின் உள்ளங்களைக் கவர்ந்திருந்தன. அதுபோலவே ஹல்ஃப்ஸ்டோர்ப் தேவாலயமும் வெகு தூரத்திலிருந்து பார்த்தாலே தெரிகின்ற அளவுக்கு உயர்ந்து காணப்படுகிறது.

ஆலயத்தின் பெரிய வண்ணங்களால் உருவிழைத்த கண்ணாடிகள் இயேசு பிரானின் புனிதப் பிறப்பின் முக்கியத்துவத்தை விளக்குகின்றது. அத்தோடு மேலும் ஒரு உருவிழைத்த கண்ணாடி ஜன்னல் ஆலயத்தின் இடது புறத்தில் உள்ளது.

இத்தேவாலயத்தில் உள்ள அனைத்துத் தளவாடங்களும் நூற்று நாற்பத்தைந்து ஆண்டுகள் பழையன. இவற்றில் அழகுபடுத்தப்பட்ட குருமேடை, சாய்மான இருக்கைகள், பலிபீடம், பித்தளைப் பொருட்கள் முதலியன அடங்கும். எல்லா தளபாடங்களும் பிரம்மிப் பூட்டும் நுண்ணிய மர வேலைப்பாடு களைக் கொண்டுள்ளன.

விளக்குகள் பொருத்தப்பட்ட தொங்கு காற்றாடிகள், கூரைகளில் மலர்கள் தொங்கு வதைப்போன்று காட்சியளிக்கின்றன.

திருமுழுக்குச் சாதனமும், கழுகு போன்ற அமைப்புடைய பைபிள் வைக்கும் புத்தகத் தாங்கியும் ஆலயத்தின் உள்ளே இருக்கின்ற முக்கியமான புராதன நினைவுப் பொருட்கள்.

## ஆண்டவரே உம்மைப் புகழ்கின்றேன்

★ உண்மையாகவே நேர்மையாளருக்குக் கைமாறு உண்டு. எனவே

**- உம்மை புகழ்கின்றேன்**

★ என்மக்களே எனக்குச் செவி கொடுங்கள் என்று கூறிய ஆண்டவரே


**- உம்மை புகழ்கின்றேன்**

★ உலகனைத்திலும் உன்னதரானவர் நீரே

**- உம்மை புகழ்கின்றேன்**

★ சீயோன் நகர வாயில்களை விரும்புகிறவரே

**- உம்மை புகழ்கின்றேன்**



தேவாலயத்தின் சுவர் ஓவியங்கள் அனைத்தும் கண்ணையும் மனதையும் கவர்வனவாகவும் எல்லாமும் இருபதாம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகவும் விசுவாசிகளால் அவசியம் காணப்பட வேண்டியவையாகவும் இருக்கின்றன. தேவாலயத்தின் முதல் குருவான டயஸ் பண்டாரநாயக தொடர்ந்து பதினெட்டு ஆண்டுகள் தேவாலயச் சேவையில் இருந்திருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

- ஜோன் அறிவானந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








விவரணம், விளையாட்டு, அரசியல்,

பொழுதுபோக்கு

மற்றும் பல அம்சங்களுடன்...

வீ

VIDEOS




www.virakesari.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Home Builder*
*a complete guide for an outstanding house*



**Gardening & Landscaping**






**Interior Decorating**





**Construction & Architecture**

& Many more interesting Topics to turn your house a home

Available at Cargills & Keells Supermarket

for more information please contact

Praveen - 077 4080038

*A Home Improvement Companion* **An Express Publication**


இந்த இதழ் எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் (சிலோன்) லிமிட்டெட்டாரால் கொழும்பு-14, கிராண்ட்பாஸ் வீதி, 185ஆம் இலக்கத்தில் 2012 ஆம் ஆண்டு ஜூலை மாதம் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org